4858

29

# உவமைத் தொடர்கள்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

தொகுப்பாசிரியர்:

**சதா. நடராசா**

ஏ.எம்.ஐ.ஈ.ரி.(இலண்டன்), ஏ.ஐ.ஈ.ஈ.ஈ.

JPL
C4858

**1990**

KOHA
JPL

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# உவமைத் தொடர்கள்

பொது சன நூலகம்
24 DEC 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

KOHA JPL

124076

4858 cc

தொகுப்பு ஆசிரியர்:

**சதா. நடராசா**

*ஏ.எம்.ஐ.சி.ரி (இலண்டன்), ஏ.ஐ.சி.சி.சி*

**1990**

124076 cc

2
494.811

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# முன்னுரை

நம் பழந்தமிழ் நூல்களிலும், பிற்காலத் தமிழ் பேரறிஞர்கள் எழுதிய உரைநடை நூல்களிலும், பேச்சுவழக்கிலும் ஆயிரக்கணக்கான உவமைகள் வழங்கப்பெறுகின்றன. இந்நூல் பாடசாலை மாணவர்களுக்கும், பொதுவாகத் தமிழிற் சொற்பொழிவு ஆற்றுவார்க்கும், திருந்திய உரைச் செய்யுள் இயற்றுவார்க்கும் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. பாடசாலை ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை இந்நூலை வாங்குமாறு தூண்டி எம்மை ஊக்குவிக்குமாறு பணிவன்புடன் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மேலும் எமது இந்த முயற்சியைப் பாராட்டி, ஊக்குவித்து ஆசியுரை வழங்கிய யாழ்ப்பாண மாவட்ட கல்வி பணிப்பாளராகிய மதிப்பிற்குரிய உயர்திரு. இ. சுந்தரலிங்கம் அவர்களுக்கு எமது உள்ளங்கனிந்த நன்றிக்கடனைச் செலுத்துகின்றோம். இந்நூலை அழகாக அச்சிட்டுத்தந்த மட்டுவில் திருக்கணித அச்சகத்தாருக்கும் எமது உள்ளங் கனிந்த நன்றி உரித்தாகுக.

மீசாலை வடக்கு,
மீசாலை.
14 06-90.

சதா. நடராசா
தொகுப்பு ஆசிரியர்

# ஆசியுரை

இ. சுந்தரலிங்கம் கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாண கல்வி மாவட்டம்.

சாவகச்சேரிப் பட்டினத்தின் வடபாலே அமைந்து மதுரமான மாங்கனிகளை மக்களுக்கு வழங்கும் வனப்புமிக்க மீசாலை என்கின்ற அறிவாளர்கள் வாழும் கிராமத்தில் மதுரமான கல்வியை மாணவர்கள் காலாகாலம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனும் பெருநோக்குடன் இலைமறை காய் போல் பிரமச்சாரியம் அனுட்டித்து சதா கல்வித்தொண்டு ஆற்றிவரும் பெரியார் சதா. நடராசா அவர்கள் 'உவமைத் தொடர்கள்' எனும் நூலை தனது தளரா மனத்தினால் அயராது சேகரித்துத் தொகுத்து மாணவ உலகத்துக்கு வழங்க முனைவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். தமிழ் உணர்வு குன்றி, தமிழ்ப்பண்பாடுகளை மறந்து முதியோர் கூறும் உவமைகளை கேட்கப், படிக்க, வாய்ப்பிலா விருப்பா மாணவர்களுக்கு வாழ்க்கை எனும் கடலில் பயணம் செய்ய உதவும் தெப்பமாக இவ்வுவமைத்தொடர் நூல் அமைந்திருத்தலினால் ஒவ்வொரு பெற்றோரும் தமது வீட்டில் ஒளிவீசி வளர்கின்ற குழந்தைகளுக்கு வாழ்வில் பெறவேண்டிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பாக இந்நூலை வாங்கி பிள்ளைகளைப் படிக்க வைத்தல் வேண்டும். இதே போன்று தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் எல்லாம் கல்வி வழங்கும் கல்வி நிறுவனங்களின் தலைவர்களெல்லாம் இந்நூலை வாங்கித் தங்கள் தங்கள் நூலகங்களில் வைத்து தாம் பெற்ற இவ்வனுபவங்களை இவ்வையகமும் பெறவைக்க வேண்டுமென விநயமாக வேண்டுகிறேன்.

இந் நூல் மாணவ உலகுக்குச் சிறந்த சேவையாற்ற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இ. சுந்தரலிங்கம்.

# உவமைத் தொடர்கள்

## அ

1. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை போல.
2. அக்காள் இருக்கிறவரையில் மச்சான் உறவு போல.
3. அக்குத் தொக்கு இல்லாதவனுக்குத் தூக்கம் இல்லாதது போல.
4. அக்காள் உடைமை அரிசி தங்கச்சி உடைமை தவிடு போல.
5. அக்கா வீட்டில் அரிசி கொடுத்து உண்ணுவதைப்போல
6. அக்கிரகாரத்து நாய் கூட ஆசாரம் பேசுவது போல.
7. அக்கிரமமான ஊரிலே கொதிக்கிறமீன் சிரிக்கிறது போல.
8. அகத்தின் அழகு முகத்தில் தெரிவது போல.
9. அகல இருந்தால் என்றும் உறவாயிருப்பது போல.
10. அகலா தணுகாது தீக்காய்வார் போல.
11. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல.
12. அகல உழுகிறதை விட ஆழ உழுவது மேலானது போல.
13. அகம் குளிர முகம் மலருவதைப் போல.
14. அகராதி படித்தவனுக்கு முன் எதிர்த்துப் பேசுபவனைப் போல.
15. அகமுடையான் இல்லாமல் குடும்பம் நடவாதது போல.
16. அகதிக்கு அரசபோகம் ஏற்பட்டது போல.
17. அகப்பட்டதைச் சுருட்டும் கள்வனைப் போல.
18. அகப்பட்ட கள்வனுக்கு அஷ்டமத்தில் சனி பிடித்தது போல.
19. அகப்பை குறைந்தால் கொழுப்பு எல்லாம் அடங்குவது போல.
20. அகலக் கால் வைத்து ஆபத்தைத் தேடுவது போல.
21. அகப்பை பிடிக்கும் கை அகிலத்தையும் ஆளுவது போல.
22. அகங்காரத்தின் முடிவு அழிவைக் கொண்டு வருவது போல.

23. அகோர வெயிலில் தான் நிழலின் அருமை தெரிவதைப் போல.
24. அச்சில்லாத தேர் போல;
25. அச்சமில்லாது அம்பலம் ஏறுவது போல,
26 அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாதது போல.
27. அசைந்து தின்கிற ஆனை போல.
28. அஞ்சிலே வளையாதது ஐம்பதில் வளையாதது போல.
29. அஞ்சினவனைக் குஞ்சும் வெருட்டுவதைப் போல.
30. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய் போல.
31. அஞ்சாறு அரிசிக்குக் கொதி பெரிது போல.
32. அட்டமத்துச் சனியை விலக்கு வாங்கினாற் போல;
33. அட்டமி நவமியில் தொட்டது துலங்காதது போல.
34. அட்டாலும் பால் சுவையிற் குன்றுதது போல.
35. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்குப் போல.
36. அடக்கம் உடையார் அறிஞராவது போல;
37. அடக்கமுள்ள மனைவியைக் கணவன் மகிழ்விப்பது போல
38. அடக்கம் ஆயிரம் பொன்னுக்கு சமமானது போல.
39. அடாது செய்பவன் படாது படுவன் போல.
40. அடாணிகாப் பிடாரியைக் கட்டிக் கெட்டான் போல.
41. அடிபட்ட பந்து போல.
42 அடியற்ற மரம் போல.
43. அடியும் நுனியும் தறித்த கட்டை போல;
44. அடியிலிருந்து கரும்பு தின்பது போல.
45. அடி வயிற்றில் இடி விழுந்தாற் போல்.
46 அடிமையின் எலும்புக்கூடு நெருப்பையும் எதிர்த்துப் போராடுதல் போல'
47. அடிநாக்கிலே நஞ்சும் நுனிநாக்கிலே அமுதமும் போல.
48. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருவதைப் போல
49. அடியாத மாடு படியாதது போல.
50. அடிக்கிற கைதான் அணைப்பதைப் போல.
51. அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொள்வது பேசல.

52. அடிபட்ட நாய்க்குத் தடியைக் காட்டினுல் போதும் போல.
53. அடி தெற்றினுல் ஆனையும் சறுக்குவது போல.
54 அடிக்கடி குளித்தாலும் காக்கையின் நிறம் வெள்ளை யாக மாறுதது போல,
55. 'அடி'க்கணக்கில் வரும் கஷ்டம் 'அங்குல'க் கணக்கில் தான் போவது போல.
56. அடிவயிற்றைத் தடவிக் காரியத்தைப் பெறுவது போல.
57. அடிப்பவர் அடித்தால் அம்பியும் நகருவதைப் போல.
58. அடுப்பனலில் வைத்த வெண்ணெயைப் போல.
59. அடுங்காலை நீர்கொண்ட வெப்பம் போல.
60. அடுத்தது காட்டும் பளிங்கு போல.
61. அடுத்துக் கெடுக்கும் கபடனைப் போல.
62. அடுப்பும் நெருப்பும் போல.
63. அடைந்தோரை ஆதரிப்பவனைப் போல.
64. அடைகாத்த பேடு போல.
65. அண்டை வீட்டுப் பார்ப்பான் சண்டை மூட்டித் தீர்ப்பது போல.
66. அண்ணுவி பிள்ளைக்குப் பணம் பஞ்சம் இல்லாதது போல
67. அண்ணன் தம்பி உதவுகிறுர் போல,
68. அணில் தள்ளி, தென்னை சாய்ந்த கதை போல.
69. அணில் பிள்ளைக்குக் கனி அரிதில்லாதது போல.
70. அணுக ஊறும் சிற்றின்பம் போல.
71. அணு மலையானது போல.
72. அணை கடந்த வெள்ளம் போல.
73. அணைந்து போன விளக்கை மீண்டும் ஏற்றுவதைப் போல.
74. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராதது போல.
75. அணைக்கிற கை தான் அடிப்பது போல;
76. அத்தி பூத்தாற் போல.
77. அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்க்கின் அத்தனையும் புழுவாய் இருப்பது போல.

78. அதிகாரி வீட்டில் திருடித் தலையாரி வீட்டில் ஒழித்து வைத்தது போல.

79. அதிட்டம் அதிட்டத்தையே ஆதரிப்பது போல.

80. அதிகாரம் இல்லாவிட்டாலும் பரிகாரம் வேண்டுவது போல.

81. அரச வீட்டுக் கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மியை உடைத்தது போல.

82. அதிக மணல் ஒரு கப்பலையே மூழ்கடிப்பது போல.

83. அதிக வேகம் அதிக தளர்ச்சியை அளிக்கிறது போல.

84. அதிகமாகக் கத்துகிற சமுதை குறைவாகவே உண்ணுவது போல.

85. அதிகமாகக் கசக்கிப் பிழிந்த தோடம்பழரசம் கொஞ்சம் கசக்கத்தான் செய்கிறது போல.

86. அதிட்டம் மூடர்களுக்கு அனுகூலம் செய்கிறது போல.

87. அதிர்ச்சி வைத்தியம் செய்வது ஆபத்தானது போல.

88. அதிட்டக்காரன் தொட்டால் அத்தனையும் பொன்னுவது போல.

89. அந்தி இருளில் ஆந்தை விழிப்பது போல.

90. அந்தி அங்காடிக் கடை போல்.

91. அந்தி காலத்துத் தாமரை போல்.

92. அந்தி மழை அழுதாலும் விடாதது போல,
அந்தி மழை சந்தி சிரிப்பது போல.

93. அந்தப் பருப்பு இங்கே வேகாதது போல.

94. அப்பன் அருமை அப்பன் மாண்டால் தான் தெரிவது போல.

95. அப்பியாச வித்தைக்கு அழிவில்லாதது போல.

96. அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் சம்பந்தம் இல்லாதது போல.

97. அப்பன் தெருத் தெருவாக பிச்சை எடுக்க, மகன் ஊரவருக்குத் தர்மம் செய்வது போல,

98. அப்பன் பணமானாலும் அளவறிந்து செலவு செய்ய வேண்டியது போல.

99. அபசாரி ஆடப்போனாலும் முகராசி வேண்டுவதைப் போல.
100. அம்பட்டன் குப்பையைக் கிளறுவது போல.
101. அம்பேறுண்ட மயில் போல.
102. அம்மி துணையாக ஆறு இறங்கியது போல.
103. அம்பலத்தில் கட்டுச் சோற்றை அவிழ்த்தது போல்.
104. அம்மா கெட்ட கேட்டுக்கு முக்காடு தேவையற்றது போல.
105. அம்மான் மகள் என்றாலும், சீதனம் இல்லாமல் கலியாணம் செய்ய மாட்டாதவன் போல.
106. அமாவாசை வந்தால் ஐயர் பாடு கொண்டாட்டம் போல,
107. அரசனை நம்பிப் புருஷனைக் கைவிடுவது போல.
108. அரங்கின்றி வட்டாடியது போல.
109. அரம் பொருத பொன் போல;
110. அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர் போல.
111. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழிபோல.
112. அரசில்லாத நாடு ஆலைக்கழிந்தாற் போல
113. அரசமரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றைத் தடவிப் பார்த்தவள் போல.
114. அரசனின் முகத்தில் அருள் சுரக்க வேண்டியது போல.
115. அரச மரத்தைப் பிடித்த சனியன் பிள்ளையாரையும் சேர்த்துப் பிடித்தது போல.
116. அரசன் மகளானாலும் அகமுடையானுக்குப் பெண்டாட்டி போல.
117. அரசன் செய்வதே தீர்ப்புப் போல.
118. அரசன் ஆண்டியானாலும் பண்பு தவறமாட்டாமை போல.
119. அரங்கத்தில் நடக்கப் பேசவதை அந்தரங்கத்தில் ஒத்திகை பார்க்கும் கலைஞனைப் போல.
120. அரிசி அள்ளுகிற காகம் போல.

121. அரிசி அரைக் கொத்தானாலும் அடுப்புக்கட்டி மூன்று வேண்டுவது போல.
122. அரிசிக்குத் தக்கவிலை அகமுடையானுக்குத் தக்க வீராப்புப் போல.
123. அருஞ்சுரத்தின் மரம் போல.
124. அருமையற்றோர் வீட்டில் எருமையும் குடியிருக்காதது போல.
125. அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் போல.
126, அரும்பசிக்கு உதவாத அன்னம் போல.
127. அருளில்லாருக்கு அவ்வுலகு இல்லாதது போல.
128. அரைக்கிணறு தாண்டியவனைப் போல.
129. அரைப் படிப்பைக் கொண்டு அம்பலம் ஏறுவது போல.
130, அரைப்பணம் கொடுத்து அழச்சொல்லி, ஒரு பணம் கொடுத்து ஓயச்சொன்னது போல.
131. அரைக்காசுக்கு அழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராதது போல.
132, அரைக்குடம் தளம்பும், நிறைகுடம் தளம்பாதது போல
133. அரைப்பணத்திலே கல்யாணம், அதிலும் கொஞ்சம் வாணவேடிக்கை போல.
134. அரைகுறைப் படிப்பு ஆபத்தானது போல.
135. அரைப்படி அரிசியே அன்னதானம், விடியும் மட்டும் மேளதாளம் போல.
136; அரைப்பவன் அரைத்தால் அடுப்புச் சாம்பலும் மருந்தாவது போல.
137. அரையிலே புண்ணும் அண்டையிலே கடனும் ஆகாதது போல,
138. அரைக்காசை ஆயிரம் பொன்னுக்கும் பெண்டாட்டி போல;
139. அரைக் காசுக்குக் குதிரை வாங்கவும் வேண்டும் ஆற்றைக் கடக்கப் பாயவும் வேண்டுவது போல.
140. அல்லி இரவிலே மலருகிறதைப் போல

141. அல்லித் தண்டு போல.
142. அலை தடுத்தாலும் ஆறு கடலுக்குள் பாய்வதைப் போல
143. அலைமீது பிறந்த நிழல் போல.
144. அலை புனலுள் நிற்பினும் தாமரை ஈன்ற இலையின் கண் நீர் இல்லாதது போல.
145. அலைகடலுக்கு அணைபோட முடியாதது போல.
146 அலையற்ற நீருக்கடியில் ஆழ்ந்த நீரோட்டம் இருப்பது போல.
147. அலை ஓய்ந்து தலைமுழுக முடியாதது போல.
148. அலசரக் கோலம் அள்ளித் தெளித்தது போல.
149 அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்தவன் போல.
150. அவமானம் செய்து வெகுமானம் கொடுத்தது போல.
151. அவசரத்தில் சுடமுடியாத துப்பாக்கி போல.
152. அவளைக் காணவில்லை, பிள்ளைகள் எத்தனை என்று கேட்டால் போல.
153. அவனவன் தலைவிதியை யாராலும் மாற்றமுடியாதது போல.
154. அவிழ்த்துக் கொட்டிய நெல்லிக்காய் மூட்டை போல.
155. அழகுக் கழகு செய்வது போல.
156. அழகுள்ள மங்கைக்கு அணிந்த அணிகலன் போல.
157. அழகெலாந் திரண்ட பசும்பொற் பாவை போல.
158. அழலருகே சேர்ந்த மலர் போல.
159. அழன்மண்டு போழ்தின் அடைந்தவர்கட்கெல்லாம் நிழல் மரம் போல.
160. அழகு இளமையில் வளர்பிறை போல.
161. அழகு முதுமையில் தேய்பிறை போல.
162. அழகு இருந்தாலும் அதிட்டம் இருக்க வேண்டுவது போல.
163. அழகுக்கு அணிந்த ஆபரணம் ஆபத்துக்கு உதவுவது போல.
164. அழகாபுரி கொள்ளையாளலும் அதிட்ட ஈனனுக்கு ஒன்றுமில்லாதது போல.
165. அழகு என்பது அன்றலர்ந்த மலர் போல.

166, அழகான வார்த்தைகள் முட்டாள்களைக் களிப்படையச் செய்வது போல.
167. அழகிய முகத்தை விடச் சிறந்த புகழ் மேலானது போல.
168. அழகு விரைவில் மடிந்து விடுவதைப் போல.
169. அழகிய பட்டுத்துணி சீக்கிரமே அழுக்காகி விடுவது போல.
170. அழகிய பெண்ணும், கூரிய கத்தியும் எந்நேரமும் ஆபத்தைத் தருவது போல.
171. அழகாபுரிக்குப் போனலும் அதிட்டயீனனுக்கு ஒன்றும் கிடைக்காதது போல.
172. அழகு சோறு போடாதது போல.
173. அழகுக்கு இட்டால் ஆபத்துக்கு உதவுவது போல.
174. அழகிலே பிறந்த பவளக்கொடியைப் போல;
175. அழிந்த கொல்லையிலே குதிரை மேய்ந்தாலும் கழுதை மேய்ந்தாலும் ஒன்றேதான் போல.
176. அழிவழக்குச் சொன்னவன் பழிபொறுக்கும் மன்னவன் போல
177. அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுவது போல.
178. அழுகுரலோசை கேட்ட அந்தணர் போல.
179. அழுத பிள்ளை பால் குடித்தது போல,
180. அழுவார் அற்ற பிணமும் ஆற்றுவார் அற்ற கடலையும் போல.
181. அழுக்கடைந்த கந்தல் துணியில் பணத்தைக் கட்டி வந்தாலும் சிறந்த வரவேற்பு உண்டு போல.
182. அழுது அழுது புரண்டாலும் மாண்டவன் மீளமாட்டான் போல.
183; அழுக்கை அழுக்குக் கொல்லுவது போல;
184. அழையாத வீட்டிற்கு நுழையாத சம்பத்தியைப் போல
185. அழையாத வீட்டிற்கு நுழைந்த விருந்தாளியைப் போல.

186. அழையாத விருந்தாளிக்கு எங்கே அமருவது என்பது புரியாதது போல.
187. அள்ளிக் கொடுத்தால் சும்மா அளந்து கொடுத்தால் கடன் போல.
188. அள்ளாமல் குறையாதது போல.
189. அள்ளிக் கொடுத்தவன் கெடாதது போல.
190. அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும், ஞாயிறும் போல.
191 அளகேசன் ஆனாலும் அளவு அறிந்து செலவு செய்ய வேண்டியது போல.
192. அளக்கிற நாழி அகவிலை தெரியாதது போல.
193. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு போல.
194. அளவோடு பெற்று, வளமாய் வாழ்வது போல.
195. அற்ற குளத்துக் கொட்டியும் ஆம்பலும் போல.
196 அற்ற குளத்து அறுநீர்ப் பறவை போல்.
197. அற்ப அறிவு அல்லற்கிடம் போல
198 அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுப்பது போல.
199. அற்பர் சகவாசம் பிராண சங்கடத்தை ஏற்படுத்துவது போல.
200. அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பது போல,
201. அற்றது பற்றெனில் உற்றது வீடு போல.
202. அற்பன் பணம் படைத்தால் வைக்க வகை அறியாதவன் போல.
203. அறக்கப் பறக்கப் பாடுபட்டவனுக்குப் பாயில்லாதது போல.
204 அறத்தாற்றின் வழங்காதான் ஆக்கம் போல்.
205 அறத்தால் வரும் இன்பம் போல.
206 அறப்படித்தவன் அங்காடி போனால், விற்கவும் மாட்டான் கொள்ளவும் மாட்டான் போல.
207. அறமுறுக்கினால் அற்றுப் போவது போல.



124076

208. அறப்படித்த மூஞ்சூறு கழனிப் பானையில் விழுந்தது போல.
209. அறவடித்த மூன்சோறு கழுநீர் பானைக்குள் விழுவது போல.
210. அறச் செட்டு முழு நட்டமாக்குவது போல.
211. அறி தோறும் அறியாமை கண்டது போல.
212. அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுது தொலைப்பது போல.
213. அறிய அறியக் கெடுவார் இல்லாதது போல
214. அறிவனிடத்தில் புத்தி கேட்காமலிருப்பது போல.
215. அறிவில்லார் தமக்கு ஆண்மையில்லாதது போல.
216. அறிவுடையாரை அரசனும் விரும்புவது போல.
217. அறிந்து கெடுவதை விட அறியாமல் கெடுவது மேலானது போல.
218. அறிவு கெட்டவனுக்கு யார் சொல்லியும் கேட்காதது போல.
219. அறிவுக்கு எல்லை இல்லாதது போல.
220. அறிவு வீழ்ச்சியடையும் போது, அதிசயம் வளருகிறது போல.
221. அறிவில்லாத ஆர்வம் போல.
222. அறுகயிறூசல் போல.
223. அறுத்த கோழி துடிக்குமாப் போல.
224. அறுபத்து நாலடிக் கம்பத்திலேறி ஆடினாலும், அடியிலிறங்கித் தான் பிச்சை எடுப்பது போல,
225. அறுப்புக் காலத்தில் எலிக்கு ஐந்து பெண்சாதி இருப்பது போல.
226. அறுகங்காட்டை தொட்டவனும் ஆனமாட்டை விற்றவனும் கெட்டது போல.
227. அறுகங்கட்டையும் ஆபத்துக்கு உதவுவது போல.
228. அறுக்க வறும் பூம்பாளை போல.
229. அறுத்தவள் ஆண் பிள்ளை பெற்ற கதை போல.

230. அறுத்த விரலுக்குச் சுண்ணும்பு கொடுக்காதவனைப் போல.

231. அறையில் ஆடியல்லவோ அம்பலத்தில் ஆடவேண்டுவது போல.

232. அன்றிலும் பேடும் போல.

233. அன்னநடை நடக்கப் போய்த் தன்நடையும் இழந்தாற் போல.

234. அன்பற்ற மாமியாருக்கு கால் பட்டாற் குற்றம் கை பட்டாற் குற்றம் என்பது போல.

235. அன்னப்பாலுக்குச் சிங்கியடித்தவன் ஆவின் பாலுக்குச் சர்க்கரை தேடுவதைப் போல.

236. அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் ஆகாதவன் போல

237. அன்னம் இட்டவர் வீட்டில் கன்னம் இடுவது போல.

238. அன்பு இல்லாத மாமியைக் கும்பிட்டாலும் குற்றமாவது போல.

239. அன்னையின் அருமை அன்னை இறந்தால் தெரிவது போல.

240, அன்னதானத்துக்குச் சிரமதானம் செய்யும் சுயநலவாதியைப் போல.

241, அனுமார் இலங்கையில் சீதையைத் தேடினது போல.

## ஆ

242. ஆக்குகிறவள் சலிக்கும் போது அடுப்பு பாழாவது போல.

243. ஆக்கினவனுக்கு ஒரு அகப்பை சாதம் கூட இல்லாதது போல.

244. ஆகாயத்திற் கட்டிய கோட்டை போல,

245. ஆகாத வேளையில் பிள்ளை பிறந்தால் பஞ்சாங்கம் பார்த்த பார்ப்பானைக் கூறை கூறுவது போல.

246. ஆகாயத்துக்குப் பந்தல் போட முயல்பவனைப் போல.

247. ஆகும் காய் என்பது பிஞ்சிலே தெரிவது போல.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

248. ஆசிரியன் இல்லாத வகுப்பில் மாணவர்களின் கொண் டாட்டம் போல.
249. ஆசை காட்டி மோசம் செய்பவன் போல.
250. ஆசையை நீக்கிவிட்டு மனைவியைப் பார்ப்பது போல.
251. ஆட்டுக்கிடையில் ஓநாய் புகுந்தாற் போல.
252. ஆட்டைக்காட்டி வேங்கையைப் பிடிப்பது போல.
253. ஆட்டைப் பிடிக்க இடம் கொடுத்தால், மாட்டைப் பிடிக்க ஆசைப்படுகிறவன் போல;
254. ஆட்டு உரம் ஓராண்டு நிற்கும், மாட்டு உரம் ஆறாண்டு நிற்பது போல.
255. ஆட்டுக்கடா பின்வாங்குவது பாய்ச்சலுக்கு அடை யாளம் போல.
256. ஆடமாட்டாதவன் அரங்கம் கோணல் என்றது போல
257. ஆடிய காலும் பாடிய நாவும் சும்மா இராதது போல.
258. ஆடி ஓய்ந்த பம்பரம் போல.
259. ஆடிமிதியாத கொல்லையும், ஆளனில்லாத பெண் ணும் பாழானது போல.
260. ஆடி ஓய்ந்த கூத்தாடி போல.
261. ஆடி ஓய்ந்த அம்சாரி போல.
262. ஆடிக்காற்றில் உதிரும் சருகு போல.
263. ஆடின ஊஞ்சல் தன்னிலையில் நிற்பது போல.
264. ஆடிச்செவ்வாயைத் தேடிப் பிடிப்பது போல.
265. ஆடு கொழுந்தால் இடையனுக்கு இலாபம் கிடைப் பது போல.
266. ஆடு திருடின கள்வனைப் போல.
267. அடும் பெண்டிர் அணியே போல்.
268. ஆடுமாடு இல்லாதவன் அடைமழைக்கு இராசாபோல:
269. ஆடு நனைகிறதென்று ஓநாய் விழுந்து விழுந்து அழு தது போல.
270 ஆடும் மயிலின் தோகையைத் தூண்டிப்பது போல.
271. ஆடு குழை தின்றாற் போல,
272. ஆடும் கறக்குந் திரிகையும் போல்.

273. ஆடு பிடிக்கப் போய் கரடி அகப்பட்டது போல.
274. ஆடு மேய்ந்த காடு போல.
275. ஆடையைத் தின்றால் வெண்ணெய் இல்லாதது போல.
276. ஆண்டிகள் கூடி மடம் கட்டினது போல.
277. ஆண்டி சொல் அம்பலம் ஏறாதது போல.
278. ஆண்டி வேடம் போட்டும் அலைச்சல் தீராதது போல.
279. ஆண்டி அன்னத்துக்கு அலைகிறது போல.
280. ஆண்டவன் அருள் இருந்தால், ஆண்டியும் அரசன் ஆவது போல.
281. ஆணிவேரில் வெந்நீரை ஊற்றிவிட்டு செடிக்குப் பந்தல் போடுவது போல.
282. ஆந்தை விழிக்கிறது போல.
283 ஆப்பதனைப் பிடுங்கி விட்ட பேய்க் குரங்கு போல.
284. ஆபத்துக்குப் பயந்து ஆற்றிலே நீந்தினது போல.
285. ஆலம் திடரில் ஏறினாற் போல.
286. ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதுமானது போல.
287. ஆய்ச்சி நூற்கிற நூல் ஐயர் அரைச்சாண் கயிற்றுக்குத்தான் காணுவது போல.
288. ஆயிரம் பாட்டிற்கு அடிதெரியும் என்றாற் போல.
289. ஆயிரம் பாம்பினுள் ஒரு தேரை அகப்பட்டாற் போல.
290. ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்போல.
291. ஆயிரம் பொன் பெற்ற குதிரைக்கு அரைப்பணத்துக்குச் சவுக்குப் போல.
292. ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன் போல்.
293. ஆயிரம் நோயாளியைக் கண்ட அரை வைத்தியன் போல.
294 ஆயிரம் பொன்னை அரைக்காசு ஆக்குகிற பெண்டாட்டி போல.
295. ஆயும் மலர்த்தேன் வண்டருந்துவது போல.

296. ஆர்கடன் இருந்தாலும் மாரிகடன் கூடாதது போல.

297. ஆரியக் கூத்தாடினுலும் காரியத்தில் கண்ணுயிருப்பது போல;

298. ஆரும் இல்லாத பெண்ணுக்கு, அண்டைவீட்டுக்காரன் மாப்பிள்ளை போல.

299. ஆல்விழுது, தாங்கி நிற்பது போல.

300. ஆல்மரம் பழுத்தால் பறவைக்குக் கொண்டாட்டம் போல.

301. ஆலயத்தை இடித்து அன்னதானம் பண்ணியதைப் போல.

302. ஆலம் வித்துப் போல.

303. ஆலயம் அழிந்தாலும் ஆண்டவன் அழியமாட்டாதவன் போல.

304. ஆலையில் அகப்பட்ட கரும்பு போல.

305. ஆலை இல்லாத ஊரிலே இலுப்பைப்பூச் சர்க்கரை போல.

306. ஆலையில் அரைபட்ட அரிசி திரும்பி முழுசாக மாட்டாதது போல,

307. ஆலும் வேலும் பல்லுக்குறுதி போல.

308. ஆவிற்கு இருகோடு போல

309. ஆவேறு உருவினதாயினும் ஆபயந்த பால்வேறு உருவினவல்லாதது போல.

310. ஆவேறு நிறமானாலும், பல்வேறு நிறமாக மாட்டாதது போல.

311. ஆழ்ந்த கடலுக்குள் புதைந்து கிடக்கும் முத்தைப் போல்.

312. ஆழ்ந்த குளம் தன்னுடைய ஆழத்தைக் காட்டாமல் அமைதியாயிருப்பது போல,

313. ஆழம் தெரியாமல் காலை விட்டுக் கொண்டது போல

314. ஆள் கொஞ்சமானாலும் ஆயுதம் மிடுக்காய் இருப்பது போல.

போதசன நூல்
யாழ்ப்பாணம்

315. ஆள் இளப்பமாயிருந்தால் எருது மச்சான் முறை கொண்டாடுவது போல
316. ஆள் கண்டு ஏய்க்கும் ஆலங்காட்டு நரி போல.
317. ஆள வந்தவனை அடிமை செய்தது போல.
318. ஆளில்லாத மங்கைக்கு அழகு பாழாவது போல.
319. ஆளுக்கு ஏற்ற சோடி, சாடிக்கு ஏற்ற மூடி போல.
320. ஆளுக்கு தகுந்த வீராப்பு, மார்புக்குத் தகுந்த மாராப்புப் போல.
321. ஆளுக்குத் தக்கபடி வேடம் போடுகிறவனைப் போல.
322. ஆளுக்குத் தக்கபடி ஒத்து ஊதுகிறவனைப் போல.
323. ஆளுக்குத் தகுந்த வேலை, வேலைக்குத் தகுந்த கூலி போல.
324. ஆளைப்பார்த்தால் அழகுபோல் வேலையைப் பார்த்தால் இழவு போல.
325. ஆளைப் பார்த்துக் கூலியைக் குறைப்பது போல.
326. ஆற்றங்கரையின் மரம் போல.
327. ஆற்றில் கரைத்த புளி போல.
328. ஆற்றில் போட்டுக் குளத்தினில் தேடியதைப் போல.
329. ஆற்றைத் தாண்ட முடியாதவன் ஆழியைத் தாண்ட முயன்றவாறு போல.
330. ஆற்றிலே போட்டாலும் அளந்து போட வேண்டுவது போல.
331. ஆற்றிலே ஒரு கால், சேற்றிலே ஒரு கால் வைத்தவன் போல.
332. ஆற்றில் விழுந்த உடல் கடலுக்குச் சொந்தமாவது போல.
333. ஆற்று மணலிலே கிடந்து புரண்டாலும் ஒட்டுகிறது தான் ஒட்டுவது போல.
334 ஆற்று மணலை அளவிட முடியாதது போல.
335. ஆற்றிலே தண்ணீர் போனால் தான், வாய்க்காலில் தண்ணீர் வருவது போல.
336. ஆற்றிலே வந்தது, மடுவிலே போனது போல.

337. ஆறிடுமேடும் மடுவும் போல.
338. ஆறின கஞ்சி பழங்கஞ்சியானது போல.
339. ஆறின புண்ணில் அசடு நிற்கிறது போல.
340. ஆறுபோவதே போக்கு அரசன் சொல்வதே தீர்ப்பானது போல.
341. ஆறு நிறையத் தண்ணீர் போனாலும் நாய் நக்கித்தான் குடிப்பது போல.
342. ஆறுதல் கூறுபவருக்குத் தலைவலி வராதது போல.
343. ஆறுமாதம் பழுத்தாலும் விளாமரத்தில் வெளவால் சேராதது போல.
344. ஆனது நமக்கு, ஆகாதது பிள்ளையாருக்கு என்பது போல.
345. ஆனமாட்டை விற்றவனும், அறுகங்காட்டைத் தொட்டவனும் கெட்டது போல.
346. ஆனைக் கூட்டத்திற் சிங்கம் புகுந்தது போல:
347. ஆனை தன் கோட்டிடை வைத்த கவளம் போல்.
348. ஆனை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டது போல.
349. ஆனையும் ஆனையும் மோதும் போது இடையில் அகப்பட்ட கொசுகு போல.
350. ஆனைவாயிலே போன கரும்பு போல.
351. ஆனை கட்டக் கயிறு தானே எடுத்துக் கொடுப்பதைப் போல.
352 ஆனை தின்ற விளாங்கனி போல.
353. ஆனை இருந்து அரசாண்ட இடத்தில், பூனை இருந்து புலம்பி அழுதது போல.
354. ஆனையைக்கொண்டு தான் ஆனையைப் பிடிப்பது போல.
355. ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன் பெறுமதியானது போல.
356. ஆனைக்கு ஒருகாலம் இருந்தால் பூனைக்கு ஒருகாலம் வருவது போல.
357. ஆனைக்கும் அடி சறுக்குவது போல.

358. ஆனை கண்ட பிறவிக் குருடர்கள் போல.
359. ஆனை மிதித்துப் பிழைக்காதவர் போல.
360. ஆனை மேய்கிற காட்டில் ஆட்டுக்குட்டிக்குத் தலை கிடைக்காதது போல.
361; ஆனை அசைந்து தின்னுவது போல,
362. ஆனை இறந்தாலும் ஆயிரம் பொன் பெறும்தியானது போல.
363. ஆனை படுத்தால், குதிரை உயரமாகத் தோன்றுவது போல;
364. ஆனையின் பசி சோளப் பொரியால் அடங்காதது போல

## இ

365. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை போல,
366. இங்கே தலையைக் காட்டி அங்கே வாலைக் காட்டுகிறவனைப் போல.
367. இஞ்சி தின்ற குரங்கு போல.
368. இஞ்சி இலாபம் மஞ்சளிலே எடுப்பது போல.
369. இட்டு வைத்தால் தின்னத் தெரிவது போல,
370. இடந்தெரியாதிருந்த புதையல் எதிர்வரப் பெற்றவர் போல.
371. இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குபவன் போல.
372. இடாது பலன் தேடுங் கிராதர் போல.
373. இடி இடித்து மழை ஓய்ந்தது போல.
374. இடிகரை வாழ் மரம் போல.
375; இடித்த புளி போல.
376. இடியோசை கேட்ட நாகம் போல.
377. இடிவிழுந்த மரம் போல.
378. இடித்தவள் புடைத்தவள் இங்கேயிருக்க, எட்டிப் பார்த்தவள் கொட்டிக்கொண்டு போனது போல.
379. இடிக்குக் குடை பிடிக்கமுடியாதது போல;
380. இடுவார் பிச்சையைக் கெடுவார் கெடுப்பது போல.

381. இடுப்பொடிந்த கோழிக்கு உரல் குழியை கைலாசம் போல.

382. இடுவது பிச்சை, பெறுவது மோட்சம் போல:

383. இடுக்கண் தலைவந்தக்கண்ணும் அரிமா கொடிப்புற் கறிக்காதது போல்

384. இடையன் கரடிமேல் ஆசைப் பட்டது போல.

385. இடையன் குட்டியைத் தோளில் போட்டுக் கொண்டு ஊரெங்கும் தேடினது போல.

386. இணங்கினால் இனிப்பு, பிணங்கினால் கசப்பு ஏற்படுவது போல.

387. இணை பிரிந்த அன்றில் போல.

388. இந்திரனைச் சந்திரன் இலையாலே மறைப்பது போல.

389. இந்த மடம் இல்லாவிட்டால் இன்னொரு சந்தை மடத்தை நாடுவது போல.

390. இரண்டு கண்ணும் இல்லாதவனை நல்ல கண்ணன் என்பது போல்.

391. இரண்டு ஓடத்தில் கால் வைத்தவனைப் போல.

392. இரவும் பகலும் மாறி மாறி வருவது போல்.

393. இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாட்டம் போல.

394. இரவல் சோறு பஞ்சத்தைத் தாங்காதது போல.

395. இரண்டு முயல்களை விரட்டிச் சென்றால் எதையுமே பிடிக்க முடியாதது போல.

396. இரண்டு கறுப்புகள் சேர்ந்தாலும் ஒரு வெள்ளையை உருவாக்க முடியாதது போல.

397. இரண்டு கையும் சேர்ந்து தட்டினால் தான் ஓசை உண்டாவது போல.

398. இரண்டு பக்கமும் கூர்மையாயிருக்கும் கத்தியை கவனமாகக் கையாள்வதைப் போல.

399. இரவற் சிலையை நம்பி இருப்புக் கந்தையை எறிந்தது போல.

400. இரவல் வாங்கிய ஆடை அணிகள் சரியாகப் பொருந்தாதது போல.

401. இராசா மகள் ஆனாலும் கொண்டவனுக்கு மனைவியாவது போல.
402. இருதலைக் கொள்ளி எறும்பு போல.
403. இருதலைப்புள்ளின் ஒருயிர் போல்.
404. இருநாய்க்கு இட்ட எலும்பு போல.
405. இருப்புக் கோட்டையும் கற்கதவும் போல.
406. இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மை போல.
407. இரும்புத் தூணை எறும்பு அரித்தாற் போல.
408. இருளும் ஒரு காலம், நிலவும் ஒரு காலம் போல.
409. இருளில் இருப்பவன் வெளிச்சத்தை எதிர்பார்ப்பது போல.
410. இருட்டில் இடறி விழுவதைப் போல.
411. இருக்க இடம் கொடுத்தால், படுக்க இடம் கேட்பார் போல.
412. இருளன் பிள்ளைக்கு எலி பிடிக்கத் தெரிவதைப் போல.
413. இருக்கிறவன் ஒழுங்காக இருந்தால், இரைக்கிறவனும் செவ்வையாய் இரைப்பான் என்பது போல.
414. இரும்புத் துண்டை விழுங்கி விட்டு இஞ்சிச்சாறு குடித்தாலும் பலன் அளிக்க மாட்டாதது போல.
415. இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இருக்க மாட்டாதது போல.
416. இரும்பை எலிகடிக்க மாட்டாதது போல.
417. இரை விழுங்கின பாம்பு போல.
418. இல்லாள் இல்லாத வீடு போல.
419. இலவு காத்த கிளி போல.
420. இலைமறை காய் போல.
421. இலை பழுப்பானாலும் குலைபழுப்பாகாது போல்.
422. இலையும் பழுப்பும் எங்கும் உண்டு போல.
423. இவள் விலைமோரில் வெண்ணெய் எடுத்துத் தலைமகனுக்குக் கல்யாணம் பண்ணுவது போல்.
424. இழந்த பொருள் எதிர்வரப் பெற்றவர் போல.
425. இழிந்தவை காமுறும் ஈப்போல.

426. இழுக்கல் உடையுழி ஊற்றுக் கோல் போல்.

427. இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று போல்.

428. இள ஞாயிறு போல்.

429. இளந்திங்களின் வளர் நிலவு போல.

430. இளமை இருக்கும் போது பெண்ணை நாடும் ஆடவனைப் போல.

431. இளமையிற் கல்வி சிலையின் எழுத்தைப் போல.

432. இளம் பசிக்காறனும், புளிச்ச ஏப்பக் காரனும் ஒத்துப் போக முடியாதது போல.

433. இளகினாற் கூழ், இறுகினால் களி போல்.

434. இளங்கன்று பயமறியாதது போல.

435. இளமையிற் கல்வி எப்பொழுதும் நிலைத்து நிற்பது போல.

436. இளைத்தவன் பெண்சாதி, எல்லோருக்கும் மச்சினியாவது போல.

437. இளைத்தவன் தலையில் ஈரும் பேனும் போல்.

438. இறங்கு பொழுதில் மருந்துக்குடி போல்.

439. இறக்கை முளைத்த குஞ்சு கூட்டில் தங்க மாட்டாதது போல.

440. இறகு முற்றிய பறவை தன் வயிற்றைத் தான் பார்ப்பது போல.

441. இறுப்பானுக்குப் பணமும் கிடையாது; உழைப்பானுக்குப் பெண்ணும் கிடையாது போல்.

442. இறைக்க இறைக்கக் கிணறு ஊறுவது போல.

443. இறையாத கேணி நாறுவது போல.

444. இறைக்க ஊறும் மணற்கேணி போல.

445. இன்சுவைத் தேனை ஈக்கள் சுற்றுவது போல.

446. இன்று இலை அறுத்தவன் நாளைக்கு குலை அறுப்பான் போல்.

447. இன்று குண்டூசியைத் திருடுபவன், நாளை பெரிய பொருளையே திருடுவான் போல்.

448. இனம் இனத்தை நாடுமாப் போல.

449. இனம் பிரிந்த மான் போல.
450. இனத்தை இனம் காக்கும் போல.

ஈ

451. ஈக்கு விஷம் தலையில் போல.
452. ஈசல் புற்றில் கரடி வாய் வைத்தாற் போல.
453. ஈ ஏறி மலை குலுங்காதது போல.
454. ஈட்டி எட்டின மட்டும் பாயும், பணம் பாதாளம் வரை பாய்வது போல.
455. ஈயான் தோட்டத்து வாழை இரண்டு குலை தள்ளு வது போல.
456. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வது போல.
457. ஈயத்தைக் கண்டு இளித்த பித்தளை போல.
458. ஈயும் எறும்பும் இனிப்பை நாடுவது போல.
459. ஈரத்தைப் பிழிந்து விட்ட வேட்டி போல.
460. ஈரைப் பேனாக்கிப் பேனைப் பெருமாள் ஆக்குகிறது போல.
461. ஈரம் இல்லாத இடத்தில் ஈ மொய்க்காதது போல.
462. ஈரச்சேலையைப் போட்டுக் கழுத்தை அறுப்பவனைப் போல.
463. ஈன்றோன் நீத்த குழவி போல்.
464. ஈன்ற புலி போல்.

உ

465. உகிர்ச் சுற்றின் மேல் அம்மி விழுந்தது போல்.
466. உகிர்ச் சுற்றில் உலக்கை விழுந்தாற்போல்.
467. உட்சுவரிருக்கப் புறச்சுவர் பூசுவார் போல.
468. உடலும் நிழலும் போல.
469. உடல் இரண்டு உயிர் ஒன்று போல்.
470. உடுக்கை இழந்தவன் கை போல.
471. உடும்புப் பிடி போல.

472. உடும்புக்கு இரண்டு நாக்குப் போல.
473. உடும்பு போனால் போகிறது, கை வந்தால் போதும் போல
474, உடைந்துழிக் காகம் போல
475. உடையவன் பாராத வேலை போல்
476, உடையவன் பாராத வேலை ஒரு முழங்கட்டை போல
477. உடைந்த கண்ணாடி மீண்டும் முழுமையாகாதது போல
478. உடுப்பது சந்தை, நடப்பது தந்தக்குறடு போல
479. உண்டு கொழுத்தால் நண்டு வளையில் இராதது போல
480. உண்டில்லை யென்னும் குமிழியைப் போல
481. உண்ணுதற்குத் தகுதியில்லாத வாவியில் நீர் நிரம்பி யிருத்தல் போல
482. உண்கிற சோற்றில் மண்ணை வாரிப் போட்டது போல
483. உண்ணப்படையுண்டு, வெல்லப்படையில்லை போல்
484. உண்டது தான் ஏப்பம் வருவது போல
485. உண்ணாத நஞ்சு கொல்லாதது போல
486. உதவாத பழங்கலமும், ஓசையில்லாத வெண்கலமும் போல
487. உதைக்கிற மாடு விலை போகாதது போல
488. உதைக்கிறமாடு கறக்காதது போல
489. உப்புத் தின்றவன் தண்ணீர் குடிப்பான் போல்
490. உப்பிருந்த பாண்டம் போல
491; உப்பொடு நெய் பால் தயிர் காயம் பெய்திடினும் கைப்பறுப் பேய்ச் சுரையின் காய் போல்
492. உப்பிட்ட வரை உள்ளளவும் நினைப்பது போல
493. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே போல்
494; உப்பிட்டுக் கெட்ட மாங்காயைப் போல
495, உப்பிடாமல் கெட்ட தேங்காயைப் போல.
496. உப்பு இல்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை போல.
497. உமிகுத்திக் கை சலித்தாற் போல.
498. உயிரும் உடலும் போல;

499. உயிரைப் பிரிந்த உடம்பு போல.
500. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக மாட்டாதது போல.
501. உயரம் குறைந்த வேலியைச் சுலபமாக தாண்டி விடுவது போல.
502. உயர்ந்த இடங்களில் செங்குத்தான சரிவுகள் உண்டு போல்.
503. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்பமாட்டாதது போல.
504. உரலுக்கு ஒரு பக்கம் இடி: மத்தளத்திற்கு இருபக்கமும் இடி போல்.
505. உரிய காலத்தில் பெய்த மழை போல்.
506. உருத்திராக்கப் பூனை உபதேசம் பண்ணினது போல.
507. உருவி பெருந் தேருக்கு அச்சாணி போல.
508. உறுகி கண்ட பூனை உறியை, உறியைத் தாவுவதைப் போல.
509. உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போல;
510. உலக்கைக்குச் சேலை கட்டிவிட்டால் உற்றுப் பார்ப்பவரும் உண்டு போல்.
511. உலைப்படு மெழுகு போல,
512. உலைப்பெய்து அடுவது போல.
513. உவர் நிலத்தில் இட்ட விதையும் சமர் இடத்தில் சென்ற சேனையும் இரண்டாம் பட்சம் போல்;
514. உழுத நாளில் ஊருக்குப் போய், அறுக்கிற நாளில் அரிவாள் கொண்டு வந்தாற் போல,
515. உழுத புலத்தில் நெல்லுப் போல;
516. உழுந்துக் குவியலுட் புகுந்த மையுருண்டை போல.
517. உழுகிற மாடு உள்ளூரில் விலைப்படுவது போல.
518. உழுகிற மாடு எந்த நிலத்தையும் உழுவது போல.
519. உழவு ஒழிந்த மாடு பட்டிப் புறத்திலே காணுவது போல;
520. உழவுக்குப் பின்னேயும் ஊணுக்கு முன்னேயும் போல

521. உழுத மாட்டை நுகத்தால் முகத்தில் அடித்தாற் போல.
522. உள்ளங்கை நெல்லிக்கனி போல.
523. உள்ளீடில்லாப் பதர் போல.
524. உள்ளீடில்லாப் புழலையான மூங்கிற் கோல் போல.
525. உள்ளங்கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேவைப்படாதது போல,
526. உள்ளம் தியெரிய உதடு பழஞ்சொரிவது போல.
527. உள்ளூரில் விலைப்படாத மாடு அயலூரிலும் விலைப் படாதது போல.
528. உள்வீட்டுக் கடனும் உள்ளங்கை சிரங்கும் கெட்டது போல.
529. உள்ளூர் மருமகனும், உழுகிற மாடும் சரி போல.
530. உள்ளூரிலே ஓணான் பிடிக்காதவன் அயலூரிலே உடும்பு பிடிக்க மாட்டாதவன் போல.
531. உள்ளங்கைப் பாற்சோற்றை விட்டுப் புறங்கையை நக்கியது போல.
532. உறங்கி விழிப்பது போல.
533. உறைமோருக்கு இடமில்லாத வீட்டில் விலைமோருக்குப் போனாற் போல.
534. உறியிலே வெண்ணெய் இருக்க ஊரெங்கும் நெய்க்கு அலைந்தது போல.
535. உறியிலே தயிர் இருக்க ஊரெங்கும் மோருக்கு அலைந்தது போல.
536. உறங்கும் நரிக்கு உணவு கிடைக்க மாட்டாதது போல.

ஊ

537. ஊசல் கயிறு அற்றாற் போல.
538. ஊசியும் சரடும் போல்.
539. ஊசியின் வழியே செல்லுந் நூல் போல.
540. ஊசியைக் காந்தம் இழுப்பது போல.
541. ஊசி போகிறது தெரிந்து, பூசணிக்காய் போகிறது தெரியாதது போல.

542. ஊசி போகிற இடம் பார்ப்பார், உலக்கை போகிற இடம் பாராதவர் போல.

543. ஊனொடுங்க வீறொடுங்குமாறு போல.

544. ஊத்தை போகக் குளியாதவன் போல.

545 ஊத்தைப் பல்லுக்கு விளாங்காய் சேர்ந்தாற் போல

546. ஊமையும் ஊமையும் மூக்கைச் சொறிந்தாற் போல.

547. ஊமை கண்ட கனவு போல.

548. ஊமை செய்யும் பிரசங்கத்தைச் செவிடன் கேட்டது [போல.

549. ஊருணி நீர் நிறைந்தாற் போல.

550. ஊர் கூடிச் செக்குத் தள்ளினாற் போல.

551 ஊர்க்கடனும் உள்ளங்கைச் சிரங்கும் போல.

552. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்ப்பது போல.

553. ஊரிலே கல்யாணம், மார்பிலே சந்தனம் போல.

554. ஊரில் எளியாரை வண்ணான் அறிவது போல.

555, ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டியைப் போல.

556. ஊருக்கு ஒரு தேவடியாள் எல்லோருக்கும் ஆடமாட்டாதவள் போல.

557, ஊர் அறிந்த பார்ப்பானுக்குப் பூநூல் தேவைப்படாதது போல.

558. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் போல.

559. ஊருக்கு ஒத்த உபசாரம் போல.

560. ஊர் ஊராகச் செல்லும் வியாபாரி. தன் சுமையைத் தானே தான் சுமக்க வேண்டும் போல.

561. ஊரெல்லாம் உறவு, ஒரு வாய்ச்சோறில்லாதது போல

562. ஊன்றக் கொடுத்த தடி மண்டையைப் பிளந்தது [போல.

563. ஊழித் தீப்போல.

## எ

564. எகிறி எகிறிக் குதித்தாலும் எட்டு, பத்தாகாது போல.

565. எச்சிலைக்கு நாய் அடித்துக் கொண்டு நிற்கிறது போல.



48578

566. எச்சிலைத் தின்று ஏப்பம் இட்டாற் போல
567. எச்சிற் கல்லைக்கு இச்சகம் பேசுகிறது போல.
568. எச்சிற் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுக்க மாட்டாதவன் போல.
569. எச்சில் இலை நாயானாலும் எசமானிடத்தில் விசுவாசம் உள்ளது போல.
570. எச்சில் இலை கண்ட நாய் போல.
571. எங்கே புகையுண்டோ அங்கே நெருப்பு இருக்கிறது போல.
572. எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லாதது போல.
573. எங்கும் மடமாய் இருக்கிறது, இருக்கிறதற்குத் தான் இடம் இல்லை என்பது போல.
574. எங்கே அன்பு இருக்கிறதோ அங்கே நம்பிக்கையும் உண்டு என்பது போல.
575. எங்கே திருடினாலும் கன்னக்கோல் வைக்க ஓர் இடம் வேண்டும் என்பது போல.
576. எங்கே தவறு இல்லையோ அங்கே மன்னிப்பும் தேவை இருக்காதது போல.
577. எங்கே போர்முரசு முழங்குகிறதோ, அங்கே சட்டவிதிகள் மௌனமாகின்றன என்பது போல.
578. எடுத்து வைத்தால் சுமக்கத் தெரிவது போல.
579. எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டது போல.
580. எட்டின மட்டும் கத்தி வெட்டுவது போல.
581. எட்டி பழுத்தாற் போல்.
582. எட்பகவு போல்.
583. எட்டாப்பழம் புளிக்கிறது போல.
584. எட்டி பழுத்தாலும் இனிக்காதது போல.
585. எடுக்கிறது பிச்சை, ஏறுகிறது பல்லக்கு என்பது போல.
586. எடுப்பாரும் பிடிப்பாரும் உண்டானால் இளைப்பும், தவிப்பும் வருவது போல.

587. எட்டினால் குடுமியைப் பிடி, எட்டா விட்டால் காலைப் பிடிப்பது போல.
588. எட்டு வருடத்து எருமைக்கடா ஏரிக்குப் போக வழி தேடுவது போல.
589. எட்டு உடையவன் பத்து உடையவனை வெல்ல முடியாதது போல.
590. எடுப்பார் கைப்பிள்ளை போல.
591. எடுத்துவிட்ட எருது உழைக்கமாட்டாதது போல.
592. எட்டிக்குப் பால் வார்த்து வளர்த்தாலும் தித்திப்பு உண்டாகாதது போல.
593. எட்டுக்குஞ்சு பிடித்தாலும் சட்டிக் கறி ஆகாதது போல.
594. எண்ணெய்க் குடத்தைச் சுற்றும் எறும்பு போல்.
595. எண் இல்லாதவர் கண் இல்லாதவர் போல.
596. எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்பது போல.
597. எண்ணிச் செய்கிற செட்டியைப் போல.
598. எண்ணுமறி செய்கிற மட்டியைப் போல.
599. எண்ணுமற் செய்யும் வேளாண்மையைப் போல.
600. எண்ணிச் செய்யும் செட்டுப் போல.
601. எண்ணெய் செலவொழிய பிள்ளை பிழைத்தபாடு இல்லை என்பது போல.
602. எண்ணெய்க் குடம் உடைந்தாலும் அழுகிறான், தண்ணீர்க் குடம் உடைந்தாலும் அழுகிறான் என்பது போல.
603. எண்ணெய் இல்லாமல் விளக்கு எரியமாட்டாதது போல.
604. எய்தவன் இருக்க அம்பை நோவது போல.
605. எதார்த்தவாதி வெகுசன விரோதி என்பது போல.
606. எதிர்த்தவன் ஏழை என்றால் கோபம் சண்டாளன் என்பது போல.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

607. எதை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்க வேண்டும் என்பது போல

608. எத்தனை புடம் போட்டாலும் இரும்பு பசும் பொன்ஞகாதது போல.

609. எத்திலே பிள்ளை பெற்று இரவிலே தாலாட்டினவள் போல.

610. எதிர் நீச்சல் அடிப்பது போல;

611. எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம் என்பது போல.

612. எதுவுமே இல்லாதவன் திருப்தியற்றவனுக இருப்பதைப் போல.

613. எதையும் சிறப்பாகச் செய்கிறவனுக்குக் களைப்புத் தோன்ருதது போல.

614. எதையும் அரைகுறையாகச் செய்யவேண்டாமென்பது போல.

615. எதையும் சரிபார்ப்பதில் காலம் தாழ்த்தக்கூடாதது போல,

616; எதையும் தேடாமல் கண்டு பிடிக்க முடியாதது போல.

617• எது கிடைத்தாலும் திருப்தியடையாதவர்களுக்கு, எவ்வளவு கொடுத்தாலும் போதாதது போல.

618. எதை விலைக்கு வாங்கினுலும் ஓர் எளிய பரிசுக்கு அது ஈடாகாதது போல.

619. எத்தி எத்திப் பிழைப்பவன் கடைசியில் ஏமாந்து போவதைப் போல.

620. எது அதிகமாகக் கிடைக்கிறதோ, அதற்கு விலை குறைவு என்பது போல.

621; எது அளவோடு கிடைக்கிறதோ அதற்கு விலை அதிகம் என்பது போல.

622. எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காய் தெங்காகாதது போல.

623. எந்த வாக்குப் பொய்த்தாலும் சந்த வாக்குப் பொய்க்காதது போல.

624. எந்தக் கலையைக் கற்க விரும்பினாலும் அதற்கொரு ஆசான் தேவைப்படுவது போல.

625. எந்த நண்பனுமே அந்தரங்க நண்பன் ஆகமாட்டாதவன் போல.

626. எந்த விரோதியுமே ஆத்ம விரோதி ஆகமாட்டாதது போல.

627. எந்த மனிதனாலும் கல்லிலே நார் உரிக்க முடியாதது போல.

628. எந்த இடத்தில் பிணம் இருந்தாலும் அங்கே கழுகுகள் ஒன்றுகூடுவது போல.

629. எந்தப் பெண்ணிடமும் இரகசியத்தைச் சொல்லக் கூடாதது போல.

630. எந்த விளக்கின் நிழலும் பூமியில் விழமாட்டாதது போல.

631. எமன் கையில் அகப்பட்ட உயிர் போல.

632 எமன் கையில் இருந்து மீண்டது போல.

633. எமனை யாராலும் ஏமாற்ற முடியாதது போல.

634. எப்பொழுதோ பார்க்கப்படுவது, நினைவில் நிற்காதது போல.

635. எய்தவன் இருக்க அம்பை நோவது போல.

636. எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளினது போல.

637. எரிகின்ற புண்ணில் ஈட்டி வைத்தாற் போல

638. எரிப்படு பஞ்சு போல்

639. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினது போல.

640. எரிமண்டிக் கானந் தலைப்பட்ட தீப்போல்.

641. எரிமுன்னர் வைத்தூறு போல்

642. எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்குவது போல.

643. எரிகிற விளக்கானாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டுவது போல

644. எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம் போல.
645. எருமை மாட்டின்மேல் மழை பெய்தது போல
646. எருமை வாங்குமுன்னே நெய்விலை கூறுவது போல
647. எருது நோய் காக்கைக்குத் தெரியாதது போல.
648. எருமைச் சாணி ஓமத்திற்கு ஆகாதது போல
649. எருதின் புண்ணுக்குச் சாம்பல் மருந்தாவது போல
650. எருது இளைத்தால் எல்லாம் இளைக்கும் போல்
651. எருது கொழுத்தால் தொழுவத்தில் இராதது போல.
652. எருதும் வண்டியும் ஒத்தால் மேடுபள்ளம் தெரியா தது போல
653. எருது வாங்குமுன்னே புன்செய்கைக்கு உழு என்கிறது
654. எரும்ணம் இல்லாத பயிரைப் போல [போல.
655. எரு இல்லா வயலைப் போல
656. எருவுக்குப் போனவன் இளையாளைக் கைப்பிடித்தாற் போல
657. எருவுக்குப் போனவன் எலுமிச்சம்பழம் எடுத்தது போல
658. எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி இருப்பது போல்
659. எலிக்குப் பயந்து வீட்டுக்குத் தீ வைத்தது போல்
660. எலியும் பூனையும் போல
661. எலுமிச்சங்காய்க்குப் புளிப்பு ஏற்றுகிறது போல்
662. எலி அழுதாலும் பூனை விடாதது போல
663. எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம் போல்
664. எலிவளையானாலும் தனிவளை வேண்டுவது போல
665. எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்க மாட்டா தது போல
666. எல்லாரும் பல்லக்கு ஏறினால் பல்லக்கைத் தூக்க யாரும் இல்லாதது போல
667. எலி பெருத்தாலும் பெருச்சாளி ஆகமாட்டாதது போல

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

668. எல்லாம் சொல்லும் பல்லி கழுநீர் பானையில் துள்ளி விழுவது போல
669. எல்லா இறைச்சியுமே மான் இறைச்சி அல்லாதது போல.
670. எலும்பு கடிக்கிற நாய் பருப்புத் தின்னாதது போல
671. எலுமிச்சஞ் செடிக்கு எருப்போட்டாற் போல
672. எல்லாவற்றையும் பார்க்கிற கண், தன்னை மட்டும் பார்க்க முடியாதது போல.
673. எல்லோருமே பேச ஆரம்பித்தால் கேட்பதற்கு ஆள் இருக்காதது போல
674. எலி போல் இருந்து புலிபோல் பாய்வது போல
675. எல்லாம் இருக்கிறது பெட்டியிலேயே இலைக்கறி கடைய சட்டி இல்லாதது போல,
676. எல்லாரும் ஏறிவிழுந்த குதிரையிலே, சக்கடத்தாரும் ஏறிச் சறுக்கி விழுந்தாராம் போல.
677. எவ்வளவு பெரிய அடைமழைக்கும் எருமை அசைந்து கொடுக்காதது போல.
678. எவ்வளவு கொடுத்தாலும் பிச்சைக்காரனுக்குத் திருப்தி இருக்காதது போல.
679. எவ்வி எவ்விக் குதித்தாலும், எட்டக்கூடியது தான் எட்டுவது போல.
680. எழுதுங்கால் கோல்காணாக் கண்ணே போல்
681. எழுத்தறியாதவன் ஏட்டைச் சுமந்தது போல.
682. எழுதாக்கடன் அழுதாலும் தீரமாட்டாதது போல;
683. எழுதியவன் ஏட்டைக் கெடுத்தது போல.
684. எழுதி வழங்கான் வாழ்க்கை கழுதை புரண்ட களம் போல்.
685. எழுதிப் பாராதவன் கணக்கு கழுதை மேய்ந்த களம் போல்;
686. எழுதுவதற்கு உதவாத பேனை போல.
687. எள்ளுக்காய் பிளந்தாற் போல.
688. எள்ளுக்குள் எண்ணெய் போல,

689. எள்ளும் பச்சையரிசியும் போல.
690. எளியவன் பெண்டாட்டி எல்லோர்க்கும் மைத்துனி போல.
691. எள்ளு என்கிறதற்கு முன்னே எண்ணெய் கொண்டு வருகிறான் போல.
692. எள்ளு எண்ணெய்க்கு உலருகிறது போல;
693. எறும்புப் புற்றில் பாம்பு குடிகொள்வது போல.
694. எறும்பு ஊரக் கல்லுந் தேய்வது போல,
695. எறும்பு ஊர இடங்கொடுத்தால், எருதும் பொதியும் உள்ளே செலுத்துவது போல
696. எள்ளுக்குத் தக்க எண்ணெய் போல.
697. எள்ளுத் தின்றால் எள் அளவு பசி தீருவது போல;

## ஏ

698. ஏகாதசிக்கு மா இடித்தாற் போல.
699. ஏட்டுச் சுரைக்காய் போல.
700. ஏட்டிலே சர்க்கரை என்று எழுதி நக்கினால் தித்திக்காதது போல.
701. ஏணி கோணி நாரத்தங்காய் போல்
702. ஏணியில் ஏறிப்போகிறவன், கீழே இருந்துதான் தொடங்க வேண்டும் போல்.
703. ஏதிலார் குற்றம் போல்.
704. ஏதென்று கேட்பாருமில்லை எடுத்துப் பிடிப்பாருமில்லை போல்.
705. ஏமாந்தவன் ஏமாந்து கெட்டான், ஏமாற்றியவன் இடிவிழுந்து கெட்டான் போல்.
706. ஏமாற்றுக்காரனை ஏமாற்றுவது ஏமாற்றல்ல போல்.
707. ஏரி நிறைந்தால் கரை கசியும் போல்.
708. ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல் செய்கிறவனுக்கு தலைச் சுமை போல்;
709. ஏழை அழுத கண்ணீர் போல;
710. ஏறவிட்டு ஏணியை எடுத்தது போல.

711. ஏருமடைக்கு நீர் பாய்ச்சுகிறது போல.
712. ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை போல்.
713. ஏற்றம் உண்டானல் இறக்கமும் உண்டு போல.
714. ஏறுமல் குதிரை கெடும் என்பது போல.
715. ஏறுகிறவன் குண்டியை எட்டுமட்டும் தான் தாங்க முடியும் போல்.
716. ஏவற்பேய் கூரையைப் பிடுங்கியது போல.

ஐ

717. ஐங்காதம் போனாலும் அகப்பை அரைக்காசு போல்
718. ஐங்காயம் போட்டு அரைத்துக் கரைத்தாலும், பேய்ச் சுரைக்குத்தன் நாற்றம் போகாதது போல.
719. ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாதது போல.
720. ஐந்து பணத்துக்குக் குதிரையும் வேண்டும், ஆறு கடக்கப் பாயவும் வேண்டும் போல்.
721. ஐந்தும் மூன்றும் அறிந்தாயிருந்தால் அறியாப் பெண்ணும் கறி சுவையாய்ச் சமைப்பாள் போல்.
722. ஐந்து விரலும் ஒரே மாதிரி இருக்க மாட்டாதது போல.
723. ஐந்து பணத்துக்கு அபசாரி போகிறவன் எண்பது பணத்தைக் கண்டால் ஒப்பந்து இருக்க மாட்டான் [போல்.
724. ஐப்பசி மாத அழுகைத் தூற்றல் போல.
725. ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்கமாட்டாதது போல.
726. ஐயனார் படையில் குயவனார் பட்டதைப் போல.

ஒ

727. ஒக்கலிலே பிள்ளையை வைத்து ஊரெங்கும் தேடினாற் போல.
728. ஒடிந்த கோலானாலும் ஊன்றுகோலாவது போல.
729. ஒட்டைக்குப் பளுவு ஏற்றுகிறது போல.
730. ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டியது போல.

731. ஒரு அச்சிலே உருக்கி வார்த்தாற் போல.
732. ஒரு சிறு மயிரிழக்கினும் மாயுங் கவரிமாப் போல
733. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல.
734. ஒரு நாய் குரைப்பதைக் கண்டு தெருநாய்கள் எல்லாம் சேர்ந்து குரைப்பது போல.
735. ஒருநாவி கூத்துக்கு மீசையைச் சிரைத்தாற் போல்
736. ஒருமைப்பாடில்லாத கூடிபோல.
737 ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை போல.
738. ஒரு கை தட்டி ஓசை எழுப்ப மாட்டாதது போல.
739. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல.
740. ஒரு கட்டு வைக்கோலைத் தண்ணீரில் போட்டு, ஒன்பது பேர் கூடி இழுத்தது போல.
741. ஒரு குருவி இரை எடுக்க, ஒன்பது குருவிகள் வாய் திறப்பது போல.
742. ஒரு சூளைச் செங்கல்லிலே அத்தனையும் வேகாத கல்லைப் போல.
743. ஒரு பணம் கொடுத்து அழச்சொல்லி, ஒன்பது பணம் கொடுத்து ஓயச் சொன்னது போல.
744. ஒரு சோம்பேறி ஆடு தன்னுடைய உரோமங்கள் கனமாக இருப்பதாக நினைத்துக் கொள்ளுவது போல,
745. ஒரு ஏழையின் பசு சாவதும் ஒரு பணக்காரனின் குழந்தை சாவதும் ஒன்றே போல.
746. ஒரு சிறிய ஓட்டை பெரிய கப்பலையே மூழ்கடித்து விடுவது போல,
747 ஒரு பறவையை சத்துவதிலிருந்து தெரிந்து கொள்வது போல.
748. ஒரு மரத்துப் பட்டை வேறொரு மரத்தில் ஒட்ட மாட்டாதது போல.
749. ஒரு செம்மறி ஆடு அகழியைத் தாண்டிக் குதித்தால், எல்லா ஆடுகளுமே அதைப் பின்பற்றுவது போல.
750. ஒரு ஆணி, மற்றொரு ஆணியை அடித்து வெளியேற்றுவது போல.

751. ஒரு முறை பாதிரியானால் என்றுமே பாதிரிதான் போல.
752. ஒருமுறை விலைமகள் ஆகிவிட்டாள் என்றுமே விலைமகள் தானே போல.
753. ஒருவன் விதைக்க வேறொருவன் அறுவடை செய்வது போல.
754. ஒரு பூ மாலையாக மாட்டாதது போல.
755. ஒரு செம்மறியாடு மற்றொரு ஆடு சென்ற வழியையே பின்பற்றுவது போல.
756. ஒரு திருடனை மற்றொரு திருடன் அறிவான் போல.
757. ஒரு பிடி அரிசிக்குப் பார்ப்பான் ஊர்வழி போவது போல.
758. ஒரே கல்லில் இரு மாங்காய் வீழ்வது போல.
759. ஒரே குட்டையில் ஊறின மட்டைகள் போல.
760. ஒவ்வாக் காலத்து உயர்மரம் பழுத்த துவ்வாக் கனி போல்.
761. ஒவ்வொரு பறவையும் தன்கூடுதான் பொன் கூடு என்று நினைப்பது போல.
762. ஒவ்வொரு நாயும் தான் இருக்கும் வீட்டில் தன்னைச் சிங்கமாகத்தான் நினைத்துக் கொள்வது போல.
763. ஒவ்வொரு வழியிலும் சேறும் சகதியும் இருக்கும் போல்.
764 ஒளிமிளிர் கற்களைப் பைம்பொனிற் பதித்தாற் போல.
765. ஒளியைக் கண்ட இருள் போல்.
766. ஒளியைக் கண்ட விட்டிற் பூச்சி போல.
767. ஒளிக்கப் போயும் தலையாரி வீட்டிற்குப் போனது [போல.
768. ஒளி இல்லாத விளக்குப் போல.
769. ஒன்றும் அற்ற அரசன் பன்றி வேட்டை ஆடினான் போல்.

## ஓ

770. ஓசையில்லாத மணி போல.
771. ஓசை பெறும் வெண்கலம் போல.
772. ஓசை பெறா மட்கலம் போல.

773. ஓசையவிந்த பின் ஆடுநுமென்றுற் போல.
774. ஓடி மறைகின்ற மின்னலைப் போல.
775. ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குதல் போல.
776. ஓட்டை நாழிக்குப் பூண் கட்டினது போல்
777. ஓராவிற்கு இருகோடு தோன்றினுற் போல.
778. ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு இலேசு என்பது போல.
779. ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி போல.
780. ஓடும் புளியம்பழமும் போல;
781. ஓடம் வண்டியிலும் ஏறுவதுண்டு வண்டி ஓடத்திலும் ஏறுவதுண்டு போல்;
782. ஓட்டைச் சட்டியானுலும் கொழுக்கட்டை வெந்தால் போதும் போல்.
783. ஓட்டைப் பானையில் தண்ணீர் ஊற்றினது போல.
784. ஓட்டை மணியில் ஓசை இல்லாதது போல;
785. ஓடிப்போன சந்நியாசி அவனிருந்த மடத்தைப் புகழ மாட்டான் போல்.
786. ஓதியமரமும் சமயத்துக்கு உதவுவது போல.
787. ஓநாயை ஓநாய் அறிவது போல.
788. ஓர் ஊர்ப்பேச்சு ஓர் ஊருக்கு ஏச்சு ஆவது போல;
789. ஓரக்கண்ணனைப் பழித்த ஒற்றைக்கண்ணனைப் போல.
790. ஓரச்சிலே உருக்கி வார்த்தாற் போல.
791. ஓருயிரும் ஈருடலும் போல,
792. ஓடுகிற ஆறு ஓடிக்கொண்டே இருப்பது போல.

க

793. கக்கும் பிள்ளை நிச்சயம் நிலைப்பது போல.
794. கசப்பு இனிப்பு ஆகாதது போல;
795. கசக்கும் மருந்து தான் கடுநோயைப் போக்குவது போல.
796. கசக்கி முகர்ந்தால் கஸ்தூரியும் நாறுவது போல.
797. கசப்பதெல்லாம் வேப்பெண்ணெய் ஆகாதது போல.

798. கங்கையிற் படர்ந்தாலும் பேய்ச் சுரைக்காய் நல்ல தாகாதது போல,
799. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகமாட்டாதது போல,
800. கடலைக் கையினால் நீந்திக் கரையேறுதல் போல,
801. கடற்கரை மணலைக் கணக்கிடுதல் போல.
802. கடல் திரையை எண்ணுதல் போல.
803. கடலிடைப் பிறந்த முத்து அக்கடலுக்குப் பயனாகாமை போல.
804. கடலிற் பெருங்காயம் கரைத்தது போல.
805. கடலின் கண்ணே இயங்கும் மரக்கலத்தைப் போல;
806. கடல் உப்பையும் மலை நெல்லையும் கலந்தாற் போல.
807. கடன் பட்டார் நெஞ்சம் போல;
808. கடாக் களிற்றின் மேல் கட்படாம் போல.
809. சடாவும் கடாவும் சண்டை போடும்போது உண்ணி நசுங்கினாற் போல.
810. கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டினாற் போல.
811. கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தாற் போல,
812. கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுக்கிறது போல.
813. கட்டாந்தரை அட்டை போல.
814. கட்டுக்கடங்காக் காளை போல.
815. கட்டிமேற் சிலந்தி எழுந்தாற் போல;
816. கடலுக்குக் கரை போடுவார் போல;
817. கடல் திடலாகும், திடல் கடலாகும் போல்.
818. கடல் மீனுக்கு நீச்சல் பழக்கினாற் போல்.
819. கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி போல்.
820. கடுகத்தனை நெருப்பானாலும் போரைக் கொளுத்தி விடும் போல்.
821. கடுகு சிறுத்தாலும் காரம் இருப்பது போல,

822. கடுகு போன இடம் ஆராய்வர், பூசனிக்காய் போன இடம் தெரியாதது போல.
823. கடலைத் தூர்த்தாலும் காரியம் ஆகாதது போல.
824. கடல்வற்றிக் கருவாடு தின்னலாம் என்று உடல்வற்றிச் செத்ததாம் கொக்கு போல.
825. கடுகு மலையாச்சு, மலை கடுகாச்சு போல்.
826. கடா பின்வாங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம் போல்.
827. கடை அரிசி கஞ்சிக்கு உதவாதது போல.
828. கட்டிக்கொண்டு வரச் சொன்னால் வெட்டிக்கொண்டு வருவான் போல்.
829, கட்டுச்சாதத்தில் எலிக்குஞ்சை வைத்துக் கட்டியது போல.
830. கட்டுப்பட்டாலும் கவரிமான் மயிரால் கட்டுப்பட வேண்டும் போல்.
831, கடைசித்துளி கோப்பையைக் காலியாக்குகிறது போல.
832. கடல் எந்த நதியையும் ஏற்றுக்கொள்ள மறுப்பதில்லை போல்.
833. கட்டிலைத் திருப்பிப் போட்டாலும் தலைவலி தீராதது போல.
834. கட்டுக்கடங்காத குதிரைக்கு கடிவாளம் போட்டால் சரியாய் போகும் போல்.
835. கடுகு போனால் தெரியும், மிளகு போனால் தெரியாதது போல்.
836. கடைசிச் சோற்றுக்கு மோர் தேவைப்படுவது போல,
837. கடும் வெப்பத்தில் தான் குளிரின் அருமை தெரிவது போல.
838. கணக்கன் கணக்கறிவான், தன் கணக்கைத் தான் அறியான் போல்;
839. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போல.
840. கண்கெட்ட குருடர் போல்.
841. கண்டு மறந்த கனவினைப் போல.

KOHA JPL பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

842. கண்ணாடி மண்டிலத்து ஊது ஆவி போல.
843. கண்ணில்லாதவன் கண்ணாடியைச் சுமந்தது போல.
844. கண்ணில்லார் பெற்றிழந்தாற் போல்.
845. கண்ணினைக் காக்கும் இமை போல.
846. கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது போல;
847. கண் பறிகொடுத்துக் கலங்கினாற் போல.
848. கண் குருடானாலும் நித்திரை குறையமாட்டாதது போல;
849. கண் குற்றம் கண்ணுக்குத் தெரியாதது போல.
850. கண்ணிலே குத்தின விரலைக் கண்டிப்பார் ஒருவரும் இல்லாதது போல.
851. கண்ணிலே பட்ட விரல் துண்டிக்கப்படமாட்டாதது போல.
852. கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுத்தது போல.
853. கண் உள்ளமட்டும் பார்வை இருப்பது போல.
854. கண்வலிக்காரனுக்கு விளக்கொளியால் பயனில்லாதது போல.
855. கண்டால் காளி; காணாவிட்டால் மூளி போல்.
856. கண்டால் கட்டாடியார்; காணாவிட்டால் வண்ணான் போல்.
857. கண்டால் மூப்பன்; காணாவிட்டால் பறையன் போல்.
858. கண்டால் பரியாரி; காணாவிட்டால் அம்பட்டன் போல்.
859. கண்டால் பத்தர்; காணாவிட்டால் தட்டான் போல்.
860. கண்டால் ஆசாரியார், காணாவிட்டால் தச்சன் போல்.
861. கண்ணாடிவீட்டில் இருப்பவன் கல் எறியக்கூடாதது போல.
862. கண்டதெல்லாம் ஒடித்தின்னும் ஆட்டைப் போல;
863. கத்தி வைத்திருக்கிறவனுக்குத் தான் கத்தி வெட்டும் போல.
864. கப்பல் போனாலும் துறைமுகம் நிலைத்து நிற்பது போல

865. கப்பல்காரன் வாழ்வு காற்று அடித்தால் போனது போல.

866. கபடச் சிநேகிதனைப் போல.

867. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடுவது போல்.

868. கம்பளி மூட்டை என்று கரடி மூட்டையை அவிழ்த்தது போல.

869. கயிறு இல்லாப் பம்பரம் போல.

870. கயவனுக்கு யோகம் வந்தது போல.

871. கரடி புற்றிலே வாய் வைத்தாற் போல.

872. கரு இல்லாத வித்தையும், குரு இல்லாத சீடனும் போல.

873. கருங்காலிக் கட்டைக்கு வெள்ளிப்பூண் கட்டினது போல.

874. கருடனைக் கண்ட பாம்பு போல.

875. கருப்பங் கொல்லையிலே நெருப்புப்பொறி விழுந்தாற் போல.

876. கருமருந் தரையிற் சிறுபொறி சிதறினது போல.

877. கரும்பாலையிற் பட்ட எறும்பு போல.

878. கரும்பிருக்க இரும்பு கடித்தாற் போல.

879. கரும்பு தின்னக் கைக்கூலி கேட்டாற் போல.

880. கரும்பு தின்னுமல் வேம்பு தின்பது போல.

881. கரும்பூர்ந்த சாறு போல.

882. கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில்மாடம் போல.

883. கரை இழந்த தடாகம் போல்.

884. கரைகாணாத கப்பலைப் போல்.

885. கரிவிற்ற பணம் கறுப்பாய் இருக்கமாட்டாதது போல.

886. கரும்பு சுவை என்று வேரோடு பிடுங்கக்கூடாதது போல.

887. கரு இல்லாத முட்டை போல.

888. கருப்பங்கட்டி ஆதாயத்தை எறும்பு இழுத்துக் கொண்டது போல.

889 கரைப்பார் கரைத்தால் கல்லும் கரைவது போல;
890. கருப்பங்கட்டியிலும் கல் இருப்பது போல.
891. கரையிலே எடுத்தெறிந்த மீனைப் போல.
892. கலங்கரை விளக்கம் போல்.
893. கலப்பாலில் ஒரு துளி நஞ்சு கலத்தல் போல;
894. கலனழிந்த கைம்மையார் பெண்மை நலம் போல.
895. கல்யாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்தாற் போல;
896. கல்லிலே நார் உரிக்கிறது போல.
897. கல்லின் மேலிட்ட கலம் போல.
898. கல்லைக் குத்தி கைநொந்தாற் போல.
899. கல்லாடம் படித்தவனோடு மல்லாடுவது போல்.
900. கல்மேல் எழுத்துப்போல.
901. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகமாட்டாதது போல.
902. கல்லைக்கண்டால் நாயைக் காணாதது போல.
903. கலக்கினும் கடல் சேறு ஆகாதது போல.
904. கலப்பதரைக் குத்தினாலும் அரிசி ஆகாதது போல.
905. கல்லிலே நார் உரிக்கிறது போல.
906 கல்லின் மேல் எய்த அம்புகளைப் போல.
907. கல்லுப் பிள்ளையாரைக் கடித்தால் பல்லுத்தான் உடைவது போல.
908. கல்லும் கல்லும் மோதினால் நெருப்புப் பொறிதான் பறப்பது போல.
909. கல்லால் செய்யப்பட்ட ரோஜாவில் வாசத்தை எதிர் பார்க்கும் மூடனைப் போல.
910. கழுதைக்குக் கடிவாளம் தேவைப்படாதது போல.
911. கழுதை பொதி சுமந்தாற் போல,
912. கழுதைப்பால் குடித்தவன் போல்.
913. கழுதையும் குதிரையும் பிணைத்தாற் போல,
914. கழுதையைக் கட்டி ஓமம் வளர்த்தது போல.
915. கழுதைக்குக் கரும்பின் சுவை தெரியாதது போல.
916 கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல;

917. கழுதைக்குக் கற்பூரவாசனையின் அருமை தெரியாதது போல.

918. கழுதைக்குச் சேணம் கட்டினாலும் குதிரையாகி விடமாட்டாதது போல.

919. கழுதைக்கு உபதேசம் காதிலே ஏறாதது போல.

920. கழுதைப் புண்ணுக்குத் தெருப்புழுதி மருந்தாவது போல.

921. கழுதையின் காதிலே கட்டெறும்பை விட்டது போல.

922. கழுத்து வெளுத்தாலும் காகம் கருடன் ஆகமாட்டாதது போல.

923. கழுதைக்குக் கஸ்தூரி வாசனையின் அருமை தெரியாதது போல.

924. களைபிடுங்காத பயிர் காற்பயிர் என்பது போல.

925. கள்ளன் கள்ளனைப் பார்த்து கள்ளா என்று கூப்பிட்டதைப் போல.

926. கள்ளிக்கு வேலியும், கழுதைக்கு கடிவாளமும் வீண் போல்.

927. களை பறியா விளைநிலம் போல.

928. கள்ளிக் கொப்புக்கு வெள்ளிப்பூண் கட்டியது போல.

929. களவும் கற்று மறப்பது போல.

930. களை எடாதவன் விளைவு எடான் போல்.

931. கள்ளனுக்கு ஏற்ற குள்ளன் போல.

932. கள்ளப் பூனைக்குச் சலங்கை கட்டினாற் போல.

933. கள்ளனைத் தேள் கொட்டியது போல.

934. களவாடத் தெரியாதவன் கந்தையைக் களவாடினது போல.

935. கற்பாறைமேல் விழுந்த மழைத்துளி சிதறுவது போல

936. கற்பிளப்பின் தீயே போல்.

937. கற்ற மனம் போல.

938. கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள் பெற்றுக் கொடுத்த தலைமகன் போல்.

939. கறையான் புற்று பாம்புக்கு உதவுகிறது போல.
940. கறந்த பால் முலைக்கு ஏறாதது போல,
941. கறுத்தது எல்லாம் தண்ணீர், வெளுத்தது எல்லாம் பால் போல்.
942. கறுப்பு வெளுப்பு ஆகாதது போல.
943. கறையான் புற்றெடுக்க, கருநாகம் குடிபோனது போல.
944. கற்பக விருட்சத்தைச் சேர்ந்த காகமும் அமிர்தம் உண்ணுவது போல,
945. கற்ற இடத்தில் வித்தையைக் காட்டுவது போல.
946. கற்றாளை நாற்றமும் பித்தளை வீச்சமும் போகாதது போல.
547. கற்பூரம் வாங்கப்போய் கடலுப்பை வாங்கினவன் போல.
948. கற்பூரம் கொளுத்தமுன் சன்னதம் ஆடினாற் போல,
949. கற்பூரம் அணைந்தாலும், அதன் வாசனை இருப்பது போல.
950. கறவை உள்ளான் விருந்துக்கு அஞ்சாதவன் போல.
951. கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம் போல்.
952. கனக மாரி பொழிந்தது போல.
953. கனல்முன் இட்ட மெழுகுப் பாவை போல.
954. கனியிருக்கக் காயை விரும்புவது போல.
955. கண்மேற் செதுக்கிய எழுத்துப் போல;
956. கன்றினைக்கண்ட பசுப்போல.
957. கன்றுடைத் தாய் போல.
958. கன்றைப் பிரிந்த ஆன் போல.
959 கன்றைவிட்டுக் கட்டுத்தறியைப் பிடிப்பது போல.
960. கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவமாட்டாதது போல.
961. கன மழை பெய்தாலும் கருங்கல் கரையமாட்டாதது போல.
962. கனவில் கண்ட கத்தரிக்காய் கறிக்கு உதவமாட்டாதது போல.
963. கன்றைத் தேடி பசு தவிக்கிறதைப் போல.

964. கன்னன் நடமாடக் குயவன் குடி போவது போல.
965. கனிதரும் மரத்தில் கல்லடி படாமல் இருக்கமுடியாது போல.
966. கன்றைக் கண்டு ஓடிவரும் பசுவைப்போல.
967. கன்று தாயோடே, இனம் இனத்தோடே போல்.

கா

968 காகம் இருக்கப் பனம்பழம் விழுந்ததைப் போல.
969. காகத்தின் இருகண்ணிற் கலந்து நின்ற ஒரு மணி போல்.
970 காகம் உறவு கலந்துண்பது போல.
971. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு போல.
972. காக்கை கரிச்சட்டியைப் பார்த்து பழித்தது போல.
973. காகம் கொத்தி மாடு சாகாது போல.
974. காகிதக் கப்பலில் பிரயாணம் போக நினைக்கும் மூடனைப் போல.
975. காகித ரோஜா மலரில் வாசனை மணத்தை எதிர் பார்ப்பதைப் போல.
976. காடும் செடியும் இல்லாத ஊருக்கு கழுதை முள்ளி கற்பக விருட்சம் போல.
977. காடு வெட்டிச் சாய்த்தவனுக்குக் கம்பு பிடுங்கப் பயமில்லாதது போல.
978. காட்டாற்று வெள்ளத்திற்கு அணைபோட முடியாதது போல.
979. காட்டிலே செத்தாலும், வீட்டிலேதான் தீட்டு போல.
980. காட்டுக்கு எறிந்த நிலாவும், கானலுக்குப் பெய்த மழையும் போல.
981. காட்டு மரங்களை வெட்டி ஒநாயைப் பிடிப்பது போல.
982. காட்டாற்று வெள்ளம் போல.
983. காட்டில் எறித்த நிலாப்போல.
984. காட்டுத் தீ போல.
985. காணாதது கண்டாற் போல

986, காணக் கிடைத்தது கார்த்திகைப் பிறைபோல.
987. காணாத மூளி கஞ்சியைக் கண்டு ஓயாமல் ஓயாமல் ஊற்றிக் குடித்தது போல.
988. காதலனைக் கண்ட கற்புடையாள் போல.
989. காதோடு காது வைத்தாற் போல.
990. காதிலே நாராசம் காய்ச்சி விட்டது போல;
991. காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனது போல.
992. காதுக்கு இட்டால் முகத்திற்கு அழகாவது போல.
993. காதற்ற ஊசியும் கூட வராது போல.
994. காந்தம் இரும்பைப் பற்றுவது போல.
995. காந்தள் மொட்டுப் போல.
996. காந்தனில்லாத கனங்குழலாள் பொற்புப் போல.
997. காமாலைக் கண்ணுக்குக் காண்பதெல்லாம் மஞ்சள் நிறம் போல.
998. காயும் புழுவிற்குச் சாயும் நிழல் போல.
999. காய் பல காய்த்தாலும் தாங்கும் கிளை போல,
1000. காய்த்த பலாவின் கனியுண்ணமாட்டாமல் ஈச்சம் பழத்துக்கு இடருற்றது போல.
1001. காய் முற்றினால் தீங்கனியாதல் போல.
1002. காய்த்த மரம் கல் அடிபடுவது போல.
1003. காயும் கனியும் உண்டானால் கார்த்திகை மாசம் கல்யாணமாவது போல.
1004. காய்ந்த மாடு கம்பங் கதிரில் விழுந்ததைப் போல.
1005. காய்ப் பாரத்தைக் கொடி தாங்குவது போல.
1006. காய்ந்த ஓலை கலகலக்கிறது போல.
1007. காய்ந்த மாடு கம்பைக் கடிப்பது போல.
1008. கார்த்திகைப் பிறை கண்டது போல.
1009. கார் மருங்கின் மின்னுப் போல.
1010. காரியக்காரன் கொல்லையிலே கழுதை வந்து மேய்கிறது போல.
1011. காலத்திற் பெய்த மழைபோல.

1012. காலில் பட்டது கண்ணிற்பட்டது போல.
1013. காலுக்குத் தக்க செருப்பும், கூலிக்குத் தக்க உழைப்பும் போல.
1014. காலில் கட்டினால் விருது, குப்பையில் கிடந்தால் துணி போல.
1015. காலுக்கு உதவாத செருப்பைக் கழற்றி எறிவது போல.
1016. காலுக்கு ஆகிற செருப்பு, தலைக்கு உதவாதது போல:
1017. காலுக்கு கை உதவி, கைக்குக் கால் உதவி போல்,
1018. காலில்லாதவனை ஓடக்கேட்பது போல.
1019. கால் உள்ள மட்டும் நடப்பது போல.
1020. கால்வாயைத் தாண்டாதவன், கடலைத் தாண்டத் துணிவது போல.
1021. கால்வாய்க்கு மழையும் கைம்பெண்ணுக்கு பிள்ளையும் போல.
1022. காலியான கோணி நிமிர்ந்து நிற்க முடியாதது போல.
1023. காலிலே செருப்பு இருக்கும் வரைக்கும் காடு முழுவதும் சுற்றுவது போல.
1024. காலைக்கேட்டு யாரும் நடப்பதில்லைப் போல்:
1025. காவிரிக்கரைப் பகப்போல்.
1026. காவடிப்பாரம், சுமக்கிறவனுக்குத்தான் தெரிவது போல.
1027. காவேரலை விழும்போது குருத்தோலை பார்த்துச் சிரிப்பது போல.
1028. காவேரி கஞ்சியாய்ப் போனாலும் நாய் நக்கித்தான் குடிப்பது போல.
1029. காற்றின் வாய்ப்பட்ட பூமலர் போல.
1030. காற்றுடன் நெருப்புக் கூடினாற் போல.
1031. காற்றில்லாமல் தூசி பறக்கமாட்டாதது போல.
1032. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது போல.
1033. காற்றோடே வந்து மழையோடே போனது போல,

1034. கானை போன வழியிலே கயிறு போனது போல.
1035. கானை வாலைப் பிடித்துக் கரை சேருவது போல.
1036. கானலைத் தண்ணீராய்க் கண்டது போல.

கி

1037. கிடக்கிறது ஒட்டுத் திண்ணை, கனவு காண்பது மச்சு வீடு போல.
1038. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல.
1039. கிணற்றிலே கல் போட்டது போல.
1040. கிணற்றுத் தவளை போல.
1041. கிணற்றுக்குத் தப்பி தீயிலே பாய்ந்தவன் போல.
1042. கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பம் தேவைப்படாதது போல.
1043. கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது போல.
1044. கிண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது போல.
1045. கிணற்று ஆழமும் கயிறு நீளமும் பார்க்க வேண்டும் போல.
1046. கிரக சாந்திக்குச் சவரம் பண்ண எத்தனிப்பது போல.
1047. கிழட்டு ஒட்டகத்துக்கும் கழுத்திலே மணிகட்ட எத்தனிப்பது போல.
1048. கிளியை வளர்த்துப் பூனை வாயிற் கொடுத்தல் போல.
1049. கின்னுக் கீரை போல.
1050. கிளி அருமையை பூனை அறியாதது போல.

கீ

1051. கீரியும் பாம்பும் போல.
1052. கீரி வாய்ப் பாம்பு போல.
1053. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டுவது போல;
1054. கீரைத்தண்டு பிடுங்க ஏலேலோ பாட்டு தேவைப்படாது போல.
1055. கீர்த்தியால் பசி தீரமாட்டாதது போல.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

1056. கீழ்த் தெருவிலே பல்லக்கைக் கொடுத்து, மேலத் தெருவிலே பிடுங்கிக்கொள்வது போல.

1057. கீழே விழுந்தாலும் மீசையில் மண் படாதது போல

1058. கீழே பாம்பென்றால் மேலே பார்க்கிறவன் போல.

## கு

1059. குச்சுவீடு கட்டித்தான் மச்சுவீடு கட்டவேண்டும் போல்.

1060. குச்சுக்காரிக்குக் குடும்பப் பாங்கு தெரியாதது போல.

1061. குங்குமஞ் சுமந்த கழுதை போல.

1062. குஞ்சடவின் மேய்ந்த கோழியைப் போல.

1063. குஞ்சுகள் பொரிப்பதற்கு முன் கணக்கிடக் கூடாதது போல.

1064. குடத்தினுள் ஏற்றிய விளக்கைப் போல.

1065. குடல் கூழுக்கழக் கொண்டை பூவுக்கழுவது போல.

1066. குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னுவது போல.

1067. குடியிருக்கும் வீட்டின் கூரையைப் பிடுங்குவது போல.

1068. குட்டிச் சுவரிலே தேள் கொட்டத் தண்ணீர் பிடாரவில் நெறிகட்டினது போல.

1069. குட்டி போட்ட நாய் போல.

1070. குட்டி போட்ட பூனை அலைகிறது போல.

1071. குட்டி போட்ட நாய்க்குக் குப்பைமேடு கோபுரம் போல.

1072. குட்டிச் சுவரில் முட்டிக் கொள்வதற்கு வெள்ளெழுத்து வேண்டாதது போல.

1073. குடிக்கிறது கூழ், கொப்பளிப்பது பன்னீர் போல.

1074. குடியிருந்த வீட்டுக்கு கொள்ளி வைத்தவனைப் போல.

1075. குடியில்லாத ஊருக்கு குள்ளநரியே அரசனாவது போல;

1076. குட்டுப் பட்டாலும் மோதிரக் கையாலே குட்டுப்பட வேண்டும் போல.

1077. குட்டிபோட்ட நாய் குரைக்கிறது போல;

1078. குடுமிக்குத் தக்க கொண்டை போல.
1079. குட்டையில் மீன் பிடித்தது போல.
1080. குடிக்கக் குடிக்கப் பால் ஊறுவது போல.
1081. குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல.
1082. குண்டு பட்டுச் சாகாதவன், வண்டு கடித்துச் செத்தது போல.
1083. குண்டி காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னுவது போல.
1084. குதிரை கீழை தூக்கிப் போட்டதன்றி மேலே ஏறியும் மிதித்தது போல.
1085. குதித்து குதித்து மாவிடித்தாலும் குந்தாணிக்கு ஒரு கொழுக்கட்டையும் கிடையாதது போல.
1086. குதிரை குணமறிந்தல்லவோ தம்பிரான் கொம்பு கொடுக்காதது போல.
1087. குதிரை குருடானாலும் கொள்ளுகின்கிறதில் குறைவில்லாதது போல.
1088. குத்தரிசி குத்துகிற வீட்டிலே, வாய்க்கரிசிக்கு வழியில்லாதது போல.
1089. குத்திக் கொண்டு வா என்றால் வெட்டிக் கொண்டு வருபவன் போல.
1090. குதிரை இல்லாத ஊருக்கு கழுதை தம்பிரான் போல.
1091. குதிரை குப்புறத் தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்தது போல.
1092. குப்பையிற் கிடந்தாலும் மாணிக்கத்தின் பெருமை குறையாதது போல.
1093. குப்புற விழுந்தாலும் மீசையில் மண் படாதது போல.
1094. குப்பை ஏறிக்கூவாத கோழி, கோபுரம் ஏறி வைகுண்டம் காட்ட முயற்சிப்பது போல.
1095. குப்பையில் புதைத்தாலும் குன்றுமணியின் நிறம் மாறாதது போல.
1096. குப்புறத் தள்ளும் குதிரையை விட, பொறுமையோடு செல்லும் கழுதையே மேலானது போல.

1097. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற் போல.
1098. கும்பிட்ட கோவில் தலைமேல் இடிந்து விழுந்தாற் போல.
1099. கும்பலோடு சேர்ந்து கோவிந்தா போடுவது போல.
1100. குயில் குரலும் மயில் அழகும் போல்
1101. குயில் கூவினாற் போல்.
1102. குயவனுக்குப் பலநாள் வேலை, தடியெடுத்தவனுக்கு ஒருநாள் வேலை போல.
1103. குயத்தி நாக்கை கூழ்கூழாய் அறுத்தாலும் குடம் இரண்டு காசு என்பாள் போல்.
1104. குயவா கலயம் கொண்டுவா, இடையா பால்கொடு என்றாற் போல.
1105. குரங்கின் கைப்பூமாலை போல.
1106. குரங்கின் கையில் கொள்ளி கொடுத்தாற் போல.
1107. குரங்கின் கையில் சிக்கிய பாம்பு போல.
1108 குருடன் இராசவிழி விழித்தாற் போல.
1109. குருடனுக்குக் குருடன் வழிகாட்டல் போல்.
1110. குருடன் கைக்கோலைப் பிடுங்கினது போல.
1111. குருடும் குருடும் குழிவிழுந்தாற் போல்.
1112. குருடும் செவிடும் கூத்துப் பார்த்தாற் போல.
1113. குருட்டுக் கோழி தவிட்டுக்கு வீங்கினது போல.
1114. குருட்டுப் பூனை விட்டத்திற் பாய்ந்தது போல.
1115 குருத்தின் கரும்பு தின்றாற் போல.
1116. குருவி கழுத்தில் தேங்காயைக் கட்டினது போல.
1117. குருவுக்கு மிஞ்சின சீடனைப் போல.
1118 குரங்கு ஏறாத கொப்பு இல்லாதது போல.
1119 குரங்கு கையில் அகப்பட்ட பூமாலை போல.
1120. குரங்கு புத்தி சொல்லி, தூக்கணாங் குருவி தன் கூண்டை இழந்தது போல.
1121. குருட்டுக் குதிரைக்குச் சறுக்கினது சாட்டு என்பது போல.
1122. குரைக்கிற நாய் கடிக்காதது போல.

1123. குரைக்கிற நாய்க்கு எலும்பைப் போட்டாற் போல.

1124. குரங்கானாலும் குலத்திலே கொள்ளவேண்டுமென்பது போல.

1125. குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பு போல.

1126. குரைக்காத நாயிடம் எச்சரிக்கையாக இருப்பது போல.

1127. குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டு வது போல.

1128. குழியில் விழ்ந்த யானை போல.

1129. குளத்தின் மேல் கோபித்துக் கொண்டு கால் கழு வாமல் போனது போல்.

1130. குளம் வெட்டப் பூதம் புறப்பட்டது போல.

1131. குளவிக் கூட்டைக் கோலால் குலைத்தாற் போல.

1132. குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டது போல.

1133. குள்ளனைக் கொண்டு ஆழம்பார்க்க வந்தது போல.

1134. குளத்திலே போட்டு, கிணற்றிலே தேடுவது போல.

1135. குள்ளன் குடியைக் கெடுப்பது போல.

1136. குறை குடம் ததும்புவது போல.

1137. குறிச்சி புக்க மான் போல.

1138. குறுஞ்சிரிப்புக்கு மருந்துசாப்பிட உள்ள சிரிப்பும் போனாற் போல.

1139. குன்றுமணியிடத்திலும் கறுப்புண்டாயிருப்பது போல்

1140. குன்று கண்டு குரைக்கும் நாய் போல.

1141. குன்றின் மேலிட்ட விளக்குப் போல.

கூ

1142. கூடத்தைக் கொடுத்தால் மாடத்தைப் பிடுங்குபவன் போல.

1143. கூட்டத்திற் கட்டுச்சோறு அவிழ்ந்தாற் போல.

1144. கூத்துப் பார்க்கப் போன இடத்தில் பேய் பிடித்தது போல.

1145. கூத்திலே கோமாளி வந்தது போல.

1146. கூந்தலைக் குறுக வெட்டிக்கொண்ட பெண் போல.

1147. கூப்பிடப்போன தாதி மாப்பிள்ளையைக் கைக்கொண்டது போல;

1148. கூரை மேலே சோறுபோட்டால் ஆயிரம் காக்கை வருவது போல.

1149. கூலிக்குக் குத்துகிறவனை கேளிக்கை ஆடச் சொன்னது போல.

1150. கூலிக்கு மாரடிப்பது போல.

1151. கூழுக்கு மாங்காய் கொண்டாட்டம் போல;

1152. கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்பது போல.

## கெ

1153. கெட்ட மாடு தேடுமுன்னே, எட்டுமாடு தேடலாம் போலே.

1154. கெட்டுப்போன பார்ப்பானுக்குச் செத்துப்போன பசுத்தானம் போல.

1155. கெட்டுப்போன தானியத்தில் நல்லவிதை கிடையாதது போல.

1156. கெட்ட பயலுக்கு ஏற்ற துட்டச் சிறுக்கி போல.

1157. கெட்டும் பட்டணம் சேர்வது போல.

1158. கெடுத்துத் தேடும் நன்கலம் எடுத்துக் கொண்டாற் போல;

1159. கெட்டிக்காரன் புளுகு எட்டுநாள் மட்டும் போல.

1160. கெண்டையைப் போட்டு வராலை இழுத்தாற் போல.

## கே

1161. கேட்க விருப்பமில்லாதவனுக்குச் செவியைக் கொடுத்தும் பலனில்லாதது போல.

1162. கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தது போல;

## கை

1163 கைக்கும் மருந்தைக் கருப்பங்கட்டியிற் பொதிந்து அருந்துதல் போல;

1164. கைப்பழத்தைப் போட்டுவிட்டுத் திருட்டுப் பழத் துக்கு ஆசைப்பட்டது போல.
1165. கையாடாத ஆயுதம் துருப்பிடிப்பது போல.
1166. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாதது போல.
1167. கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவைப்படாதது போல.
1168. கைகொடுத்துக்கொண்டே கடையாணியைப் பிடுங்கு பவன் போல.
1169. கைக்குருவியைக் கொண்டு காட்டுக் குருவியைப் பிடிப் பது போல,
1170. கைப்பறவையைப் பறக்கவிட்டு, காட்டுப்பறவைக்குக் கண்ணிவைத்தது போல.
1171. கையிலே வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவது போல.
1172. கையால் கிழிக்கும் பனங்கிழங்கை ஆப்பு வைத்துக் கிழித்தது போல.

## கொ

1173. கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது போல;
1174. கொக்கின் வாய்ப்பட்ட மீன் போல.
1175. கொசுவுக்கு அஞ்சி குடிபெயர்ந்துபோவது போல.
1176. கொஞ்சிக் கூத்தாடி நடந்தாலும் கழுதை குதிரை யாக மாட்டாதது போல.
1177. கொடிக்குக் காய் பாரமில்லாதது போல.
1178. கொடுக்க மாட்டாத இடையன் சினை ஆட்டைக்காட் டியது போல;
1179. கொண்டவன் பலம் இருந்தால் குப்பை மேடேறி சண்டை செய்வது போல;
1180. கொம்புத் தேனுக்கு முடவன் ஆசைப்பட்டது போல.
1181. கொல்லன் உலையூதுந் தீயே போல்.
1182. கொல்லன் தெருவில் ஊசி விற்றது போல.



124076

1183. சொல்லவரும் யானை முன்னே கல்லைவிட்டு எறியக் கூடாதது போல.
1184. சொல்லைக்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சமாட்டாதது போல.
1185. சொல்லை பாழானாலும் குருவிக்கு இரை பஞ்சம் இல்லாதது போல.
1186. கொழுக்கட்டையானாலும் சரி, மோதகமானாலும் சரி உள்ளான் ஒன்றுதான் போல.
1187. கொட்டிக் கிழங்கும் ஒருமுட்டுக்கு உதவுவது போல.
1188. கொள்ளையிடப் போகிறவனுக்குக் குருடன் துணை ஆகாதது போல.
1189. கொழுகொப்பற்ற கொடி போல
1190. கொத்தவிட்ட கோழி சும்மாயிராது போல.
1191. கொடுக்கற்ற தேள் போல.

## கோ

1192. கோடை இடி குமிறினாற் போல.
1193. கோடையிடியும் மழையும் போல.
1194. கோடரிக் காம்பினால் குலத்திற்கு ஈனமாவது போல.
1195. கோடி முண்டர் ஏறிமிதித்தாலும் கூழாங்கல்லு சாந்துக்கு உதவமாட்டாதது போல.
1196. கோடையில் காய்க்கிற பயிர் வாடையில் தளிர்ப்பது போல.
1197. கோடையிலே தண்ணீர் ஓடை கண்ட மான் போல.
1198. கோணலாய் இருந்தாலும் கரும்பு தித்திப்பது போல.
1199. கோயிற் பூனை தேவருக்கு அஞ்சமாட்டாதது போல.
1200. கோரைக் கிழங்கும் ஒருவேளைக்கு உதவுவது போல.
1201. கோல் ஆட்டக் குரங்கு ஆடுவது போல.
1202. கோல் இழந்த குருடனைப் போல.
1203. கோழி மிதித்துக் குஞ்சு சாகமாட்டாதது போல.
1204. கோழியின் காலில் பட்டுத்துணியைக் கட்டினாலும், அது குப்பையைத்தான் கிளறுவது போல.
1205. கோழி கூவிப் பொழுது விடியமாட்டாதது போல.

1206. கோழிக்கறி கொடுத்துக் குயில்கறி வாங்கினாற் போல.
1207. கோழி சிறகால் குஞ்சுகளைக் காப்பது போல.
1208. கோழி போனதும் அல்லாமல் கூண்டும் போனதுபோல
1209. கோழி வேறுநிறமானாலும், முட்டை வெள்ளைநிற மாவது போல.
1210. கோழி களவு போனதற்கு, ஆடு வெட்டிப் பொங்கல் இட்டது போல.

ச

1211. சகடக்கால் போல.
1212. சகதியில் கல்லை எறிந்தால் தன்மேலே தானே தெறிப்பது போல.
1213. சங்கு ஊதாமல் தாலிகட்டுவது போல.
1214. சங்கு சுட்டாலும் வெண்மை தருவது போல.
1215. சட்டிப் பாலுக்கு ஒரு சொட்டு மோர் பிரைபோல.
1216. சட்டிக்கு ஒரு மூடி கட்டாயம் போல.
1217. சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வருவது போல.
1218. சண்டிக்குதிரைக்கு நொண்டிச் சாரதி போல.
1219. சணப்பன் வீட்டுக் கோழி தானே விலங்கு பூட்டிக் கொண்டது போல.
1220. சத்திரங்களை நம்பிச் சொந்த வீட்டைக் காலி செய்பவன் போல.
1221. சந்நியாசி பூனை வளர்த்தது போல.
1222. சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தது போல.
1223. சந்தியிலே அடித்ததற்குச் சாட்சி தேவைப்படாதது போல.
1224. சந்திரன் இல்லா வானம் போல.
1225. சந்தனத்தோடு கற்பூரம் சேருவது போல.
1226. சந்தையிலே சத்தம் இருக்கிறது போல.
1227. சந்தைகூடிக் குலைகிறது போல.
1228. சந்தன மரக்காட்டிலே சர்ப்பம் இருப்பது போல.

1229. சந்தனக் கட்டை தேய்ந்தாலும் சுகந்தம் குறைபடா ததது போல.

1230. சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிப்பது போல.

1231. சந்தனம் தெளித்த கையாலே சாணி தெளித்தது போல.

1232. சந்நியாசியானாலும் சாவிலிருந்து தப்ப முடியாதது போல.

1233. சப்பாணி மாப்பிள்ளைக்குச் சந்தொடிந்த பெண்சாதி போல,

1234. சப்பாணிக்கு நொண்டிச்சண்டப் பிரசண்டன் போல.

1235. சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல.

1236. சமையலறைக்குத் தான் நெருப்புத் தேவைப்படுவது போல.

1237. சம்பா விளைந்த நிலத்தில் சாவி விளைகிறது போல.

1238. சமைக்கப் படைக்கத் தெரியாதவள் உடைக்கக் கவிழ்க்கத் தெரிவது போல.

1239. சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிந்தாற் போல.

1240. சருகைக் கண்டு தணல் அஞ்சமாட்டாது போல.

1241. சர்ப்பத்தின் வாயில் தேரை போல.

1242 சர்க்கரையின் சுவை தொண்டை மட்டும் போல.

1243. சனத்தோடு சனம் சேரும், சந்தனத்தோடு கற்பூரம் சேருவது போல.

1244. சனத்தோடு சனம் சேரும், பணத்தோடு பணம் சேருவது போல.

1245. சனியனை விலைகொடுத்து வாங்கியது போல,

1246. சனியன் பிடித்தவனுக்குச் சந்தையிலும் கந்தை அகப்படாதது போல.

1247. சன்மக் குருடனுக்குக் கண்கிடைத்தது போல.

1248. சனத்தோடு சனம் சேருவது போல.

சா

1249. சாக்கடைப் புழுவிற்குப் போக்கிடம் இல்லாதது போல.

1250. சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் ஒரு குட்டை போல.
1251. சாடிக்கு வாய்த்த மூடி போல்.
1252. சாட்டை இல்லாமல் பம்பரம் ஆடமாட்டாதது போல
1253. சாடிக்கு ஏற்றமூடி, ஆளுக்கு ஏற்றசோடி போல.
1254. சாணி சுமக்கிறவனுக்குச் சந்தனப் பூச்சு தேவைப் படாது போல.
1255. சாணியும் சவ்வாதும் சரிப்படமாட்டாது போல.
1256 சாண் ஏற முழம் சறுக்குவது போல.
1257. சாண் பாம்பானாலும் அடிக்க முழத்தடி வேண்டும் போல்.
1258. சாதிக்குதிரை சவுக்கடி பொறுக்காது போல;
1259. சாதுரியப் பூனை மீனை விட்டுப் புளியங்காயைத் தின்றது போல.
1260. சாந்த குணமில்லாதார் தவம் போல.
1261. சாப்பிள்ளை பெற்றாலும் மருத்துவச்சிக் கூலிகொடுத்தே தீரவேண்டியது போல.
1262. சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி விடைகொடுக்காதது போல.
1263. சாரையைத் தின்னும் ஊருக்குப் போனால், நடுக்கண்டம் நமக்கு போல்.
1264. சாரம் இல்லாத வெறும் சக்கையைப் போல.
1265. சாதுரியப் பூனை தயிர் இருக்கச் சட்டியை நக்கினது போல.
1266. சாறு பிழிந்த கனி போல.

சி

1267. சிங்கம் இருந்த சிம்மாசனத்தில் சுண்டெலி இருந்தாற் போல.
1268. சிங்கத்தைக் கண்டு நரி நடுங்கினாற் போல்.
1269. சிங்கத்தின் காட்டை சிறுநரி வளைத்தாற் போல.
1270. சிங்கத்திற்கு நாய் இங்காரமுடி சூட்ட எண்ணுவது போல.

1271 சிங்கம் பசித்தாலும் தேரையைப் பிடிக்கமாட்டாதது போல.

1272. சிங்கத்தின் தோல் எப்போதும் மலிவற்றது போல.

1273. சிங்கத்தின் வாலாக இருப்பதை விட, நாயின் தலையாக இருப்பது மேலானது போல.

1274. சிங்கம் இல்லாத இடத்தில் நரி சிம்மாசனம் ஏறுவது போல.

1275. சிங்க வேடம் போட்டால் கர்ச்சித்துத்தான் ஆகவேண்டும் போல்.

1276. சிட்டுக்குருவி தலைமேல் பனங்காயைக் கட்டுவது போல

1277. சிட்டுக்குருவி மேல் பாரதந் தொடுத்தது போல.

1278. சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை மலர் போல.

1279. சித்திரப் பதுமை போல.

1280. சிப்பி வாய் முத்துப் போல.

1281. சிரட்டைத் தண்ணீர் எறும்புக்குச் சமுத்திரம் போல.

1282. சிலையின் எழுத்துப் போல்.

1283. சிவபூசை வேளையிலே கரடி புகுந்தாற் போல.

1284. சிறகிழந்த பறவை போல.

1285. சிறிய கண்ணாடியில் பெரிய மலையைக் காண்பது போல

1286. சிறியவன் செல்வம் போல்.

1287. சிறியார் மணற் சோற்றிலே தேக்கிடுமா போல.

1288. சிறியார் கைச் செம்பொன் போல.

1289. சிறு தீ பெரு நெருப்பாவது போல.

1290. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவுவது போல.

1291. சிறுமீன் எல்லாம் பெருமீனுக்கு இரையாவது போல.

1292. சிறுத்திருக்கையில் வளையாதது, பருத்திருக்கையில் வளைய மாட்டாதது போல.

1293. சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராதது போல.

1294. சிறுபிள்ளை மணலில் வீடுகட்டி விளையாடுவதைப் போல.

1295. சிற்றாள் எட்டாளுக்குச் சரியானது போல

1296. சிறுதுளி பெருவெள்ளமாவது போல.

1297. சிற்றெறும்பைச் சிற்றெறும்பு தேடுவது போல.
1298. சிறிய பறவை சிறிய காட்டினுள் திருப்தியாக வாழ்வதைப் போல.
1299. சிறிய நாய் முயலைக்கிளப்பிவிட, பெரிய நாய் அதைப் பிடிப்பது போல.
1300. சிறு விதையாகிய ஆலமரம் பெருநிழலைக் கொடுப்பது போல.
1301. சிறு தூறல் பெரும் புழுதியை அடக்கி விடுவது போல.
1302. சிற்றுளியால் கல்லும் தகருவது போல.
1303. சிறை பெறு நீர் போல்.
1304. சிற்றருவிகள் பலவுஞ் சென்று ஓர் ஆற்றில் கலத்தல் போல.
1305. சின்னப் பாம்பானாலும் பெரிய தடியால் அடிக்க வேண்டும் போல்
1306. சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிப்பது போல.

## சீ

1307. சீச்சி இந்தப் பழம் புளிக்கும் என்பது போல.
1308. சீதனம் வாங்கியும் செலவுக்குக் காசு இல்லை என்பது போல.
1309. சீதேவியுடன் கூட மூதேவி பிறந்தாற் போல.
1310. சீப்பை எடுத்து ஒழிப்பதனால் கல்யாணம் நிற்காதது போல.
1311. சீரங்கத்துக் காகமானாலும் கோவிந்தம் பாடமாட்டாது போல.
1312. சீரியர் கெட்டாலும் சீரியரே போல்
1313. சீறிவரும் வடவாக்கினியை, சிறுகுட்டை நீர் அவிக்க மாட்டாது போல,
1314. சீனியில் பெற்ற ஆதாயத்தை எறும்பு இழுத்துக் கொண்டு போனது போல,

1315. சீனிக்கிழங்கு தின்ற பன்றி செவியை அறுத்தாலும் நிற்கமாட்டாதது போல.

1316. சீனியைக் கண்டால் எறும்பு வராமல் இருக்கமுடி யாது போல.

### சு

1317. சுகதுக்கம் சுழல் சக்கரம் போல.

1318. சுகத்துக்குப் பின் துக்கம், துக்கத்துக்குப் பின் சுகம் போல்.

1319. சுக்கிர உதயத்தில் தாலிகட்டி, சூரிய உதயத்தில் அறுத்தது போல.

1320. சுகதுக்கம் சுழல்காற்றுப் போல.

1321. சுக்கு அறியாத கசாயம் இல்லாதது போல.

1322. சுக்கு கண்ட இடத்திலேயே அவள் முக்கிப் பிள்ளை பெறுவது போல.

1323. சுடச் சுட ஒளிரும் பொன்போல.

1324. சுட்டமண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாதது போல.

1325. சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டு வது போல.

1326. சுடுகாடு போன பிணம் திரும்பமாட்டாது போல.

1327. சுடுகாட்டு வழி போனாலும், இடுகாட்டு வழிபோகக் கூடாதது போல.

1328. சுட்ட சட்டி அப்பத்தின் சுவையை அறியமாட்டாது போல.

1329. சுட்டிக்காட்டாத வித்தை சூடு போட்டாலும் வராது போல.

1330. சுடச்சுடப் பொன் சுத்தமாவது போல.

1331. சுடு கெண்டைக்காக ஏரியை உடைக்க எண்ணுவது போல.

1332. சுண்டைக்காய் காற்பணம், சுமைகூலி முக்காற் பணம் போல.

1333 சுத்தமான துணியில் சாயம் ஏறுவது போல.

1334. சுத்தம் சோறு போடும், எச்சில் இரக்க வைப்பது போல.

1335. சுத்த வீரனுக்கு உயிர் துரும்பு போல.

1336. சுத்தம் சுகம் தருவது போல,

1337. சும்மா வந்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்த்தது போல.

1338. சும்மா கிடக்கிற சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டி போல.

1339. சும்மா இருக்கிற தம்பிரானுக்கு சோற்றுப் பட்டை இரண்டு போல.

1340. சும்மா இருந்த பெண்ணுக்கு அரைப்பணத்து தாலி கிடைத்தது போல

1341. சும்மா இருந்த உடம்பிலே சுண்ணாம்பைத் தடவிப் புண்ணாக்கியது போல.

1342. சுமங்கலிக்கு இலக்கணம் பூவும் பொட்டும் போல்.

1343. சுயபுத்தி போனாலும் சொற்புத்தி வேண்டும் போல்.

1344. சுரைப்பூவுக்கும் பறைப்பாட்டுக்கும் மணம் இல்லாதது போல.

1345. சுருட்டை மயிர் நிமிரமாட்டாதது போல.

1346. சுலபமாக வருவது சுலபமாக போய்விடுவது போல;

1347. சுலபமாக முடியும் வேலை விரைவான நம்பிக்கையை அளிக்கிறது போல.

1348. சுமை இழந்தார்க்குச் சுங்கம் இல்லாதது போல;

1349. சும்பவனுக்குத்தான் காலடிச்சுமை தெரிவது போல.

1350. சுவரை வைத்துக் கொண்டுதான் சித்திரம் வரைய வேண்டும் போல்.

1351 சுவைகண்ட பூனை உறியை உறியைத் தாவுவது போல

1352. சுவற்றுக் கீரையை வழித்துப் போட்ட சுணைகெட்ட மூளி போல.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



5

1353. சுவை உணவில் இல்லை, சமைப்பவரின் திறமையில் இருக்கிறது போல.
1354. சுவாமி இல்லையென்றால், சாணியைப் பார்க்க வேண்டும் போல.
1355. சுழலும் கண்ணைப் போல.
1356. சுழரும் சக்கரத்தைப் போல.
1357. சுழல் காற்றில் அகப்பட்ட துரும்பு போல.
1358. சுவாமி வரங்கொடுத்தாலும், பூசாரி இடங்கொடாதது போல.
1359. சுற்றத் துணியும் இல்லை, நக்கத் தவிடும் இல்லை போல.

சூ

1360. சூடு அடிக்கும் மாட்டுக்கு வரயைக் கட்ட முடியாதது போல.
1361. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாதது போல
1362. சூடுபட்டும் உணர்ச்சி வராத சுணைகெட்ட மாட்டைப் போல.
1363 சூடுபட்ட பூனை போல.
1364, சூட்சுமம் அறியாதவனுக்கு மோட்சம் இல்லாதது போல.
1365. சூடுள்ள போதே இரும்பை அடிப்பது போல.
1366 சூடான காதல் உடனே குளிர்ந்து விடுவது போல.
1367 சூதாடித் தோற்றவனுக்குச் சுகம் கிட்டாதது போல.
1368. சூதுக்காரன் கையும், கோள்காரன் வாயும் சும்மா இருக்க மாட்டாதது போல.
1369 சூதுக்காரன் கையை வெட்டிப்போட்டாலும் துடுப்புக் கொண்டு ஆடுவான் போல
1370. சூரியனைக் கண்ட தாமரை போல.
1371. சூரியன்முன் மின்மினி போல.
1372 சூரியனைக் கண்ட பனி போல;
1373. சூரியனைப் பார்த்து நாய் குரைத்தாற் போல.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

1374. சூரியனைக் கையால் மறைத்தது போல.
1375. சூரியன் முன்னே தோன்றிய சந்திரன் போல.
1376. சூரியன் இருக்க சுடர்விளக்கு தேவைப்படாதது போல
1377. சூலாகு மீன்கள் ஒன்றையொன்று மோந்து சொன்னுவது போல.

## செ

1378. செக்கில் அரைபட்ட எள் திரும்பி முழுசாக வரமாட்டாதது போல.
1379. செக்கு உலக்கையை விழுங்கினவனுக்குச் சுக்குக் கசாயம் மருந்தாக மாட்டாது போல.
1380. செக்கு வளையவரும் எருதுகள் போல.
1381. செங்கமலப் போதலர்ந்த செவ்வி போல்?
1382. செடியிலே வணங்காதது மரத்திலே வணங்க மாட்டாது போல.
1383. செட்டியார் வாழ்வு செத்தால் தெரிவது போல.
1384. செட்டிக்கு மட்டி சென்மப் பகை போல.
1385. செட்டி சிங்காரிக்கிறதற்குள்ளே பட்டணம் கொள்ளை போகிறது போல.
1386. செட்டிபோன இடமெல்லாம் வட்டம் காற்பணமானது போல?
1387. செடியில் இருக்கிற ஓணானை மடியில் விட்டுக்கொண்டு குடைகிறது போல.
1388. செத்த ஆடு காற்பணம், சுமை கூலி முக்காற் பணம் போல்.
1389. செத்த இடத்தில் புல் முளைத்தது போல.
1390. செத்த பாம்பை வித்தைக்காரப் பெண்பிள்ளை ஆட்டுவது போல.
1391. செத்த பிணத்திற்கு அருகே இனிச்சாகப் போகும் பிணம் அழுகிறது போல.
1392 செத்த மாட்டில் உண்ணி கழன்றது போல.
1393. செத்த பெண்ணின் தலையில் பேன் கழன்றது போல.

1394. செத்த பாம்பை அடிக்கும் மடையனைப் போல.
1395. செத்த பிள்ளை பிறந்தாலும் மருத்துவச்சிக்குக் கூலி கொடுப்பது போல.
1396. செந் தீயினிடைப் பொரிந்து தெறித்த பொரிபோல்.
1397. செப்பின் புணர்ச்சி போல.
1398. செம்மறியாடு வெளியே ஓட, திருட்டு ஓநாய் உள்ளே புகுந்தது போல.
1399. செய்யாட் கிழைத்த திலகம் போல.
1400. செருப்பின் அருமை வெயிலில் தெரிவது போல.
1401. செருப்புக்காகக் காலைக் குறைக்கக் கூடாதது போல.
1402. செல்லும் செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறது போல.
1403. செல்வச் செருக்கு உண்டானால் திருட்டுப்பால் குமட்டுவது போல.
1404. செவிடன் காதில் ஊதிய சங்கு போல.
1405. செறித்திடுஞ் சிறையினை உடைத்திடும் புனல்போல்.

## சே

1406. சேக்கை மரம் ஒழியச் சேண் நீங்கு புள் போல.
1407. சேடனுக்குத் தேவைப்படாத குரங்குப் புத்திபோல.
1408. சேணியனைக் கெடுக்க சாண்குரங்கே போதுமானது போல.
1409. சேணிக்கு புட்போல்.
1410. சேம்பு கொய்ய சிற்றறிவாள் தேடுவது போல.
1411 சேற்றிலே செங்கழுநீர் பூத்தாற் போல.
1412. சேற்றிலே நட்ட கம்பம் போல.
1413. சேற்றிலே முளைத்த செந்தாமரை போல.
1414 சேற்றிலே புதைந்த யானையைக் காகம் கொத்துவது போல.
1415. சேற்றைச் சேற்றால் போக்க முடியாதது போல.
1416. சேற்றிலே விளைந்த முத்துப் போல.

## சை

1417. சைவத்தைக் கெடுக்கும் பண்டாரம் போல்

## சொ

1418. சொக்கநாதர் கோயிலுக்குப் புல்லுக் கட்டினாற் போல
1419. சொறிந்து தேய்க்காத எண்ணெயும், பரிந்து இடாத சோறும் வீணாவது போல.
1420. சொறியக் கொடுத்த பசுப்போல்.
1421. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல.

## சோ

1422. சோடிப் புறாக்கள் கூடினாற் போல.
1423. சோம்பேறிப் பையனுக்குச் சோறு கண்ட இடம் சொர்க்கமாவது போல.
1424. சோழியன் குடுமி சும்மா ஆடாதது போல.
1425. சோளப் பயிரை மேய்ந்த எருதுக்குச் சொர்க்கலோகம் வேண்டாதது போல.
1426. சோற்றைப் போட்டுத் தொண்டையை நெரிப்பது போல.

## த

1427. தகைமாண்ட நெடுஞ்சுவர்க்கு வகைமாண்ட ஓவியம் போல.
1428. தச்சன் வீட்டுத் தயிரும், எச்சன் வீட்டுச் சோறும் ஒன்று சேர மாட்டாது போல.
1429. தங்கக் கத்தி என்று வயிற்றில் குத்தக்கூடாது போல.
1430. தங்கக் கம்பி போல.
1431. தங்கத்தை உருக்கிவிட்டது போல.
1432. தங்கம் புடத்திலே வைத்தாலும், தன்நிறம் மாறாதது போல.
1433. தங்கம் தரையிலே, தவிடு பானையிலே போல.

4858 cc

1434. தஞ்சாவூர் எத்தனும் திருவாரூர் எத்தனும் கூடினாற் போல.

1435. தடங்கரை பேர்த்து வெள்ளத்தை விடுதல் போல.

1436. தடி எடுத்தவர் எல்லாம் தண்டக்காரராக மாட்டாதது போல.

1437. தட்டிப்பேச ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டனாவது போல.

1438. தண்ணீரும் பாகியும் கலந்தாற் போல.

1439. தண்ணீரில் தத்தளிப்பவனுக்குச் சிறுதுரும்பு கிடைத்தாற் போல.

1440. தண்ணீரிலே விளைந்த உப்பு தண்ணீரிலே கரைவது போல்.

1441. தந்தை எவ்வழி, தனயன் அவ்வழி போல்.

1442. தண்ணீரும் தாமரையும் போல.

1443. தந்திரமுள்ள மனைவி தன் கணவனை முந்தானையில் முடிந்து விடுவது போல.

1444. தம்பி உடையான் சண்டைக்கு அஞ்சான் போல்.

1445. தம்பி பேச்சைத் தண்ணீரில் தான் எழுதவேண்டும் போல்.

1446. தயிரிலிருந்து வெண்ணையை எடுப்பது போல.

1447. தயிருக்குச் சட்டி ஆதரவு, சட்டிக்குத் தயிர் ஆதரவு போல்.

1448. தயிர்ப்பானையை உடைத்துக் காகத்திற்கு அமுது இட்டாற் போல.

1449. தர்மத்துக்கு தானம் பண்ணின மாட்டைப் பல்லைப் பிடித்துப் பதம் பார்த்தது போல.

1450. தரித்திரனுக்குப் புதையல் கிடைத்தாற் போல.

1451. தலைக்கடை நாய் போல.

1452. தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போல.

1453. தலையிருக்க வால் ஆடுதல் போல.

1454. தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரிவது போல.

1455. தனக்குத் தலை நாட்டாண்மையாவது போல.

1456. தலையைச் சிரைப்பதனால் தலை எழுத்து மாறுவது போல.

1457. தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு போனது போல.

1458. தலையிலே இடித்த பிறகு தாழக்குனிவது போல.

1459. தலையைச் சுற்றி மூக்கைத் தொடுபவன் போல.

1460. தலைநோவு தலையணையைத் திருப்பிப் போட்டாலும் தீரமாட்டாதது போல.

1461. தவிடு தின்பவனை அழுது தின்னச் சொன்னது போல

1462. தவளை தன் வாயால் கெடுவது போல.

1463. தவளை தாமரை மேல் இருந்தாலும் அதன் தேனை உண்ணாது போல.

1464. தவிட்டை அள்ளும் கைதான், தனத்தையும் அள்ளுவது போல.

1465. தவிட்டுக்கு வந்த கைதான் தங்கத்துக்கும் வருவது போல.

1466. தழலிற் படு தளிர் போல்.

1467. தழலது கண்ட மெழுகது போல.

1468. தழைத்த மரத்துக்கு நிழலிருப்பது போல.

1469 தள்ளரிய தார் வந்து தாய் வாழையைக் கெடுத்தாற் போல.

1470. தன் கையே தனக்குதவுமாறு போல.

1471. தன்னை நம்பி உடன் கிடந்தவனை மடி தடவின வனைப் போல.

1472. தன் முதுகு தனக்குத் தெரியாதது போல.

1473. தனக்கு என்று ஒருத்தி இருந்தால் தலைமாட்டில் இருந்து அழுவாள் போல்.

1474. தன் வீட்டு விளக்கென்று முத்தமிடக்கூடாதது போல.

1475. தன் நிழல் தன்னைத் தொடருவது போல.

1476. தன் கையே கண்ணைக் குத்தினாற் போல.

1477. தன்மூக்கு அறுபட்டாலும் எதிரிக்குச் சகுனப் பிழை யாக வேண்டும் போல.

1478. தனிமரம் தோப்பாக மாட்டாதது போல்;

1479. தன்னை அறிந்தால், தலைவனை அறிவது போல.

1480. தன்னைக் கொல்ல வருகிற பசுவைக் கொல்லுவது போல்.

1481 தன்னை வெட்டி வீழ்த்திய கோடரிக்கே நறுமணம் தருகிற சந்தன மரம் போல.

1482. தன் மனைவியை அடிக்கத் தலையாரி சீட்டுத் தேவைப் படாதது போல,

1483. தன்னைக்கட்ட, சங்கிலி எடுத்துக் கொடுக்கும் யானை போல.

## தா

1484, தாடி பற்றி எரியும்போது சுருட்டுக்கு நெருப்பு கேட் டவனைப் போல,

1485, தாது அறியாத பேதை வைத்தியனைப் போல.

1486, தாமரைப் பொய்கையிற் புகும் தனிப் பேடை போல்,

1487, தாமரையிலை நீர் போல்.

1488. தாமரையில் விழுந்த மழைத்துளி போல;

1489, தாயும் பிள்ளையும் ஆனால் வாயும் வயிறும் வேறு போல்,

1490, தாயின் முகம் பார்க்கும் சேய் போல.

1491, தாயில்லாக் குழந்தை போல.

1492, தாயின் துணையை எதிர்நோக்கும் குழந்தையைப் போல்.

1493, தாய் கூடப் பிறந்த மாமனிடத்தில் குலக் கோத் திரம் பேசியது போல்,

1494, தாய்ப்பாலில்லாத குழவி போல,

1495, தாய்ப்பாலுள் நஞ்சு ஆய்பவர் போல,

1496, தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாய்வது போல,

1497. தாய் முகம் காணாத பிள்ளையைப் போல.

1498. தாய்ப் பொன்னிலும் மாப்பொன் திருடும் தட்டான் போல.

1499. தாய் அறியாத சூல் இல்லாதது போல.

1500. தாய் பிச்சை எடுக்க, மகள் கோதானம் செய்வது போல.

1501. தாய் வார்த்தை கேளாத பிள்ளை நாய் வாயிற் சீலை போல.

1502. தாய் தவிட்டுக்கு அழ, மகள் இஞ்சிப் பச்சடி கேட்டது போல.

1503. தாய் கைப்பொன்னிலும் தன்கைத் தவிடு மேலானது போல.

1504. தாய் பசித்திருக்கும் போது, தாரத்துக்குச் சோறு ஊட்டுவது போல.

1505. தாரகை நடுவண் தண்மதி போல.

1506. தாரீ புறப்பட்டுத் தாய் வாழையைக் கெடுத்தது போல.

1507. தாலி அறுத்தவளுக்கு மருத்துவச்சி தயவு தேவையில்லாதது போல.

1508. தாலி அறுத்தவளும் வேலியற்ற பயிரும் போல.

1509. தாழ்ந்த இடத்திலே தண்ணீர் தங்குவது போல.

1510. தாழ்ந்தது தங்கம், உயர்ந்தது பித்தளை போல.

1511. தானே கனியாத பழம் தடிகொண்டு அடித்தாலும் கனியமாட்டாதது போல.

1512. தான் ஆடாது போனாலும் தன் சதை ஆடுவது போல.

1513. தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைப்பது போல.

1514. தான் தேடாப் பொன்னுக்கு மாற்றும் இல்லை, உரையும் இல்லை போல.

1515. தான் போய் மோசர் இல்லாமல் வந்தவன் தயிருக்கு கடிதம் எழுதினது போல.

1516. தானம் கொடுத்த மாட்டை பல்லைப் பிடித்துப் பார்த்தது போல.
1517. தான் சாக மருந்து உண்பார் இல்லாதது போல.
1518. தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்பது போல.
1519. தான் போகிற காரியத்துக்குத் தம்பி போனால் ஆக மாட்டாதது போல.
1520. தானாய் வருகிற சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளுவது போல.

## தி

1521. திங்களைக் கண்டு பொங்கும் கடல் போல.
1522. திடுக்கென்று வாழ்க்கைப்பட்டு, வெடுக்கென்று அறுத்தவள் போல.
1523. திண்ணைக்கு விடிந்தால், வீட்டிற்கும் விடிவது போல
1524. திரிசங்கு சுவர்க்கம் போல.
1525. திருடனை தேள் கொட்டினது போல.
1526. திருட்டு நாய்க்குச் சதங்கை கட்டினாற் போல.
1527. திரையிலாக் கடல்நீர் போல.
1528. திருட்டுமாடு சந்தைப்படுத்த முடியாதது போல.
1529. திருப்பதி அம்பட்டன் சவரம் செய்தது போல.
1530. திருவாசல் ஆண்டியும் ஒரு நாளைக்கு உதவுவான் போல்
1531. திருடனுக்கு கன்னக்கோல் வைக்க ஒருஇடம் இருப்பது போல.
1532. திரௌபதியின் துகில் உரிந்தாற் போல.
1533. திறந்த கதவுக்குத் திறவுகோல் தேவைப்படாதது போல
1534. திறந்த வீட்டிலே நாய் நுழைந்தாற் போல.
1535. தினை விதைத்தவன் தினை அறுப்பது போல.
1536. தின்று உமிழ்ந்த தாம்பூலத்தைத் திரும்பத் தின்ன நினைக்கமாட்டாதவன் போல.
1537. தின்றவன் இருக்க தின்னாதவன் தெண்டம் கொடுத்தது போல.

## தீ

1538. தீக்குக் காற்று உதவினது போல.
1539. தீச்சுடர் நன்னீர் சொரிந்து வளர்ப்பது போல்.
1540. தீட்டின மரத்திலே கூர்பார்க்கிறது போல.
1541. தீப்பிடித்த வீட்டில் கரிக்கட்டைக்கு பஞ்சம் இல்லாதது போல.
1542. தீமைகளைத் தெரிந்து வைத்திருப்பவன், கெடுதலாகப் பதில் சொல்லுவது போல.
1543. தீயில்லாமல் புகை வராதது போல.
1544. தீயிலிட்ட நெய் திரும்ப வரமாட்டாதது போல.
1545. தீயினாற் சூழப்பட்ட வீடு போல.
1546 தீயினாற் சுட்ட புண் போல.
1547. தீயில் விழுந்து குளித்தவன் போல.
1548. தீராத வடிக்குத் தெய்வமே சாட்சியாவது போல.
1549. தீராத வியாதிக்குத் தெய்வம் போல.

## து

1550. துஞ்சு புலி இடறிய சிதடன் போல்.
1551. துடைப்பைக் கட்டைக்குப் பட்டுக்குஞ்சம் கட்டினாற் போல.
1552. துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு போல.
1553. துணி கொடுத்தால் பிணி விலகுவது போல.
1554. துப்புக் கெட்டவனுக்கு இரட்டைப் பரிசம் போல்.
1555. தும்பை விட்டு வாலைப் பிடிப்பது போல்.
1556. துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்தாற் போல.
1557. துரியோதனன் குடிக்குச் சகுனி வாய்த்தது போல.
1558. துரும்பு பற்றிக் கடல் கடக்குந் துணிபு போல.
1559. துரும்பு பெருத்துத் தூணானாற் போல.
1560. துரும்பும் பல்குத்த உதவுவது போல.



KOHA JPL

1561. துர்ப்புத்தி மந்திரியால் அரசுக்கு ஈனமாவது போல.
1562. துலக்காத ஆயுதம் துருப்பிடிப்பது போல.
1563. துழாவிக் காய்ச்சாதது கஞ்சி ஆகமாட்டாது போல.
1564. துளசிக்கு வாசமும், முள்ளுக்குக் கூர்மையும் முளைக்கிறபோதே உண்டு போல.
1565. துறவிக்கு வேந்தன் துரும்பு போல்.
1566. துறட்டுக்கு எட்டாதது வாய்க்கும் எட்டமாட்டாதது போல.
1567. துன்பத்தில் இருப்பவன் இன்பத்தை எதிர் பார்ப்பது போல.
1568. துன்பத்தை அறியாதவன் பொறுமை பற்றிப் போதிப்பது போல.

## தூ

1569. தூக்கணாங் குருவி குரங்குக்குப் புத்தி சொன்னது போல.
1570. தூக்கி வளர்த்த பிள்ளையும், துடையில் வைத்துத் தைத்த இலையும் உருப்படாதது போல.
1571. தூங்குகிற புலியைத் தட்டி எழுப்பினது போல.
1572. தூங்குகிற நரிக்கு இரை கிடையாதது போல.
1573. தூண்டா விளக்குப் போல்.
1574. தூண்டில் நுனி மட்சத்துக்கு ஆசைப்பட்டு உயிரிழக்கும் மீன் போல்.
1575. தூண்டிற்காரனுக்கு மிதப்பு மேற்கண் போல்.
1576. தூண்டிலில் அகப்பட்ட மீன் போல.
1577. தூண்டிலைப் போட்டு வராலை இழுக்கிறது போல.
1578. தூத்துக்குடிச் சந்தையிலே துட்டுக்கொரு பெண்டாட்டி போல்.
1579. தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சியாவது போல:
1580. தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்கு உதவாதது போல.
1581. தூரின் கரும்பு தின்றாற் போல:
1582. தூற்றல் நின்றாலும் தூவானம் நில்லாதது போல.

பொதுசன நூல
யாழ்ப்பாணம்

## தெ

1583. தெரியாத நீர்நிலைகளில் நடத்தல் ஆபத்தானது போல.
1584. தென்றல் முற்றிப் பெருங்காற்றுனது போல.
1585. தெய்வம் வரங் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடாதது போல,

## தே

1586. தேங்காய் தின்றவன் இருக்க, கோம்பை சூப்பின வன் தெண்டம் இறுத்தது போல.
1587. தேடிப்போன மருந்து காலில் அகப்பட்டது போல.
1588. தேடியகொடி காலில் அகப்பட்டது போல.
1589. தேடிய பொருள் காலில் தட்டினது போல.
1590. தேய்ந்தாலும் சந்தனக்கட்டை மணம் போகாதது போல.
1591. தேரை குடித்த தேங்காய் போல.
1592. தேர் தெருத்தெருவா ஓடினாலும், தன் நிலைக்கு வந்து சேருவது போல.
1593. தேவைக்குதவாத சீதனம் போல.
1594 தேள் நெருப்பில் விழ்ந்தால் எடுத்து விட்டவனையே கொட்டுவது போல.
1595. தேறுபடு சின்னீர் போல.
1596. தேனுக்கு ஈயைப் பிடித்துவிட வேண்டாதது போல;
1597. தேன் உள்ள இடத்தில் ஈ மொய்ப்பது போல.
1598. தேனும் பாலும் போல.

## தொ

1599. தொட்டனைத் தூறும் மணற்கேணி போல,
1600. தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும் கல்வி போல.
1601. தொழுவம் புகுந்த ஆடு புழுக்கை இடாமல் போகாது போல.

## தோ

1602. தோட்டத்தில் பழம் இருக்கத் தூரத்திற்குப் போவது போல.

1603. தோட்டத்து நரி கூட்டத்தில் வரமாட்டாது போல.

1604. தோட்டப்பாய் முடைகிறவனுக்குத் தூங்கப் பாயில்லாது போல.

1605. தோட்டம் செய்கிறவனுக்குக் கறிசமைக்கக் கத்தரிக்காய் இல்லாதது போல.

1606. தோட்டி போல் உழைத்து, துரைபோலச் சாப்பிடுவது போல.

1607. தோணி போனாலும், துறை இருப்பது போல;

1608. தோல்வியில் வெற்றி காண்பது போல.

1609. தோல் இருக்கச் சுளை விழுங்கியது போல.

1610. தோளிலிருந்து செவியைக் கடிப்பது போல.

## ந

1611. நகமும் சதையும் போல.

1612. நகத்தால் கிள்ளாததை கோடரி கொண்டு வெட்டினாற் போல.

1613. நக்கவிட்ட நாய் சும்மாயிராது போல.

1614. நக்குகிற நாய்க்குச் செக்கு என்றும் சிவலிங்கம் என்றும் தெரியாதது போல.

1615. நகர வாயில் இல்லாத நகரம் போல.

1616. நச்சுவாயான் வீட்டிலே நாறல்வாயன் பெண் கொண்டது போல.

1617. நச்சு மரமானாலு ் நட்டவர் வெட்டமாட்டாதது போல.

1618. நச்சு வாயனை நாறல்வாயன் மெச்சினது போல.

1619. நஞ்சு தலைக்கேறியது போல.

1620 நடுத்தெரு பிச்சைக்கு நாணயம் பார்ப்பவன் போல.

1621. நடு ஊரில் நன்மரம் பழுத்தாற் போல.

1622 நடுக்கடலில் கப்பல் உடைந்ததோடு தெப்பமும் உடைந்தாற் போல.

1623. நடு ஊரில் நச்சுமரம் பழுத்தாற் போல.

1624. நடு ஊரில் வேதிகைச் சுற்றுக் கோட்டுக்க படுபனை போல.

1625. நடைத் தூக்கங் கொண்டவன் போல.

1626. நடக்க அறியாதவனுக்கு நடுவிதி காதவழி போல.

1627. நட்டுவன் பிள்ளைக்குக் கொட்டிக்காட்டத் தேவையில்லாதது போல.

1628. நட்டாற்றில் கைவிட்டது போல.

1629. நண்டு கொழுத்தால் வளையில் இராதது போல.

1630. நண்டு கால் விரித்தாற் போல

1631. நண்டு திண்டாட, நரி கொண்டாடுவது போல,

1632. நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்தது போல.

1633. நண்பகல் வெயிலிற்பட்ட புழுப் போல.

1634. நண்பனுக்கு நண்பன் கண்ணாடி போல.

1635. நத்தை வயிற்றில் முத்துப் பிறந்தது போல.

1636. நதி மூலத்தையும் ரிஷி மூலத்தையும் அறியமுடியாதது போல.

1637. நம்க்காகாதது நஞ்சோடொக்கும் போல்.

1638. நமன் அறியாத உயிரும் நாரை அறியாத குளமும் இல்லாதது போல.

1639. நமன் அறியாமல் உயிர் போகமாட்டாதது போல.

1640. நரிப்படைக் கொரு பாகும் போல.

1641. நரிவாலைக் கொண்டு கடல்ஆழம் பார்ப்பது போல.

1642. நரியைக் குதிரை செய்வது போல.

1643. நரியூரை விட்டு புலியூருக்குப் போக, புலியூரும் நரியூராகி விட்டது போல.

1644. நரிக்கு நிறம் மாறினாலும் குணம் மாறாதது போல.

1645. நரிமுன்னே நண்டு கரணம் போட்டது போல

1646. நரகத்திற்குப் போனவனுக்கு மீட்சி கிடையாது போல

1647. நரிக்கு ஊளையிடக் கற்றுக்கொடுக்கத் தேவையில்லாதது போல.

1648. நல்லபாம்பு ஆடியது கண்டு, நாக்குப் பூச்சி ஆடியது போல.

1649. நல்ல பெண்ணுக்கு ஒரு சொல் போல்.

1650. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போல்.

1651. நல்லார் ஒருவருக்குப் பெய்யும் மழை எல்லோருக்கும் ஆவது போல.

1652. நல்ல நிலத்தில் காஞ்சிரங்காயை முளைக்கப் போட்டாலும் தேங்காய் ஆகாதது போல.

1653. நல்லமாடு உள்ளூரிலே விலை போகிறது போல.

1654. நல்லோரை நாடறிவது போல.

1655. நல்ல மாட்டுக்கு ஒரு அடி போல; நற்பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை போல.

1656. நல்ல பால் கலந்தீமையால் கெட்டுப்போவது போல்.

1657. நல்ல மரத்திலே புல்லுருவி பாய்ந்தது போல.

1658. நவில் தொறும் நூல் நயம் போல.

1659. நள்ளிருட் காலம் போல.

1660. நளன் காப்பாற்றிய பாம்பு நளனையே கடித்தது போல

1661. நறுநெய்யுறு குடத்து எறும்பு நண்ணல் போல.

1662. நல்மணியிழந்த நாகம் போல.

1663 நன்ஞரிற் பூட்டிய சூத்திரப் பாவை போல.

1664. நனைந்த கோழி போல.

## நா

1665. நாக்குள்ள மட்டும் சுவைக்கும் சக்தி இருப்பது போல.

1666. நா இன்புற நக்கிக் கொல்லும் கவயமாப் போல.

1667. நாடு மகவுக்குதவும் நாற்றாய் போல.

1668. நாடி பார்க்கத் தெரியாத வைத்தியன் நமனுக்குச் சவால் விடுவது போல.

1669. நாடு கடந்தாலும் நாய்க்குணம் போகாது போல.
1670. நாடு காடானது போல.
1671. நாடறிந்த கூத்தாடிக்கு விளம்பரம் தேவைப்படாது போல.
1672. நாடறிந்த கடைக்கு விளம்பரம் தேவைப்படாதது போல.
1673. நாணறுந்த வில் போல்.
1674. நாணி வழிக்காசு போல.
1675. நாப்பாடஞ் சொல்லி நயமுணர்வார் போல்.
1676. நாயுங் கவிச்சட்டியும் போல.
1677. நாயும் பூனையும் போல.
1678. நாய்க்குத் தவிசிட்டாற் போல:
1679. நாய் பெற்ற தெங்கம் பழம் போல.
1680. நாய்வாலைப் பிடித்து நதி கடத்தல் போல:
1681. நாய் வெற்றெலும்பைக் கடித்துக் கடித்து இன்புறுதல் போல்.
1682. நாய் இருக்கிற இடத்தில் சண்டை இருப்பது போல.
1683. நாய் விற்ற காசு குரைக்கமாட்டாது போல.
1684. நாயை ஏவ, நாய் வாலை ஏவுகிறது போல;
1685. நாயைக் கொஞ்சினால் மூஞ்சியை நக்குவது போல.
1686. நாய் இல்லாத வீட்டில், பூனை இராசாவாவது போல.
1687. நாயும் தன் நிலத்துக்கு இராசாவாவது போல.
1688. நாய்க்கு முழுத் தேங்காய் கிடைத்தாற் போல.
1689. நாய் வேடம் போட்டால், குரைத்துத் தான் தீர வேண்டுவது போல.
1690. நாய் நக்கிச் சமுத்திரம் குறையமாட்டாது போல.
1691. நாய் வாலை நிமிர்த்த முடியாதது போல.
1692 நாய் தன் புண்ணை நக்குவது போல.
1693. நாராசத்தைக் காய்ச்சிக் காதில் ஊற்றினாற் போல.
1694 நாரை அறியாத குளம் இல்லாதது போல,
1695. நாலாறு கூடினால் பாலாறுகிறது போல.



6

1696. நாலுபிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு போல்.

1697. நாவைப் பிடிக்கிற தாகத்துக்குக் கிணறு வெட்ட நாள் பார்த்தது போல.

1698. நாவுக்கு ருசி பார்க்கும் பிச்சைக்காரன் போல.

1699. நாறல் மீனைப் பூனை பார்ப்பது போல.

1700. நாற்பது வந்தால் நரை வருவது போல.

## நி

1701. நித்தம் சாவாருக்கு அழ ஒருவரும் இல்லாதது போல

1702. நிட்டூரன் கண்ணைத் தெய்வம் கெடுப்பது போல.

1703. நித்திய கண்டம் பூரணாயுசு போல;

1704. நித்தியங் கிடைக்க மாட்டாத அமாவாசைச் சோறு போல.

1705. நித்திரை சுகம் அறியாதது போல,

1706. நிதானமாய்ச் சவாரி செய்தால் விரைவில் வீடு போய்ச் சேருவது போல.

1707. நிதியஞ் சொரிந்த நீலி போல.

1708. நிர்வாண பிரதேசத்தில் ஆடை அணிந்தவன் வைத்தியக்காரனைக் கணிக்கப்படுவது போல

1709. நிலத்திற்கு ஏற்ற விதை போல.

1710. நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடியவேண்டியது போல.

1711 நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் போவது போல,

1712 நிலையில்லாதவன் வார்த்தை நீர் மேல் எழுத்துப் போல.

1713. நில்லாத காலடி நெடுந்தூரம் போவது போல.

1714. நிலம் வைத்திருப்பவனிடம் சண்டை சச்சரவு இருப்பது போல.

1715. நிலத்தைப் பார்த்துப் பயிரிடுவது போல.

1716. நிலவும் இருளும் மாறிமாறி வருவது போல.

1717. நிழலின் அருமை வெயிலில் போனால் தான் தெரிவது போல;
1718. நிழலற்ற வெயில் இல்லாதது போல.
1719. நிலநலத்தால் நந்திய நெல்லே போல்.
1720 நிறைந்த ஆற்றிலே பெருங்காயம் கரைத்தாற் போல
1721. நிறைகுடம் ததும்பாதது போல.
1722. நிறுத்தறுத்துச் சுட்டுவைத்துப் பொன் கொள்வான் போல்.
1723. நிறை பொதியிலே கழுதை வாய் வைத்தாற் போல்
1724. நின்ற நெடுஞ்சுவர் விழுந்து குட்டிச்சுவரானது போல
1725. நின்ற வெள்ளத்தையும் வந்த வெள்ளம் கொண்டு போனது போல.

## நீ

1726 நீண்ட ஆயுளுடன் வாழ்கிறவர் கூட கடைசியில் இறப்பது போல
1727. நீண்ட இரவும் விடிந்துதான் ஆக வேண்டுவது போல;
1728. நீண்டநாள் சிறையில் இருப்பவனுக்குக் கிழவி கூட அழகாகத் தெரிவது போல.
1729. நீந்தமாட்டாதவனை ஆறு கொண்டு போனது போல
1730. நீரில்லா நாடு நிலவில்லா முற்றம் போல.
1731. நீரற்ற விடத்திலே ஆம்பல் தாள் வாடலே போல்.
1732. நீரிடைப் பாசி போல.
1733. நீரின்றி அமையாத உலகம் போல.
1734. நீருடை நிலத்து சிவந்த நீள் மணமுரம் வெப்பத்தால் தெற்றப்படாதது போல.
1735. நீரைப் பிரித்துப் பாலைப் பருகும் அன்னம் போல.
1736. நீரொழியப் பாலுண் குருகினைப் போல்.
1737. நீர்மேற் குமிழி போல.
1738. நீர் மருங்கின் கொடி போல்.

1739. நீர்ச்சுழியில் அகப்பட்ட வண்டு போல.
1740. நீர் மேல் எழுத்துப் போல.
1741. நீர் வழிப் படூஉம் புணை போல.
1742. நீர் வழி மிதவை போல.
1743. நீர் உள்ள மட்டும் மீன்குஞ்சு துள்ளுவது போல.
1744. நீர் உயர நெல் உயருவது பேசல.
1745. நீர் என்று சொல்லி நெருப்பாய் முடிந்தது போல.
1746. நீரைக்கண்டு நெல் விதைப்பது போல.
1747. நீரின்றி மீன் வாழமுடியாதது போல.
1748. நீருக்கும் மீனுக்கும் இருக்கும் ஒற்றுமையைப் போல.
1749. நீலிக்குக் கண்ணீர் இமையில் இருப்பது போல.
1750. நீள் வெயிற் கானத்தில் நல்ல நீர்த்தடம் போல.
1751. நீறுபூத்த நெருப்புப் போல.

## நு

1752. நுணலுந் தன் வாயாற் கெடுவது போல.
1753. நுரையைத் தின்றால் பசி தீரமாட்டாது போல.
1754. நுளையன் பேச்சு அம்பலத்தில் ஏறமாட்டாது போல.
1755. நுளையன் இரத்தினத்தின் பெருமையை அறியாதது போல.
1756. நுனிக்கிளையில் ஏறி அடிமரத்தை வெட்டுவது போல.
1757. நுனிக்கொம்பேறி அஃதிறந் தூக்கினற் போல.
1758 நுனிப்புல் மேய்ந்தாற் போல.
1759. நுனியின் கரும்பு தின்றாற் போல.
1760 நுனிப்புல் மேய்வதால் வயிறு நிரம்பமாட்டாது போல.

## நூ

1761. நூலும் மணியும் போல.
1762. நூலில்லாமல் மாலை கோத்தது போல.
1763. நூலளவே யாகும் நுண்ணறிவு போல.
1764. நூலுக்கு ஏற்ற சரடு போல.

1765. நூல் பலவீனமான இடத்தில் அறுவது போல.
1766. நூலில் நின்று கூத்தாடினாற் போல.

## நெ

1767. நெஞ்சு நோமென்று தலை துமிப்பான் தண்ணளி [போல்
1768. நெடுஞ்சுரத்து நின்ற தனிமரம் போல.
1769. நெடுஞ்சுழிப்பட்ட நாவாய் போல.
1770. நெடும் பகலுக்கும் அஸ்தமனம் இருப்பது போல.
1771. நெய்யில்லா உண்டி போல. [போல.
1772. நெய்யிலே விழுந்த எறும்பு வாசத்தோடு இருக்கிறது
1773. நெய்க்குடத்தில் எறும்பு மொய்த்தது போல.
1774. நெய்க்குடம் உடைந்தால் நாய்க்கு விருந்தாவது போல.
1775. நெருப்பிடை நெய் சொரிந்தாற் போல.
1776. நெருப்பிலே எண்ணெய் ஊற்றினது போல.
1777. நெருப்பிலே விழுந்த புழு துடிப்பது போல.
1778. நெருப்பு இல்லாமல் புகை வரமாட்டாது போல.
1779. நெருப்பை ஈ மொய்க்காது போல.
1780. நெருப்பென்றால் வாய் வெந்து போகமாட்டாது போல.
1781. நெருப்புப் பந்தலிலே மெழுகுப் பதுமை ஆடமாட்டாது போல.
1782. நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பாய்ந்தது போல.
1783. நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல.
1784. நெல்லினின்று பதரை வேறாகப் பிரிப்பது போல.
1785. நெல்லுக்குள் அரிசி, தவிடு, உமி இருப்பது போல.
1786. நெற்குத்தியுண்ணுது உமி குத்திக் கைசலித்தாற் போல.
1787. நெற் செய்யப் புற்றேய்ந்தாற் போல.

## நே

1788. நேராத நோன்பு சேராகாதது போல.

1789, நேர்மையும், இலாபமும் ஒரே கோணியில் இருக்காது போல.

1790. நேற்றுப் பெய்த மழையில் முளைத்த காளான் போல.

## நொ

1791. நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாட்டுப் போல.

1792. நொண்டிக்குக்கால் தான் வேண்டுவது போல.

1793. நொந்த கண் இருக்க நோகாத கண்ணுக்கு மருந்து தேடுவது போல.

1794. நொய்யரிசி கொதி பொறுக்கமாட்டாதது போல.

## நோ

1795. நோகாமல் அடிக்கிறேன், நீ ஓயாமல் அழு என்று சொன்னவன் போல.

1796. நோயாளிக்கு ஆசை வார்த்தை சொன்னாற் போல.

1797. நோயாளிக்குந்தான், நோயின் வருத்தம் தெரிவது போல.

1798. நோயாளி தலைமாட்டில் பரியாரி இருந்து அழுதாற் போல.

1799. நோயுண் மருந்து தாயுண்டாற் போல.

## ப

1800. பகலவன் முன்வரப் பாயிருள் மாய்ந்தாற் போல;

1801. பகலில் பசு தெரியாதவனுக்கு இரவில் எருமை தெரிய மாட்டாது போல.

1802. பகைவர் உறவு புகை எழா நெருப்புப் போல.

1803 பசிக்குக் கறி வேண்டாதது போல.

1804. பசித்த கணக்கன் பழங்கணக்குப் பார்த்தாற் போல-

1805. பசித்துண்பவனைப் போல,

1806. பசியா வரம்பெடைத்த தேவர் போல.

1807. பசுத்தோல் போர்த்த புலி போல.

1808. பசுமட் கலத்துள் நீர் போல;

1809 பசுமரத் தாணி அறைந்தாற் போல,

1810. பசு வால் பற்றி நதி கடத்தல் போல.

1811. பசுவுண்ட தெண்ணீர் தேம்படு அமுதம் போல.
1812. பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்தாற் போல.
1813. பச்சை மஞ்சளைப் பிளந்தாற் போல்.
1814. பச்சை மரத்திற் பேரிடி விழுந்தாற் போல.
1815. பசித்த செட்டி பாக்கைத் தின்றது போல.
1816. பசித்தவனுக்குப் பால் அன்னம் இட்டாற் போல.
1817. பசி சுவை அறியாதது போல.
1818. பசு கறுப்பானாலும் பால் கறுப்பாக மாட்டாது போல.
1819. பசு கிழமானாலும் பாலின் சுவை போகமாட்டாது போல.
1820. பசுவை அடித்துப் புலிக்குத் தானம் கொடுக்கிறது போல.
1821. பச்சைமண்ணும் சுட்டமண்ணும் ஒட்டமாட்டாது போல.
1822. பசுவிற்குப் பிரசவ வேதனை, காளைக்குக் காம வேதனை போல.
1823. பசு விழுந்தது புலிக்குத் தாயமானது போல.
1824. பஞ்சுப் பொதியில் நெருப்புப் பட்டாற் போல.
1825. பஞ்சாங்கம் போனாலும், நட்சத்திரம் போகாது போல.
1826. பஞ்சும் நெருப்பும் அருகருகே இருக்கவிடக்கூடாது போல.
1827. படிப்பில் ஆசை வைத்தவன் பாடத்தைப் பாராட்டுவது போல்.
1828. படை கொண்டவர் நெஞ்சம் போல.
1829. பட்டப்பகலிலே விண்மீன் கண்டாற் போல.
1830. பட்டப் பகல் போல.
1831. பட்டி மாட்டுக் கட்டை கட்டினது போல.
1832. படையிருந்தால் அரணில்லாதது போல.
1833. படைமுகத்திலும் அறிமுகம் வேண்டுவது போல.
1834. படுக்கப் படுக்கப் பாயும் பகையாவது போல.



124076

1835. படைக்கலம் அணிந்தாலும் பன்றி பன்றிதான் போல.
1836. பட்சி பசித்தாலும் எட்டிக் கனியைத் தின்னாதது போல.
1837. படையின் கலக்கம் பட்டவனுக்குத்தான் தெரிவது போல
1838. பட்டி நாய் தொட்டி சேராதது போல,
1839. பட்டணத்து நரியை பணங்காட்டு நரி ஏய்த்தது போல.
1840. படிதாண்டிப் பத்தினிக்கு பவிசும் பகட்டும் தேவைப் படாதது போல.
1841. படைக்குப் பயந்து செடிக்குள் பதுங்க முடியாது போல.
1842. படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோவில் போல,
1843. பட்டமரம் துளிர்க்காது போல.
1844. படிக்கிற பிள்ளை எந்தப்பள்ளிக்கூடம் போனாலும் படிப்பது போல.
1845. படத்தில் பார்க்கும் நடிகைகளை வீட்டில் பார்க்க நினைப்பது போல.
1846. பட்டி மாட்டுக்குச் சூடு போட்டாற் போல.
1847. பணக்கார அபசாரி பந்தியிலே, ஏழை அபசாரி சந்தியிலே போல
1848. பண்ணமைத் தெழுதப்பட்ட பாவை போல்
1849. பண்ணின பாவத்தைப் பட்டுத் தொலைப்பது போல.
1850. பணத்துடன் விளையாடுகிறவன் அதன் மதிப்பை அறியமாட்டான் போல.
1851. பணமுள்ள மட்டும் பணக்காரன் துள்ளுவது போல.
1852. பதறாத காரியம் சிதறாது போல.
1853. பத்துக்காதம் போனாலும் பழக்கம் வேண்டுவது போல.
1854. பதுங்கிறதெல்லாம் பாய்ச்சலுக்கு அடையாளமாவது போல.
1855. பதுமைபோல் நடிக்கிற பாசாங்குக்காரன் போல.

1856. பத்தாம் பேறு பாடையில் வைப்பது போல.
1857. பத்து மிளகு கையில் இருந்தால் பகைவன் வீட்டி லும் உண்ணுவது போல.
1858. பந்தமும் கூத்தும் விடிந்தாற் தெரிவது போல.
1859. பந்திக்கு முந்துவது போல.
1860. பந்திக்கு இல்லாத வாழைக்காய் பந்தலிலே கட்டித் தொங்குகிறது போல.
1861. பந்தியிலே இடமில்லை என்றால்; இலை பொத்தல் என்கிறவன் போல.
1862. பயன்மரம் உள்ளூரில் பழுத்தாற் போல்.
1863. பயிரிடைப் புற்களைந்து நெற்பயன் கொள்ளும் ஒரு வன் போல.
1864. பயிரைப் பாதுகாக்கும் வேலி போல.
1865. பரிதி கண்ட பங்கயம் போல.
1866. பருத்தி புடைவையாய்க் காய்த்தது போல.
1867. பருந்தின் வழி நிழல் போல.
1868. பரணி மழை தரணியெல்லாம் பொழிவது போல.
1869 பரிகாரி உறவு தெருவாசல் மட்டும் போல்.
1870. பருத்திப் பொதிக்கு ஒரு நெருப்புப் பொறி போல.
1871. பருப்பிலே நெய் வார்த்தது போல.
1872. பருப்பு இல்லாத கல்யாணம் போல.
1873. பருந்துகளுக்குப் புறுக்கள் பிறக்கமாட்டாது போல.
1874. பருந்துகள் ஈக்களைப் பிடிக்காமை போல.
1875. பரிந்திடாத சோறு பாழாவது போல.
1876. பரணி அடுப்புப் பாழ் போகாது போல.
1877. பருவகாலத்தில் பெய்யாத மழை பாழ்படுத்தி விடு வது போல.
1878. பலசரக்குக் கடைக்காரனைப் பைத்தியம் பிடித்தது போல.
1879. பல மீனினது நடுவே செல்லும் மதியத்தைப் போல.
1880. பலாப்பழத்தில் மொய்த்த ஈப்போல.
1881. பல்லுப் பிடுங்கின பாம்பு போல.
1882. பல்லற்ற பாம்பு போல.

1883. பலதுளி பெருவெள்ளம் போல்,

1884. பலத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பாவது போல.

1885. பலநாள் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவது போல,

1886. பலமரம் கண்ட தச்சன் ஒருமரமும் வெட்டமாட்டாதவன் போல.

1887. பலவாய்க்கால் ஆறுகப் பெருகுவது போல

1888. பல்லுப் போனால் சொல்லுப் போவது போல,

1889. பல்லறிந்து பாக்குப் போடுவது போல.

1890. பல்லக்கு ஏற யோகம் உண்டு, உன்னி ஏறச்சிவன் இல்லாமை போல,

1891. பலநாள் சாப்பிடாதவனுக்குக் கஞ்சியே சோறுகிறது போல.

1892. பழங்கள் பெருக்க பெருக்கக் கிளைகள் தலைகுனிவது போல்,

1893. பழைய தரித்திரனுக்குப் பணம் கிடைத்தாற் போல.

1894. பழகப் பழகப் பாலும் புளிப்பது போல.

1895. பழி ஒரு பக்கம் பாவம் ஒருபக்கம் போல.

1896. பழுத்த ஓலையைப் பார்த்துக் குருத்தோலை சிரித்தது போல.

1897. பழுத்த பழம் கொப்பிலே இருக்காது போல;

1898. பழம் நழுவிப் பாலில் விழுந்து, அதுவும் நழுவி வாயில் விழுந்தது போல:

1899. பழமரம் நாடிய பறவை போல.

1900. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல.

1901. பழுத்த இலைவிழக் கண்டு பச்சை இலை சிரித்தாற் போல;

1902. பழைய குருடி கதவைத் திறந்தமை போல.

1903. பழத்திலிருந்து அதன் மரத்தைப் புரிந்து கொள்வது போல.

1904, பழகாத பேயை விடப் பழகினபேய் மேலானது போல.

1905. பள்ள உவர்க்கடலில் பாய்ந்தோடும் வெள்ளம் போல்,

1906. பள்ளத்து வழி வெள்ளம் போல்.
1907. பல்லிக்கணக்குப் புள்ளிக்கு உதவாது போல.
1908. பல்லிக்கும் இரும்புக்கும் பதம்பார்த்து அடிப்பது போல.
1909. பள்ளத்தில் தண்ணீர் நிற்பது போல.
1910. பறக்கிற பட்சிக்குச் சிறகு ஒடிந்தாற் போல.
1911. பறைபட வாழா அசுணமாப் போல.
1912. பறை யறைந்தாற் போல.
1913. பறக்கும் குருவிக்கு இருக்கும் கொப்புத் தெரியாது போல.
1914. பறப்பான் பயிர் இழந்தான் போல்.
1915. பறியுள் மீன் போல
1916. பறக்கப் பறக்கப் பாடுபவனுக்கு பாராட்டுக்கள் கிடைக்காமை போல.
1917. பனியை நம்பி ஏர் பூட்டினது போல.
1918. பனை ஏறி விழுந்தவனைக் கடா ஏறிமிதித்தது போல.
1919. பனையிலிருந்து விழுந்தவனைப் பாம்பு கடித்தது போல
1920. பனிபெய்து குளம் நிரம்ப மாட்டாது போல.
1921. பனிப்பெருக்கிலே கப்பல் ஓடமாட்டாது போல,
1922. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சமாட்டாது போல
1923. பனை ஏறியும் பாளை தொடாது இறங்கினாற் போல.
1924. பனை நிழல் உதவாது போல.
1925. பன்றிக்குட்டி யானை ஆகமாட்டாது போல.
1926. பன்றி பல குட்டிகள் ஈனுவது போல.
1927. பவங்காயையும் பங்காளியையும் பதம் பார்த்து வெட்டுவது போல.
1928. பன்றியோடு கூடின கன்றும் மலம் தின்னுவது போல
1929. பனை மரத்தின் கீழே பாலைக்குடித்தாலும் கள் என்று நினைப்பது போல.

## பா

1930. பாக்கு வெட்டியில் அகப்பட்ட பாக்கைப் போல.
1931. பாகனை யானையே மிதித்து விடுவது போல.

1932. பாசிலைப் பந்தர் வேய்ந்தாற் போல.
1933. பாய்ச்சி பாய்ச்சி என்றழும் பாலர்க்குப் பூச்சி பூச்சி என்பது போல
1934. பாடிப் பாடிக் குத்தினாலும் பதரில் அரிசி இல்லாதது போல
1935. பாட்டி நூற்கிற நூலைப்போல.
1936. பாட்டு வாய்த்தால் கிழவியும் பாடுபவள் போல.
1937. பாட்டு இல்லாமல் பயன் இல்லாதது போல.
1938. பாடுபட்டவன் பலனை அனுபவிக்க முடியாதது போல.
1939. பாதிரியார் இல்லாமல் பிரார்த்தனை இல்லாதது போல.
1940. பாம்பின் வாய்த் தேரை போல.
1941. பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் விலாங்கு மீனைப் போல.
1942. பாம்புக்குப் பால் வார்த்தாற் போல.
1943. பாம்புக்கு மருந்து கேட்கத் தேளுக்கு மந்திரித்தது போல.
1944. பாம்புண்ட நீரெல்லாம் நஞ்சாதல் போல.
1945. பாம்புக்குப் பால் வார்த்தது போல.
1946. பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்தாலும் விசத்தையே கொடுப்பது போல.
1947. பாம்பாட்டிக்குப் பாம்பாலே மரணம் ஏற்படுவது போல,
1948. பாம்பும் கீரியும் போல.
1949. பாம்புக்கு விசம் பல்லிலே இருப்பது போல.
1950. பாம்பு வாயில் புகுந்து தப்பினது போல.
1951. பாம்பு பசியை நினைக்க, தேரை தன் விதியை நினைப்பது போல.
1952. பாம்பினால் கடிக்கப் பெற்றவன் கயிற்றைக் கண்டாலும் பயப்படுவது போல.
1953. பாம்புக்குப் படையும் நடுங்குவது போல,
1954. பாய்மரசி சுற்றிலகப்பட்ட காக்கை போல்,

1955. பாய்மரக் கொடிபோல.
1956. பாய்மரம் இல்லாத கப்பலைப்போல.
1957. பாய்கிற மாட்டுக்கு முன்னே வேதம் சொன்னாற் போல.
1958. பாராத உடைமை பாழாவது போல.
1959. பார்த்தால் பூனை பாய்ந்தால் புலி போல.
1960. பார்த்திருக்கத் தின்பவன் போல;
1961. பார்த்திருக்கத் தின்று, விழித்திருக்கக் கை கழுவுபவன் போல.
1962. பார்வையற்றவனைப் போல.
1963. பாராத பயிர் பாழாவது போல.
1964. பாலிற்படு நெய் போல.
1965 பாலுக்குப் பூனையைக் காவல் வைத்தது போல்.
1966 பாலுடன் கூடிய நீர் போல.
1967. பாலுந் தேனுஞ் சேர்ந்தாற் போல.
1968. பாலைப்பருகாது கள்ளைக் குடிப்பவர் போல.
1969. பாலை நினைந்தூட்டும் தாய் போல.
1970. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் போல்.
1971. பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்ளுவது போல;
1972. பாலை நக்காத பூனையைக் காணமுடியாது போல,
1973. பாலை ஊட்டினாலும், பாக்கியத்தை ஊட்ட முடியாது போல.
1974. பால் குடித்தவனுக்குப் பால் ஏப்பம் வருவது போல.
1975. பால் சுண்டினாலும் சுவை சுண்டமாட்டாது போல.
1976 பாலோடாயினும் காலமறிந்து உண்பது போல.
1977. பாலோடு கலந்த நீரும் பாலாகி விடுவது போல.
1978. பால் ஊட்டி வளர்த்தாலும் பாம்பின் குணம் மாறாதது போல.
1979. பால் பசுவைக் கன்றிலே தெரிவது போல.
1980. பாலுக்கு வந்த பூனை மோரைக் குடிக்காதது போல.
1981. பாலும் வெள்ளை, மோரும் வெள்ளை போல்.
1982. பால் உள்ளவன் விருந்துக்கு அஞ்சாதது போல.

1983. பால் தொட்டுப் பால் சுறப்பது போல.
1984. பாவிடை யாடு குழல் போல்.
1985. பாவத்திற்கு அஞ்சுகிறவன் போல.
1986 பாழடைந்த பழங்குட்டிச் சுவர் போல.
1987. பாழுக்கிறைத்த நீர் போல.
1988. பாழிற் போட்டாலும் பாட்டத்தில் போடவேண்டும் போல்.
1989. பாற்கடற் பனி மதிபோல்.
1990. பானையில் இருந்தால் தான் அகப்பையில் வருவது போல.
1991. பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் காட்டுவது போல.
1992 பாற்சட்டிக்குப் பூனையைக் காவல் வைத்தாற் போல.

## பி

1993. பிச்சைக்காரனுக்குப் பயந்து அடுப்பு மூட்டாதது போல.
1994. பிச்சைக்காரன் சோற்றிலே கனி புகுந்தது போல.
1995. பிச்சை எடுக்கிறவனுக்குப் பட்டுவேட்டி தேவைப் படாது போல,
1996. பிச்சைச் சோற்றுக்கு எச்சில் இல்லாதது போல.
1997. பிச்சைக்குப் பிச்சை கேட்டது போல,
1998. பிச்சைக்காரர்களிடம் பிச்சையெடுத்தால், பணக் காரனாக முடியாது போல.
1999. பிஞ்சிலே பழுத்தாற் போல.
2000. பிஞ்சிலே பழுத்தமரம் பிரயோசனப்படாதது போல.
2001. பிடித்த கொப்பும் ஒடிந்து, மிதித்த கொப்பும் ஒடிந் தாற் போல
2002 பிட்டுத் தின்று விக்கினாற் போல
2003 பிடித்து வைத்த பிள்ளையார் போல
2004 பித்தளை துலக்கினாலும் பொன் குணம் வரமாட்டா தது போல

2005 பிரிவரிய ஊசிவழிப் பின்தொடரும் நூல் போல

2006 பிரியமில்லாத மனைவியிலும் பார்க்க பேய் மேலானது போல

2007 பிரையுறு பால் போல

2008 பிரிந்த கன்றைத் தேடி திரும்பி வரும் பசுப்போல

2009 பிள்ளைப் பெற்றவளைப் பார்த்து மலடி பெருமூச்சு விட்டது போல்

2010 பிள்ளையாரைப் பிடித்த சனியன் அரச மரத்தையும் பிடித்தது போல

2011 பிள்ளையாரைப் பிடிக்கப்போய் குரங்காக முடிந்தது போல

2012 பிள்ளையில்லாச் செல்வங்கள் ளியின் சோறே போல

2013 பிள்ளை அருமை பெற்றவளுக்குத்தான் தெரிவது போல

2014 பிள்ளை அருமை மலடிக்குத் தெரியமாட்டாதது போல

2015 பிள்ளை இல்லாத வீட்டில், கிழவன் துள்ளி விளையாடுவது போல

2016 பிள்ளைக்கு விளையாட்டு, சுண்டெலிக்குச் சீவன் போகிறது போல

2017 பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது போல

2018 பிள்ளைவரத்துக்குப் போன இடத்திலேயே புருடனை பறி கொடுத்தது போல

2019 பிள்ளை பெறுமுன் பெயர் வைப்பது போல

2020 பிறர்மண் கொள்வான் சென்று தம் மண்ணும் இழத்தல் போல்

2021 பிறவிக் குருடனுக்குத் தெய்வம் கண் கொடுத்தது போல

2022 பிறவிக் குருடனுக்குப் பார்வை கிடைத்தது போல

2023 பிறவிக் குணம் பொங்கல் இட்டாலும் போகாதது போல

2024 பின்வாங்குதலின்போது, நொண்டிகள் தான் முன்னணியில் இருப்பது போல

2025 புடத்தின் மாற்றுயரும் பொன்னே போல.
2026. புடம் போட்டால் பொன்வேறு, களிம்பு வேறு போல
2027. புண்ணிலே கோல் இட்டது போல.
2028. புண்ணியத்துக்கு உழுதமாட்டைப் பல்லைப்பிடித்துப் பதம் பார்த்தது போல.
2029. புண்ணியத்துக்குக் கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டது போல.
2030. புண்ணியம் பார்க்கப்போய், பாவம் பின்னே வந்தது போல.
2031. புதல் மறைந்து வேட்டுவன் புள் சிமிழ்த்தற்று போல
2032. புதுக்குடத்தில் வார்த்த தண்ணீர் போல்.
2033. புதுமணவறைப் பெண் போல.
2034. புது வெள்ளம் போல,
2035. புதையல் காத்த பூதம் போல.
2036. புதையல் எடுத்தவனைப் போல.
2037. புத்திகெட்ட இராசாவுக்கு மதிகெட்ட மந்திரி போல
2038. புதையல் அகப்பட்டது போல.
2039. புதிய வெள்ளம் பழைய வெள்ளத்தை அடித்துக் கொண்டு போனது போல.
2040. புதுப் புடைவையிலே பொறிபட்டது போல.
2041. புத்தியுள்ள மனைவி புதையலுக்குச் சமமானது போல
2042 புத்தியீனர்கள் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வது போல.
2043. புத்தம் புதிய மலர்கள் அளிக்கும் இன்பம் போல.
2044 புதரைக் கண்டு பயப்படுகிறவன் பறவையைப் பிடிக்க முடியாதது போல.
2045. புதிய துடைப்பங்கள் சுத்தமாகப் பெருக்குவது போல.
2046. புதிய மொந்தையில் பழைய கள் போல்.
2047. புதிய பாட்டில் பழைய கருத்துக்கள் இருப்பது போல
2048; புத்தியுள்ளவனுக்கு பொருளில்லாதது போல.
2049. புயற்காற்றினால் அசைக்கப்படாத குன்று போல.
2050. புயலுக்குப் பின் அமைதி ஏற்படுவது போல.

பொதுசன நூ
யாழ்ப்பாண

2051. புயலில் அகப்பட்ட கலம் போல
2052. புரையற்ற பாலிலுள் நெய்கலந்தாற் போல.
2053. புருடன் இல்லாத வீடு போல.
2054. புல்நுனி மேல் நீர் போல.
2055. புலி முழக்கம் கேட்ட புல்வாய் போல்.
2056. புலிப்பால் குடித்தவன் போல்.
2057. புலியும் பசுவும் பொருந்தி வாழ்ந்தாற் போல,
2058. புலியைக் கண்ட மான் போல.
2059 புலிக்குகையிலே புகுந்த மானைப் போல.
2060 புலி அடிக்கு முன்னே கிலி அடித்தது போல.
2061. புலிக்குப் பிறந்தது பூனையாக மாட்டாதது போல.
2062. புலி பசித்தாலும் புல்லைத் தின்ன மாட்டாதது போல.
2063. புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம் போல்.
2064. புலால் விற்ற பணம் மணக்காதது போல.
2065. புல்லைத் தின்னாத மாடு போல.
2066. புளியந்தோடும் பழமும் போல.
2067. புளி கண்டார்க்கு நாவில் புனலூறுமா போல்.
2068. புள்ளிக் கணக்கன் பள்ளிக்கு ஆகமாட்டாதவன் போல.
2069. புள்ளிப் பொறி பாய்ந்த மூங்கில் கொள்ளிச் சாம்பலானாற் போல.
2070. புறக்குடத்து வார்த்த நீர் போல.
2071. புற்றிலே ஈசல் புறப்பட்டது போல.
2072. புற்றிலே கிடந்த புடையன் எழும்பினது போல.
2073. புனையா ஓவியம் போல.
2074. புனித யாத்திரை போனாலும் கழுதை குதிரையாக மாறமாட்டாதது போல.

## பூ

2075. பூசப் பூசப் பொன்னிறமானது போல.
2076. பூசையிலே கரடி புகுந்தது போல.

2077. பூட்டுந் திறப்பும் போல.
2078 பூத்ததெல்லாம் காயாக மாட்டாதது போல.
2079. பூமி ஆளலாமென்று மனப்பால் குடிக்கிறது போல.
2080. பூ மலர்ந்து கெட்டது போல.
2081. பூ விற்ற கடையிலே புல் விற்பது போல.
2082. பூ விற்ற காசு மணக்கமாட்டாதது போல.
2083. பூவும் மணமும் போல.
2084. பூவரசின் பழுப்புப் போல.
2085. பூவாதே காய்க்கும் மரம் போல.
2086. பூவினிற் பொலிகின்ற கந்தம் போல.
2087. பூவுடன் கூடிய நாரும் மணம் பெற்றாற் போல.
2088 பூனையை வளர்த்துப் புலியிடம் விட்டது போல,
2089. பூனையை வளர்த்து நாயிடம் விட்டது போல-
2090. பூவிருக்கப் பொன்னுக்கு அழுதது போல.
2091. பூனை முன் கிளி போல'
2092. பூனை வாய் எலி போல.
2093. பூனை குட்டி போட்டது போல.
2094. பூனை பால் குடிக்கிறது போல.
2095. பூனை குறுக்கே வந்தாற் போல.
2096. பூனை திண்டாட, நாய் கொண்டாடுவது போல.
2097. பூனை போல் பதுங்கிப் புலி போல் பாய்ந்தவன் போல,
2098 பூனை பதுங்குவது போல.
2099 பூனை வாய் எலி புலம்பித் தவிக்கிறது போல
2100. பூனைக்குத் தானமும் தவமும் இல்லாதது போல.
2101. பூனைக்குக் கும்மாளம் வந்தால் பிற்றல் பாயைச் சுரண்டுவது போல.
2102. பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிக்குச் சீவன் போகிறது போல.
2103. பூனையைக் கண்டு புலி அஞ்சமாட்டாது போல?
2104 பூனையைக் கண்ட கிளி போல.
2105. பூனை அழுதாலும் நாய் விடமாட்டாது போல.

2106. பூனையும் நாயும் சண்டை பிடிப்பது போல.
2107. பூனை இல்லாத நேரத்தில் எலிகள் கொண்டாடுவது போல.
2108. பூனைக்குப் பயந்து புலியிடம் போவது போல.
2109. பூனையை மடியில் கட்டிக் கொண்டு சகுனம் பார்ப்பது போல.

## பெ

2110. பெட்டி பீற்றலாயினும், வாய்கட்டுத் திறம் போல?
2111. பெட்டிப் பாம்பு அடங்கினாற் போல (போல.
2112 பெட்டைக் கோழி கூவிப்பொழுது விடிய மாட்டாது
2113. பெண்ணுக்குப் பொன்னிட்டுப் பார்ப்பது போல.
2114. பெருங்காற்று இடிகரை போல,
2115. பெருங்காயம் இருந்த இடம் வாசனை போகாதது போல.
2116 பெருமாள் நினைத்தால் வாழ்வு குறையாதது போல.
2117. பெருநெருப்புக்கு ஈரமில்லாதது போல.
2118. பெற்ற இளங்கன்றைப் பிரியாமற் பின்னோடிச் சுற்றும் பசுப் போல.
2119. பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமண போசனம் செய்வித்தது போல.
2120. பெற்றவளுக்குத் தான் பிள்ளை அருமை தெரிவது போல.
2121. பெறாத மலடிக்குப் பிள்ளை அருமை தெரியாதது போல.
2122. பெற்றவளிடத்தில் கற்ற வித்தையைக் காட்டுவது போல.
2123. பெற்றவள் பிச்சை எடுக்க, பிள்ளை கோதானம் செய்வது போல;

## பே

2124. பேசக்கற்ற நாய் வேட்டை பிடிக்காதது போல.
2125. பேய்க்கு வேப்பிலை போல்.



124076
4656 cc

2126. பேய் பிடித்தவன் செயல் பேய்ச் செயல் போல,
2127. பேய் இன்னொரு பேயின் வீட்டிற்கு வராதது போல,

## பொ

2128. பொடி மீனெல்லாம் பெருமீனுக்கு இரையாவது போல.
2129. பொதிமாடு சுமந்தாற் போல்.
2130. பொந்து ஆயிரம் புளி ஆயிரம் போல்.
2131. பொம்மலாட்டுக்கும் தோலுருப் போல.
2132. பொய்யா வானம் புதுப்பெயல் பொழிதல் போல.
2133. பொரிமாவை மெச்சின பொக்கை வாயனைப் போல.
2134. பொல்லாத காலத்துக்குப் புடைவையும் பாம்பாகும் போல.
2135. பொல்லாதவர் சங்காத்தம் உப்பு மண்ணில் விழுந்த நீர் போல.
2136 பொல்லாத பிள்ளையானாலும் பெற்ற தாய் தள்ளமாட்டாள் போல.
2137. பொன்னுக் கொடுத்து அடி வாங்கினது போல.
2138. பொன்னாற் குடத்தில் வார்த்த தெள்ளமுதம் போல.
2139. பொறியறு பாவை போல்.
2140. பொற்குன்றஞ் சேர்ந்தோர் காக்கையும் பொன்னாதல் போல;
2141. பொறுத்தார் பூமி ஆள்வது போல.
2142 பொற்கலம் ஒலிக்காது, வெண்கலம் ஒலிக்கும் போல்:
2143. பொற்காப்புக்கு ஆசைப்பட்டு, புலியின் கையில் அகப்பட்டது போல.
2144. பொன் காத்த பூதம் போல.
2145. பொன்னைச் சோதிப்பது நெருப்பு போல்.

2146. பொன்படைத்தான் தன்னால் பொன்னுக்குப் பயனில்லாதது போல.
2147. பொன்னுடை விரித்தாற் போல.
2148. பொன்னாற் செய்த பூங்கொடி போல.
2149. பொன்னின் நலம் சுட்டறிவது போல.
2150. பொன்னின் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டுவது போல.
2151. பொன்கத்தி என்று கழுத்தை அறுக்கக் கூடாது போல.
2152. பொன்னுக்குத் துருப் பிடிக்க மாட்டாது போல.
2153. பொன் செருப்பானாலும் காலுக்குத் தான் உதவுவது போல.
2154. பொன்னிலே கலவை இருப்பது போல.
2155. பொன்குடம் உடைந்தால் பொன்னாகும் போல்.
2156. பொன்னின் குடத்திற்குப் பொட்டு இட்டாற் போல.
2157. பொன்னின் குடத்திற்குப் பூமாலை வேண்டாதது போல்.

## போ

2158. போக்கற்ற நாய்க்குப் போனதெல்லாம் வழியாகத் தோன்றுவது போல.
2159. போக்கிடமற்ற முயல் பொந்தில் நுழைந்தது போல.
2160. போக்கிரிக்குப் போக்கிரி வேண்டுவது போல.
2161. போர்முனையிலே ஆயுதந் தேடுவது போல.
2162. போரைக் கட்டி வைத்து விட்டுப் பிச்சைக்குப் போனது போல.
2163. போரோடு தின்கிற மாட்டுக்குப் பிடுங்கிப் போட்டுக் கட்டாதது போல.
2164. போர் மிதிக்கிற மாட்டை வைக்கோல் தின்னாமல் தடுக்க முடியாது போல.

2165. போரடிக்கிற மாட்டின் வாயைக் கட்டக் கூடாதது போல.

2166. போன சனியனைத் தாம்பூலம் வைத்தழைத்தாற் போல.

2167. போன சுரத்தைப் புளியிட்டு அழைத்தாற் போல.

2168. போன மச்சான் பூமணத்தோடே திரும்பி வந்தாற் போல.

2169. போனமுயல் பெரிய முயல் போல்.

ம

2170. மகாராசன் கல்யாணத்தில் நீராகாரம் நெய்பட்டபாடு போல்.

2171. மகத்திற் புக்கதோர் சனி போல.

2172. மகனை மகிழ வைக்கும் தந்தை போல்.

2173. மங்குலைக் கண்ட மயில் போல.

2174. மஞ்சு சூழ்ந்த மதி போல்.

2175. மடுத்த வாயெல்லாம் பகடு போல.

2176. மடை திறந்த வெள்ளம் போல.

2177 மடைவாய்க் கொக்குப் போல.

2178. மட்குடத்து உள்ள நீர் கசிவது போல.

2179. மடியிலே பணம் இருந்தால் வழியிலே பயம் போல.

2180. மடியிலே பூனையைக் கட்டிக் கொண்டு சகுனம் பார்ப்பது போல.

2181. மடத்தைக் கட்டி மரநாயைக் காவல் வைத்தது போல.

2182; மடியைப் பிடித்துக் கன்னை வாரித்து, மயிரைப் பிடித்துக் காசு வாங்குவது போல.

2183. மட்டி எருக்கிலை மடல் மடலாய்ப் பூத்தாலும், மருக் கொழுந்து வாசம் வரமாட்டாதது போல.

2184. மணமுள்ள மலரை வண்டுகள் சூழ்ந்தாற் போல.

2185. மணமுற்ற பொன்மலர் போல.

2186. மணற் சோற்றிற் கல் ஆய்வது போல.
2187. மணிக்கலம் கதுவாய்ப் பட்டது போல.
2188. மணியும் ஒளியும் போல்.
2189. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போல.
2190. மண் குடம் போல.
2191. மண்மாண் புனை பாவை போல்.
2192. மண்டை உள்ளவரையில் சனி போகாது போல.
2193. மதங் கொண்ட யானையைப் போல.
2194. மதிக்கண் மறுப் போல.
2195. மதியைப்பிரிந்த வான் போல.
2196. மதில் மேற் பூனை போல.
2197. மதுவுண்ட குரங்கு போல.
2198. மத்திட்ட தயிர் போல.
2199. மந்திரிக்கும் மதிக்கேடு ஏற்படுவது போல.
2200. மண்பூனை எலி பிடிக்க மாட்டாதது போல.
2201. மணத்தைப் பார்த்து பூவெடுப்பது போல.
2202. மண்ணுக்கட்டி மாப்பிள்ளைக்கு எருமுட்டை பணி காரம் போல.
2203. மதமற்ற மனிதன், கடிவாளம் இல்லாத குதிரைக்குச் சமமானது போல.
2204. மயிர் சுட்டுக் கரியாகாதது போல.
2205. மயிலைக் கண்டு வான்கோழி ஆடினாற் போல.
2206. மரம் வெட்டுகிறவனுக்கு நிழலும், மண் தோண்டு கிறவனுக்கு இடமும் கொடுப்பது போல.
2207 மரபு அறியாதவன் மணம் பேச வந்தாற் போல.
2208. மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி அழைப்பார் வேண்டாமை போல.
2209. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் போல.
2210. மரத்தை இலை காப்பது போல.
2211. மரம் ஏறிக் கைவிட்டவன் கெட்டது போல.
2212. மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான் போல்.
2213. மரணம் நெருங்கும்போது அன்னப்பறவை பாடுவது போல.

2214. மரம், தன்னை வெட்டுகிறவனுக்கு நிழல் கொடுப்பது போல.
2215. மரத்தின் நிழலிலிருந்து கனிபறிக்க முடியாது போல;
2216. மரத்திலிருந்து விழுந்தவனை மாடு மிதித்தது போல.
2217. மருமகளும் மாமியாராகும் காலம் வரும் போல்.
2218. மலத்தைக் கண்ட நாய்க்கு வாயூறுவது போல.
2219. மலைப்பாம்பு புரள்வது போல.
2220. மலையும் மலையும் மோதினாற் போல.
2221. மலைமிசைத் தோன்றும் மதியம் போல;
2222. மலைமிசை விளக்குப் போல;
2223. மலையுடன் மண்ணாங்கட்டி எதிர்ப்பது போல.
2224. மல்லாந்து படுத்து எச்சில் உமிழ்வது போல.
2225. மலடிக்கு மகப்பேறு வருத்தம் தெரியாதது போல.
2226. மலடியைப் பிள்ளை பெறச்சொன்னது போல.
2227. மலிந்த சரக்கு சந்தைக்கு வருவது போல.
2228. மலையைச் சிற்றுளி துளைத்து விடுவது போல.
2229. மலரும் மணமும் போல.
2230. மலையைக் கல்லி எலியைப் பிடித்தது போல.
2231. மலருக்கு மணம் அவசியமாகிறது போல.
2232. மழைக் கொண்டலில் மின்னுக்கு ஒளித்தாற் போல.
2233. மழைமுகங் கண்ட பயிர்முகம் போல.
2234. மழைமுகங் காணாத பயிரைப் போல;
2235. மழைவிட்டும் தூவானம் விடாதது போல;
2236. மழைக்காலத்தில் வெயில் எறிப்பது போல.
2237. மழை இல்லாவிட்டால் நீர் இல்லாதது போல.
2238. மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி போல்;

## மா

2239. மாங்கொட்டையில் வண்டு புகுந்தது போல.
2240. மாடம் இடிந்தால் கூடம் போல.
2241. மாடு கிழமானாலும் பாலின் சுவை குன்றாதது போல;
2242. மாடு மேய்க்காமற் கெட்டது போல.

2243. மாடு நினைத்த இடத்தில் தொழுவம் கட்டமுடியாது போல.
2244 மாடு உயிருக்கு அழ, இறைச்சிக்காரன் இறைச்சிக்கு அழுதது போல:
2245 மாட்டை நடையில் பார்ப்பது போல.
2246. மாட்டுக்கு மேய்ப்பும் குதிரைக்கு தேய்ப்பும் போல.
2247. மாணிக்கம் விற்ற ஊரில் மண்கூடை சுமந்தது போல.
2248. மாதா ஊட்டாத சோற்றை மாங்காய் ஊட்டினது போல.
2249. மாநிலத்திற்கு மணி விளக்குப் போல.
2250. மா பழுத்தால் கிளிக்குக் கொண்டாட்டம் போல.
2251. மாமியாருக்கும் ஒரு சமயம் மருமகளாய் இருந்தது போல.
2252. மார்புக்குத் தகுந்த மாராப்புப் போல.
2253. மாரியின்றேல் தானியம் இல்லை போல.
2254. மார்கழி மழை மண்ணுக்கு உதவாதது போல.
2255. மாரிக்காலத்து மழை போல.
2256. மாரிக்கால மதி போல.
2257. மாரிக்காலத்தில் வெயில் எறிக்கிறது போல.
2258. மாவுக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை போல.
2259. மாவுக்குத் தக்க பணிகாரம் போல.
2260. மானைக்கட்டி மானைப் பிடிப்பது போல.
2261. மான் கூட்டத்தில் புலி புகுந்தது போல.

## மி

2262. மின்மினி ஒளி போல.
2263. மின்னொளி தோன்றி மறைந்தாற் போல.
2264. மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை போல்.
2265. மின்மினிப் பூச்சியின் வெளிச்சம் இருளைப் போக்காதது போல.
2266. மின்னுவதெல்லாம் பொன்னல்ல போல்.
2267. மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் [போல.
2268. மிளகு சிறுத்தாலும் காரம் பெரிது போல.

தேசிய நூலகம் நூலக சேவை

## மீ

2269. மீகாமனில்லா மரக்கலம் போல.
2270. மீனை மீன் விழுங்கினாற் போல.
2271. மீன் குஞ்சுக்கு நீந்தப் பழக்கத் தேவையில்லாதது போல.
2272. மீன் இறந்த போதே சினையும் இறந்து போனது போல.
2273. மீனைக் கருவாடாக மாற்றலாம்; கருவாட்டை மீனாக மாற்றமுடியாதது போல.
2274. மீனுக்குத் தண்ணீர் பலம் போல்.
2275. மீன் துடிக்கிறதென்று கொக்கு பரிதாபப்படுகிறது போல.
2276 மீன் பிடிக்கிறவனுக்குத் தூண்டிலிற் கண் போல.
2277. மீன் துள்ளும் நீர் உள்ளமட்டும் போல.
2278. மீன் பிடிக்கிறவன் வீட்டில் கறிக்கு மீன் இல்லாதது போல.

## மு

2279. முக்கால் பணத்துக் குதிரை மூன்று பணத்துப் புல் தின்றாற் போல.
2280. முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் வெள்ளைக் கொக்காக மாட்டாதது போல.
2281. முகத்துக்கு முகம் கண்ணாடி போல.
2282. முகில் தழுவும் மாளிகை அமைப்பவனுக்கு, மண் குடிசை கூட சொந்தமில்லாதது போல.
2283. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல.
2284. முட்டையிடுகிற கோழிக்கு வருத்தம் தெரிவதுபோல்.
2285. முடவனுக்கு நொண்டி சண்டப் பிரசண்டன் போல.
2286. முட்ட நனைந்தவனுக்குக் கூதல் இல்லை போல்.
2287. முட்டையிடுமுன் குஞ்சு எண்ணுவது போல.
2288. முட்பூவில் தேன்போல.
2289. முதலை பிடித்தது போல.

2290. முதலியார்டம்பம் விளக்கெண்ணெய்க்குக் கேடுபோல்.

2291. முதற்கோணல் முற்றுங்கோணல் போல்.

2292. முதுகிலே புண் உண்டானால் செடியிலே நுழையப் பயம்போல்.

2293. முத்தால் நத்தை பெருமைப்படுவது போல்.

2294. முத்தும் பவளமும் முறைமுறையாய்க் கோத்தது போல.

2295. முதிர்ந்த கோழிகள் குஞ்சுகளின் கொடிய பகைவன் போல்.

2296 முந்திவந்த செவியைப் பிந்திவந்த கொம்பு மறைப்பது போல.

2297. முயற்கொம்பு போல.

2298. முயலை விட்டுக் காக்கை பின் போனது போல.

2299. முயலை எழுப்பிவிட்டு, நாய் பதுங்கியது போல.

2300 முருங்கைக்காய் என்றதும் முறிந்ததாம் பத்தியம் போல்.

2301. முருங்கை பருத்தாலும் தூணுக்கு உதவாதது போல.

2302. முழுப் பூசினிக்காயை சோற்றில் மறைப்பதுபோல.

2303. முள்ளுமேல் சேலையைப் போட்டால் மெல்லமெல்ல எடுக்கவேண்டும் போல்;

2304. முள்ளை முள்ளால் தான் எடுக்கவேண்டும் போல்.

2305. முறுக்கி வளர்க்காத மீசையும் அடித்து வளர்க்காத பிள்ளையும் பாழ்போல.

2306. முற்றின மரத்திலே தான் வைரம் இருக்கும் போல்.

2307. முன்கை நீண்டால் முழங்கை நீளும் போல்.

2308. முன்பின் அறியாதவருக்கு முத்தம் இல்லை போல்.

2309 முன் அளந்த நாழி பின் அளக்கும் போல்.

மூ

2310. மூக்கறுத்த மூளி காதறுத்த மூளியைப் பழித்தது போல;

2311. மூக்கறுபட்டவனுக்கு மூக்குத்தி தேவைப்படாதது போல.

2312. மூக்குத்தி அணியாத பெண், நட்சத்திரம் இல்லாத வானம் போல்.

2313. மூக்குத்தியில்லாத மூக்கைப் போல.

2314. மூக்குள்ள மட்டும் சளி உண்டு போல்

2315. மூக்குள்ள மட்டும் மணக்கலாம் போல்.

2316. மூக்குச் சளியைச் சிந்தவேண்டுமேயன்றி மூக்கையே வெட்டக் கூடாது போல.

2317. மூக்கிலே புல்லுக் குத்தும்போது முயலுக்குக் கோபம் வந்தது போல.

2318. மூட்டுப் பூச்சி போல.

2319. மூடிவைத்த புண் ஆறாதது போல.

2320. மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்துவது போல.

2321. மூடியவாய் ஈசல் பிடிக்காதது போல.

2322. மூழ்கித் தவிப்பவனுக்கும் புல்லும் பற்றுக்கோலாகும் போல்.

2323. மூளிச்சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் போதும் போல்.

2324. மூன்று முழமும் ஒருசுற்று, முப்பது முழமும் ஒருசுற்று போல்.

## மெ

2325. மெல்ல மெல்ல பாயும் தண்ணீர் கல்லையும் குழியப் பாயும் போல்.

2326. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் விழிப்பது போல.

2327. மெழுகின வீட்டிலே நாய் நுழைந்தது போல.

2328. மெழுகுவர்த்தி, அனைவருக்கும் ஒளிவழங்கி, தன்னையே அழித்துக் கொள்ளும் போல்.

2329. மெழுகை உருகவைக்கும் அதே உஷ்ணம் தான் களிமண்ணைக் கெட்டியாக்குகிறது போல.

2330. மெல்ல இருப்பினும் நாயிருந்தது போல,

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## மே

2331. மேடும் பள்ளமும் சரிசமமாக இருக்கமாட்டா போல.
2332. மேட்டில் ஏறினால் முத்தாச்சி, பள்ளத்தில் இறங்கினால் அத்தாச்சி போல்.
2333. மேட்டுக்கு விதைத்த விதைபோல்.
2334. மேய்கிற கழுதையைக் கத்துகிற கழுதை கெடுத்தது போல,
2335. மேய்த்துத் தெளியாத மாடு தேய்த்துத் தெளியும் போல்.
2336. மேருவைச் சார்ந்த காகமும் பொன்னிறம் போல்;
2337. மேலே ஏறுதவன் கீழே விழமாட்டான் போல்
2338. மேற்கே மழை பெய்தால் கிழக்கே வெள்ளம் வருவது போல்

## மொ

2339. மொட்டைத் தலையன் போருக்கு அஞ்சான் போல்.
2340. மொட்டைத் தலைச்சியைக் கூந்தலழகி என்பது போல்.
2341. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல்.

## மோ

2342. மோசனக் கல்லானாலும் பளு ஏறினால் உடையத்தான் செய்யும் போல்.
2343. மோட்சத்தின் வாசல்தான் கல்லறை போல்,
2344 மோதிரத்தைக் கண்ட காக்கை போல்,
2345. மோப்பக் குழையும் அனிச்ச மலரைப் போல;
2346. மோர் சுடுகிறதென்று ஊதிக்குடிக்கிறது போல.
2347. மோருக்குப் போய் மொந்தையை ஒளிப்பது போல.

2348, யாற்றொழுக்குப் போல,

2349. யானைக்கு முன் பூனை போல.

2350. யானை தின்ற விளாங்கனி போல.

2351. யானைமேல் போகிறவனைச் சுண்ணாம்பு கேட்பது போல.

2352. யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லுவது போல,

2353. யானையால் யானையைப் பிடிப்பது போல.

2354. யானை கட்டக் கயிறு தானே எடுத்துக் கொடுப்பதைப் போல.

2355. யானை கண்ட பிறவிக்குருடர்கள் போல.

2356. யானை இருந்து அரசாண்ட இடத்தில், பூனை இருந்து புலம்பி அழுதது போல.

2357. யானையும் யானையும் மோதும்போது இடையில் அகப்பட்ட கொசுகு போல.

2358. யானை வாயிலே போன கரும்பு போல.

2359. யானைக்கும் அடிசறுக்கும் போல.

2360. யானைக்கொரு காலம், பூனைக்கொரு காலம் போல.

2361. யானை செத்தாலும் ஆயிரம் பொன் போல,

2362. யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே போல,

2363. யானை வேகம் அடங்கும் அங்குசத்தினால் போல்

2364. யானையின் பசி சோளப்பொரியால் அடங்காது போல்

2365 யானைக்கு கோவணம் கட்டமுடியாதது போல

2366. யானை ஒருகுட்டி, பன்றி பலகுட்டி போல்,

2367. யானை விழுந்தால் தந்தம், புலி விழுந்தால் தோல் போல்

2368 யானை பார்க்க வெள்ளெழுந்து என்று சொல்வது போல

2369. யானை ஆசார வாசலைக் காக்கும்; பூனை புழுத்த மீனைக் காக்கும் போல்

2370. யானை படுத்தால் குதிரை உயரம் போல்.

2371. யானையின் வாலைப்பிடித்துக் கரையேறுவது போல.

2372. யானை மேய்கிற காட்டில் ஆட்டுக்குட்டிக்குத் தழை கிடைக்காதது போல

## வ

2373. வங்கம் தின்றால் தங்கம், வங்கம் கெட்டால் பங்கம் போல்.

2374. வடையைத் தின்ன வேண்டுமேயொழிய துளையை எண்ணக்கூடாது போல.

2375. வண்டினம் பூத்தொழி கொம்பின்மேற் செல்லாதது போல்.

2376. வண்டியிலே ஓடமும் ஏறும்; ஓடத்திலே வண்டியும் ஏறும் போல்.

2377. வண்ணானிடத்தில் துணியைப்போட்டு, சொக்கின்பின்னால் அலைந்தாற் போல்.

2378 வண்டியின் மோசமான சக்கரம் அதிகமாகச் சத்தம் செய்யும் போல்.

2379. வண்டி தடம் புரண்டு போகிறது போல.

2380. வணங்கின வில் தைக்கும் போல்:

2381. வதங்கிய இலைகளின் நடுவே ஓர் இளந்தளிர் தோன்றுதல் போல.

2382. வந்ததெல்லாம் கொள்ளும் மகாராசன் கப்பல் போல்

2383. வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தைக் கொண்டு போனது போல.

2384. வயிற்றிலே பாலை வார்த்தது போல.

2385. வயிற்றுப் பிள்ளையை நம்பி, கைப்பிள்ளையை விட்டது போல.

2386. வயிறு நிறைந்ததும் மங்கையரைச் சுற்றும் மனம் போல.

2387. வயலுக்குச் சொந்தமில்லாதவன் அறுவடைக்கு அரிவாளைத் தூக்கிக்கொண்டு வருவதைப் போல.

2388. வயதான பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது கொடுக்கறுந்த தேளைப் பிடித்து விளையாடுவது போல
2389 வயிற்றுக்குச் சோறு வேண்டும், நாக்குக்குப் பேச்சு வேண்டும் போல்.
2390. வருகிற வினை வழியில் நிற்காது போல.
2391. வரவுக்குத் தக்க செலவு, மாப்பிள்ளைக்குத் தக்க மஞ்சம் போல்.
2392. வலையிற் சிக்குண்ட மானைப் போல.
2393. வலையினின்றுத் தப்பியோடும் மான் போல.
2394. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் போல்.
2395. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு போல்
2396. வலியவந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளியது போல்,
2397. வலியவனுக்கு இடம்கொடுத்தால், வயிற்று வலிக்கு இடம் கொடுத்தது போல.
2398. வலையிற் சிக்கிய மீனைப் போல.
2399. வல்லவன் ஆட்டின பம்பரம் மணலிலும் ஆடும்போல்
2400. வலிமை வழக்குக்கு அஞ்சாதது போல.
2401. வழிகாட்டுங் கைகாட்டி போல.
2402. வழிநடை வார்த்தை வாகனம் போல்.
2403. வழியிலே கிடக்கிற கோடரியை எடுத்துக் காலிலே போட்டுக் கொள்வது போல.
2404. வழுவி விழுவோனைச் சடுதியில் ஒருவர் தாங்கினாற் போல.
2405. வழியிலே போகிற சனியனை விலைகொடுத்து வாங்கினாற் போல.
2406. வழியிலே கண்ட குதிரைக்கு வைக்கோல்புரி கடிவாளம் போல.
2407. வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தது போல.
2408. வளர்த்த நாய் முகத்தைப் பார்க்கிறது போல.
2409. வளர் மதியம் போல்.
2410. வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தது போல.

2411. வளர்ந்த உயரத்தை வாசற்படி காட்டுவது போல
2412 வளரும் காய் பிஞ்சிலே தெரிவது போல.
2413. வளரும் பயிரை முளையில் தெரியும் போல.
2414. வளரும் பிள்ளை இளமையிலே தெரிவது போல.
2415. வறுத்த பயறு முளைத்தாற் போல,
2416. வறியவன் இளமை போல.
2417. வற்றக் காய்ச்சிய கன்னற்பாகு போல.
2418. வற்றிய ஓலை சலசலக்கும் போல.
2419 வன்பாற்கண் வற்றல் மரந் தளிர்த்தது போல்;

## வா

2420. வாகனம் உள்ளவன் நடைக்கு அஞ்சான் போல்.
2421 வாக்கினால் கெட்ட கழுதையை, அதன் போக்கிலே விட்டுப் பிடிப்பது போல.
2422. வாடகைக் குதிரை களைப்படையாதது போல.
2423. வாடும் பயிருக்கு வான் மழை போல.
2424. வாணிக முதல் போல.
2425. வாணிகர் ஆட்டும் செக்கை வளையவரும் எருதுகள் போல;
2426, வாதம் ஊதி அறிய வேண்டும், வேதம் ஓதி அறிய வேண்டும் போல்.
2427. வாய் காய்ந்த புலி ஆள் மேலே விழுந்தது போல.
2428. வாய்க் கொழுப்புச் சீலையில் வடிந்தது போல.
2429. வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பும் அணைந்தன போல.
2430. வாய் இருந்தால் வங்காளம் போகலாம் போல்.
2431. வாய்க்குக் கை உபசாரம் செய்வது போல.
2432. வாய் நல்லதானால், ஊர் நல்லாயிருப்பது போல;
2433. வாய்ப்பந்தல் போடுபவன் போல.
2434. வாயைக் கேட்டுக் கொண்டு யாரும் சாப்பிடுவதில்லை போல்.
2435. வாய்வுக் கோளாறு உள்ளவனுக்கு நெஞ்சிலே எரிச்சல் வருவது போல.

2436. வாய் ஊமையானாலும், உணவைக் கண்டவுடன் வாயைத் திறப்பது போல,

2437. வாரிசு இல்லை என்பதற்காக நிலம் போய் விடாது போல்;

2438. வாலில்லாத குரங்கு போல.

2439. வாலறுந்த நரி போல.

2440 வாழுகிற பெண்ணைத் தாயார் கொடுத்தது போல.

2441. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல.

2442, வாழை மேலே குளிர்ந்து உள்ளே வெப்பம் காட்டுவது போல.

2443 வாழ்வும் தாழ்வும் மாறி மாறி வருவது போல.

2444. வாழ்கிறதும் தாழ்கிறதும் வண்டி உருளை போல.

2445. வாழ்க்கை கொடுத்தவன் கையில் வாழ்நாள் அடைக்கலம் போல்.

2446. வாழ்க்கைப் படுகிறதை நம்பி. அபசாரி ஆடுகிறதும் கெட்டது போல.

2447. வாழா வெட்டிப் பெண்ணுக்கு மையும் பொட்டும் தேவைப்படாதன போல

2448. வாழும் மகனுக்கு வர்ணத் தடுக்கு, கெட்டவனுக்குக் கிழிந்த தடுக்கு போல்.

2449. வானத்தின் மீனுக்கு வன் தூண்டிலிட்ட வகையது போல்.

2450. வானத்தின் மீனைக் கணக்கிடுதல் போல;

2451. வானோர் மதியம் போல்;

2452. வான் நிழல் போல்.

2453. வானத்தை வில்லாய் வளைப்பான், மணலைக் கயிறாய்த் திரிப்பான் போல்;

## வி

2454. வித்தின்றி விளைவு செய்வது போல்.

2455. விசுவாசக்காரனுக்கு வெந்நீரும் பருக்கையும், காட்டோட்டக்காரனுக்குத் தயிரும் சோறும் போல்.

2456. விசயம் பெறும்வரை புளியங்காயாய் இருப்பவன் போல.
2457. விசயம் பெற்றவன் புளியம்பழமாய் இருப்பது போல.
2458. விசயம் பெறும்வரை புளியங்காயாய் இருப்பான் விசயம் பெற்றவுடன் புளியம்பழமாய் இருப்பான் போல்.
2459 விட்டுவிட்டுப் பெய்யும் மழையைக்காட்டிலும், விடாமல் பெய்யும் தூவானம் நல்லது போல்.
2460. விடியற்காலம் காணும் கனவு பலிப்பது போல.
2461. விடியா மூஞ்சி வேலைக்குப் போனால் வேலை அகப்பட்டாலும் கூலி அகப்படாதது போல.
2462. விண்ணினின்றும் இறங்கிய மீன் கொடி போல.
2463. விண்மீன் நடுவிற் செல்லுந் தண்மதி போல.
2464. விண் பொய்த்தால் மண் பொய்ப்பது போல.
2465. வித்துக்கு விட்ட சுரைக்காய் போல.
2466. விதைக்கோட்டையிலே எலியை வைத்துக் கட்டியது போல.
2467. வித்து ஒன்று போடச் செடி வேறொன்று முளைக்க மாட்டாது போல.
2468. வித்தைக்காரப் பெண்பிள்ளை செத்த பாம்பை ஆட்டுகிறான் போல்.
2469. விதைப்புக்கு முன் வேலி அடைப்பது போல.
2470. விதைத்துவிடு முன்னே, விளைவைப் பார் பின்னே போல்.
2471. வியாழ நோக்கம் வந்தால் கல்யாணம் முடியும் போல்.
2472. விரிதலைப் பேய் போல.
2473. விரிவெயிலில் விளக்கொளி போல.
2474. விலங்கை விட்டுத் தொழுவில் மாட்டிக் கொண்டது போல.
2475. வில் இல்லாதவன் அம்பு தேடுவது போல.
2476. விலாங்கு மீனைப் போல.

2477. விழலுக்கிறைத்த நீர் போல.
2478. விழுகிற சுவரிலே கை வைத்தாற் போல.
2479. விழுகிற பிள்ளைக்கு அரிவாள் அண்டை கொடுத்தாற் போல.
2480. விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல.
2481. விழுப்புண்ணுக்குப் பயப்படுகிறவன் போர்முனைக்கு வரக்கூடாது போல.
2482. விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறு போல.
2483. விளக்கிலா இடத்தில் வெளிச்சம் இராதது போல.
2484. விளக்கிலே மொய்த்த விட்டில் போல.
2485. விளக்கின் முன் இருள் போல.
2486. விளக்கு நெய் தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தது போல.
2487. விளக்குப் புக இருள் மாய்ந்தது போல.
2488. விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சம் கட்டியது போல.
2489. விளக்கொளிக்கு ஆசைப்பட்ட விட்டில் போல.
2490. விளையாட்டுச் சண்டை வினைச் சண்டையானது போல.
2491. விளையும் பயிர் முளையிலே தெரிவது போல.
2492. விளையாட்டுப் பண்டம் வீடு வந்து சேராது போல.
2493. விளைவது அரிசியானாலும், உமி போனால் விளையாது போல.
2494. விளைந்த கதிர் வணங்கும் போல.
2495. விளக்கு இருக்க நெருப்புக்கு அலைவது போல.
2496. வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினையறுப்பான் போல.
2497. வினை விதைத்தவன் வினையறுப்பது போல.

வீ

2498. வீட்டைக் கட்டிக் குரங்கைக் குடி வைத்தது போல.
2499. வீடு அசையாமல் தின்னுவது போல.

நூலகம்
யாழ்ப்பாணம்

2500. வீடு பற்றி எரியும் போது சுருட்டுக்கு நெருப்புக் கேட்டவன் போல்.

2501 வீட்டுக்கு ஒரு வாசற்படி போல்.

2502. வீட்டிற்குள் கஞ்சியைக் குடித்துவிட்டு, வெளியே மீசையில் வெண்ணெய் தடவிக் கொண்டு போகிறது போல.

2503. வீட்டுப் பாம்பு காட்டிற்குப் போனால், அதுவும் காட்டுப் பாம்பாகும் போல்.

2504. வீட்டைக் கொழுத்தி வேடிக்கை பார்க்கிறது போல.

2505. வீடுபற்றி எரியும் போது, ஒருவன் வீணை வாசித்துக் கொண்டிருந்தவன் போல்.

2506. வீடு கட்ட முன் கிணறு வெட்டுவது போல.

2507. வீடு கட்ட முன் கிணறு வெட்டாதது போல.

2508. வீடுபற்றி எரியும் போது கிணறு வெட்ட நல்ல நாள் பார்த்திருப்பவனைப் போல.

2509. வீணை கோணினாலும் நாதம் கோணாதது போல.

2510. வீதியில் போகிற வம்பை விலைக்கு வாங்கியது போல.

## வெ

2511. வெங்காயச் சருகு போல.

2512. வெட்டு ஒன்று துண்டு இரண்டு போல்.

2513. வெட்டிக்கு இறைத்து விழலுக்குத் தண்ணீர் கட்டியது போல.

2514. வெட்டின இடத்தில் சலம் ஊறும் போல்.

2515. வெட்டினவனுக்கு ஒரு தோணி, வீணனுக்குப் பல தோணி போல்

2516. வெண்கலக் கடையில் மதயானை புகுந்தது போல.

2517. வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைபவன் போல.

2518. வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்தது போல.

2519. வெண்ணெய் திருடித் தின்னும் போது பூனை தன் கண்களை மூடிக் கொள்வது போல.

48580

2520. வெந்த புண்ணில் வேலெறிந்தாற் போல.
2521. வெந்நீரால் சூடுகண்ட பூனை, தண்ணீரைக் கண்டாலும் பயப்படும் போல்.
2522. வெந்த மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது போல.
2523. வெந்தால் தெரியும் வெங்காய மணம் போல்.
2524. வெயிலில் பட்ட புழுப்போல.
2525. வெய்யோன் வெயில்முன் எரிதீபம் போல்;
2526. வெயில் இருக்கும் போதே வைக்கோலைக் காயப் போடுவது போல.
2527. வெல்லப்பானையை எறும்பு மொய்த்தது போல.
2528. வெல்லப்பேச்சு சொல்லுக்கு அசையாது போல்.
2529. வெல்லம் சாப்பிடுகிறவன் ஒருவன், விரலைச் சூப்புகிறவன் வேறொருவன் போல்,
2530. வெள்ளம் வரமுன் அணை போடுவது போல.
2531. வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை போல்.
2532. வெள்ளிடை மலை போல;
2533. வெள்ளத் தடுத்தல் அரிதே போல்.
2534. வெள்ளிவெண் குடத்துப்பால் சொரிவது போல.
2535. வெள்ளம் பள்ளத்தை நாடும் போல்.
2536. வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் தண்ணீர் போல்.
2537. வெள்ளை வேட்டியிலே பட்ட கறை வெளிச்சம் இன்றித் தெரியும் போல்;
2538. வெள்ளைச் சேலையில் எந்தச் சாயத்தை வேண்டுமானாலும் ஏற்றலாம் போல்.
2539. வெள்ளாடு தன்னோடை போல்.
2540. வெளுத்தது எல்லாம் பாலல்ல போல்.
2541. வெறுங்கையில் முழம் போடும் வேலையினா வினைஞன் [போல்.
2542. வெறுவாய் மெல்லுபவருக்கு அவல் அகப்பட்டது போல்.
2543. வெற்றிலைக்குத் தண்ணீரும், வேசிக்கு மஞ்சளும் போல.
2544. வெறும் பகட்டுக்கு வண்ணான் மாற்று போல்.

2545. வெறும் பானை பொங்கமாட்டாதது போல.

2546. வெற்றோசை இடும் மணி போல்.

## வே

2547. வேகிற வீட்டில் பிடுங்கினது இலாபம் போல்.

2548. வேக நேரமிருந்தாலும் சாக நேரம் இல்லை போல்.

2549. வேகாத சோற்றுக்கு விருந்தாளி இரண்டுபேர் போல்.

2550. வேசி ஆடினால் காசு, வெள்ளாட்டி ஆடினால் சவுக்கு போல்.

2551. வேசிக்கு காசு மேலேதான் ஆசை போல்.

2552. வேடருக்குத் தேன் பஞ்சமில்லாதது போல.

2553. வேடன் வீட்டுப் பிள்ளைக்கு இறைச்சி அரிது இல்லை போல்.

2554. வேட்டி கிழிந்து போனால் கோவணம் போல்.

2555. வேடர் கையில் அகப்பட்ட தேன் கூண்டு போல.

2556. வேட்டை பார்க்கப் போய் வில்லங்கத்தில் மாட்டிக் கொண்டது போல.

2557. வேடிக்கைக் காரியம் வினையாய் முடிந்தது போல.

2558. வேண்டாப் பெண்டாட்டி கைபட்டாற் குற்றம் கால் பட்டாற் குற்றம் போல்.

2559. வேண்டும் என்று நாற்றால் வெண்டைய் போல நாறிகலாம் போல்.

2560. வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது போல.

2561. வேந்தன் சீறில், வேறு துணை கிடையாதது போல.

2562. வேப்பெண்ணெயும் மருந்தாக உதவும் போல்.

2563. வேம்பும் கரும்பு ஆகும், வெற்றிலையும் நஞ்சாகும் போல்.

2564. வேர் நின்றால் மரம் நிற்கும் போல்.

2565. வேரைக் கல்லி வெந்நீர் வார்த்தாற் போல.

2566. வேர் இல்லாமல் பழம் பழுக்காது போல்.


2567. வேலியே பயிரை மேய்ந்தாற் போல.

2568. வேல் தொளைத்த புண்ணிலே கொள்ளிக்கட்டையைச் செருகினது போல்.

2569. வேலிக்குப் போட்ட முள் காலுக்கு வினையாயிற்று போல.
2570. வேலைக்கள்ளிக்குப் பிள்ளை மேல் சாக்கு போல.
2571. வேலை செய்யாத பிள்ளையைக் கையில் வைத்திருப்பது போல.
2572. வேலையைப் பார்த்துக் கூலியைக் கொடுப்பது போல.
2573. வேலி பயிரைக் காக்கும் போல.
2574. வேலி பயிரை மேய்ந்தாற் போல.
2575. வேலையைப் பார்த்துப் பெண்ணைக் கொள்ளல் போல.
2576. வேழம் முழங்கினாற் போல.
2577. வேழத்திற் பட்டுருவுங் கோல் பஞ்சிற் பாயாதது போல.
2578. வேள்விக் கொலைக்கு வரும் ஆட்டின் மனம் போல.
2579. வேனில் காலத்திற்கு விசிறி போல.

### வை

2580. வைக்கத் தெரியாமல் வைக்கற் போரில் வைத்தவன் போல
2581. வைக்கோற் போரை நாய் காத்தது போல.
2582. வைக்கோற் பட்டடை நாய் போல.
2583. வைக்கோற் கட்டுக்காரனை ஒப்புக்குக் கட்டி அழுதாற் போல.
2584. வைக்கோற் கூளமும் வேலைக்கு உதவும் போல.
2585. வைத்தவன் எடுக்கவேண்டும், வழி தெரிந்தவன் போகவேண்டும் போல.
2586. வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை போல
2587. வையத் திறந்தாரை எண்ணிக் கொண்டற்று போல.
2588. வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும் போல.



திருக்கணித அச்சகம்
மட்டுவில்.